Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :230 ஆடி 01ஆம் நாள் வியாழக்கிழமை 16 ஜூலை 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## ராஜபக்சக்களுக்குப் பணிந்து தேர்தலை நடத்த வேண்டாம்!

*உடன் ஒத்திவையுங்கள் என்று சஜித் பிரேமதாச வலியுறுத்தல்*

கொழும்பு, ஜூலை 16

கொரோனா வைரஸ் மீண்டும் சமூகத்துக்குள் ஊடுருவி விட்டது என்பதை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரான இராணுவத் தளபதியே ஒப்புக்கொண்டுவிட்டார். கந்தகாடு போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையத்தில் பணியாற்றுபவர்கள் விடுமுறையில் வீடுகளுக்குச் சென்றதால் கொரோனா மீண்டும் சமூகத்துக்குள் ஊடுருவியுள்ளது என்று இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். எனவே, எதிரணியினரின் கருத்துக்களைப் புறந்தள்ளியுள்ள அரசும்,

27

## பெப்ரவரி மின்கட்டணமே மார்ச், ஏப்ரலிலும் அறவீடு

கொழும்பு, ஜூலை 16

மின் பாவனையாளர்களிடம் பெப்ரவரி மாத மின் பட்டியலில் வந்துள்ள கட்டணத்தையே மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களின் மின்சார கட்டணங்களாகவும் அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவிப்பை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர வெளியிட்டுள்ளார்.

மூன்று மாதங்களுக்குமான மின் கட்டணங்களைச் செலுத்த மேலதிகமாக இரு மாதங்கள் சலுகைக் காலமும் வழங்கப்பட்டுள்ளது.

26

## இரண்டாம் அலை ஏற்பட்டால் ஊரடங்கு மீண்டும் நடைமுறை

*எச்சரிக்கிறார் அனில் ஜாசிங்க*

கொழும்பு, ஜூலை 16

'கொரோனா' வைரஸ் வேகமாக பரவினால் ஊரடங்கு பிறப்பிக்க வேண்டிய நிலை ஏற்படக்கூடும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவக் கலாநிதி அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் தற்போதைய சூழ்நிலையின் பிரகாரம் ஊர

27

# இரண்டாம் அலை இல்லவேயில்லை!

*அடித்துச் சொல்கிறார் இராணுவத் தளபதி*

கொழும்பு, ஜூலை 16

நாட்டில் தற்பொழுது கொரோனா இரண்டாவது அலை நிலை இல்லை. இரண்டாம் அலையை இதுவரையில் பிரகடனப்படுத்தக்கூடிய நிலை நாட்டில் காணப்படவில்லை. இவ்வாறு இராணுவ தளபதியும் கொவிட் தொற்று பரவலைத் தடுப்பதற்கான மத்திய செயற்பாட்டு நிலையத்தின் பொறுப்பாளருமான லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

27



## யாழ்ப்பாணத்திலேயே கூடியளவு வாக்களிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

தபால்மூல வாக்களிப்பில் கடந்த மூன்று நாள்களில் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிகளவானோர் வாக்களித்துள்ளனர்.

'கடந்த 13ஆம் திகதி 95.62 சதவீதத்தினரும், நேற்றுமுன்தினம் மற்றும் நேற்றைய தினங்களில் 97.92 சதவீதத்தினரும் வாக்களித்துள்ளனர்' என்று யாழ்ப்பாண மாவட்ட உத

26

### கிளிநொச்சி வளாக மாணவர்கள்

## வெளியேறத் தடை நடமாட முடியும்

கிளிநொச்சி, ஜூலை 16

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக விவசாயம் மற்றும் தொழில்நுட்ப பீடங்களின் விடுதிகளிலுள்ள இறுதி ஆண்டு மாணவர்கள் சகலரும் வளாகத்துக்குள் நடமாட முடியும். எனினும், பரீட்சைகள் நிறைவடையும் நாள்வரை வளாகத்தைவிட்டு வெளியேற முடியாது என்று மத்திய சுகாதார அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, இந்த வளாகத்திலுள்ள விவசாயம், பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பீடங்களின் பரீட்சை நடவடிக்கைகள் இன்று வழமைக்குத் திரும்பும் என்று வளாகத்துக்குப் பொறுப்பான பிரதிப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

தொழில்நுட்ப பீடத்தில் கற்கும் மாணவிக்கு கொரோனாத் தொற்று ஏற்படவில்லை என்

26

## சைக்கிளால் சிக்கல்!

யாழ்ப்பாணம், ஜூலை 16

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக நேற்று இரண்டு முறைப்பாடுகள், யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் பரப்புரையின்போது தமது கட்சிச் சின்னமான சைக்கிளை மிகப் பிரமாண்டமான அளவில் செய்து ஊர்வலமாக அதைக் காட்சிப்படுத்திச் செல்வதாக நேற்றையதினம் இரண்டு முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, சைக்கிள் சின்னம் பிர

26

## தொண்டமனாறு கொள்ளை: சந்தேகநபர்கள் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 16

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்தின் அருகில் உள்ள வீடொன்றில் கடந்த 8ஆம் திகதி 5 லட்சம் ரூபா பெறுமதியான நகையும், 25 ஆயிரம் ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டிருந்த நிலையில், இந்தக் கொள்ளையுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

26

### சுகாதாரப் பரிந்துரைகள் தொடர்பான

## வர்த்தமானி தாமதம் அரசுமீது அதிருப்தி!

கொழும்பு, ஜூலை 16

தேர்தல் தொடர்பான சுகாதார பரிந்துரைகளை வர்த்தமானிப்படுத்துவது தொடர்பாக அரசு தொடர்ந்தும் மௌனம் காத்துவருகின்றமை கவலையளிக்கின்றது. இதுதொடர்பாக ஜனாதிபதி தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டிஆராச்சி தெரிவித்தார்.

பவ்ரல் அமைப்பால் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் கொரானோ தொற்று மீண்டும் தலைதூக்கி வருகின்ற

27

## உங்கள் இடங்களிலேயே பிதிர்க்கடன் செலுத்துங்கள்

*கீரிமலை மெய்கண்டார் ஆதீனம் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜூலை 16

ஆடி அமாவாசை பிதிர்க் கடனுக்காக ஒரே இடத்தில் ஒன்று கூடுவதைத்தவிர்த்து உங்களுக்கு அருகிலுள்ள கோவிலில் ஒரே நேரத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையில், தனியாள் இடைவெளியுடன் குருமார்களுக்கோ ஏழைகளுக்கோ தானங்களை வழங்கி முன்னோரை நினைவு கூருங்கள். அமரத்துவம் அடைந்த தந்தையருக்காக வீட்டிலிருந்தவாறே இறைவனை மெய்யுருகிப் பிரார்த்திப்போம்.

இவ்வாறு, ஆடி அமாவாசையையொட்டி கீரி

26

### சங்குப்பிட்டி விபத்து

## காயமடைந்தவர் உயிரிழந்தார்!

கொடிகாமம், ஜூலை 16

சங்குப்பிட்டி பாலத்தடியில் ஏற்பட்ட விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்

26

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அதியுச்ச அதிகாரப்பகிர்வு தமிழர்களுக்கு வேண்டும்!

## விக்கிரமபாகு அழுத்தம்



**கொழும்பு, ஜூலை 16**

**தமிழ் மக்களுக்கு அதியுச்ச அதிகாரப்பகிர்வு வழங்கப்படவேண்டும். இதனை மையப்படுத்தியதாகவே புதிய அரசமைப்பு இயற்றப்படவேண்டும் என்று நவசமசமாஜக் கட்சியின் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட வேட்பாளருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டமாகவே 13ஆவது திருத்தச்சட்டம் முன்வைக்கப்பட்டது. ஆனால், குறித்த சட்டத்தில் இருந்த அதிகாரங்கள் முழுமையாகப் பகிரப்படவில்லை. பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் தடுக்கப்பட்டன. எனவே, 13 முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாக இருக்கின்றது.

ஆனால், அதிஉச்ச அதிகாரப்பகிர்வைத் தடுப்பதற்கும், 13இல் மாற்றம் கொண்டுவருவதை இலக்காகக்கொண்டும் புதிய அரசமைப்பு இயற்றப்பட வேண்டும் என்ற கருத்து ராஜபக்ச தரப்பிலிருந்து வந்துள்ளது. இதனுடன் எம்மால் உடன்பட முடியாது.

அதிகாரங்கள் பகிரப்படவேண்டும். எந்தத் தரப்பு புதிய அரசமைப்பை இயற்றினாலும்கூட அதில் அதிகாரப் பகிர்வு உறுதிப்படுத்தப்படவேண்டும். புதிய அரசமைப்பை இயற்றுவதற்கு காலம் எடுக்குமானால் அதன் முதற்கட்டமாக 13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் - என்றார். (ஒ.5,44)

# கண்ணதாசன் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 16

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் போராளி கண்ணதாசன் நீதிமன்றுக்கு வராமலேயே வழக்கை முன்கொண்டு செல்ல வழங்கிய ஒப்புதல் கடிதம் சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றுக்கு கிடைக்காதமையால் வழக்கு எதிர்வரும் 22ஆம் திகதி வரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினரான கண்ணதாசன், கட்டாய ஆள் சேர்ப்பில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டு தொடரப்பட்ட வழக்கில் வவுனியா மேல் நீதிமன்றத்தால் ஆயுள்காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவர் மறுவாழ்வு பெற்று விடுவிக்கப்பட்ட பின்னரே இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கு கடந்த மே மாதம் 13ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் வவுனியா மேல் நீதிமன்றால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பை நியாயப்படுத்த முடியவில்லை என்றும் அதனால் மீண்டும் விசாரணை வேண்டும் என்று அன்றைய தினம் சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

ஏற்கனவே இடம்பெற்ற விசாரணையை நியாயப்படுத்த முடியவில்லை என்று சட்டமா அதிபர் திணைக்களம் ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டவர் விடுவிக்கப்பட வேண்டுமே அன்றி மீள் விசாரணைக்கு இணங்க முடியாது என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

இதேநேரம் அன்றைய தினம் குற்றவாளியும் மன்றுக்கு அழைத்து வரப்பட்டிருக்கவில்லை.

குற்றம் சாட்டப்பட்டவரையும் அழைத்து வருமாறும் மீள் விசாரணையா அல்லது விடுதலையா என்பதை அன்றைய தினம் தெரிவிப்பதாகவும் கூறி வழக்கு நேற்றுமுன்தினத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதும்கொரோனா அச்சம் காரணமாக வழக்காளி அழைத்துவரப்படவில்லை. வழக்காளி தான் மன்றுக்கு சமூகமளிக்காமலேயே தனது சார்பில் சட்டத்தரணி வழக்கை முன்கொண்டு செல்வதற்கான சம்மதக் கடிதத்தை சிறைச்சாலை அத்தியட்சகர் ஊடாக அனுப்பியபோதும் அந்தக் கடிதம் மன்றுக்கு கிட்டவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டது. இதன் காரணமாக வழக்கு எதிர்வரும் 22ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ம-ஒ.5)

# இலஞ்சம் வழங்கி வாக்குக்கேட்போர் இனவாதிகளுடனேயே கூட்டுச்சேர்வு

## சஜித் மலையகத்தில் வைத்து தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 16

பந்தையும், துடுப்பு மட்டையையும் வழங்கி வாக்குக் கேட்பவர்களை நம்ப வேண்டாம். இனவாதிகளுடன் இணைந்தே அவர் போட்டியிடுகின்றார். அத்தகையவர்களுக்கு வாக்களித்தால் மலையகத்தில் மாற்றம் ஏற்படாது. எனவே, ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன், என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடும் தமிழ் முற்போக்கு கூட்டணியினதும், தொழிலாளர் தேசிய சங்கத்தின் இளைஞர் அணியினதும், பரப்புரைக் கூட்டம் முன்னாள் அமைச்சரும், நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான பழனி திகாம்பரம் தலைமையில் ஹட்டன் டி.கே. டபிள்யூ மண்டபத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச கலந்து கொண்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மலையக மக்களுக்கு எனது தந்தையே குடியுரிமை வழங்கினார். அதன் பின்னர் வாக்குரிமையும் வழங்கப்பட்டது. ஆனால், இவற்றால் மட்டும் அம்மக்களுக்கு நிம்மதியாக வாழ முடியாது. தனக்கென காணி, வீடு அவசியம். கல்வி மற்றும் சுகாதாரத்துறைகள் மேம்பட வேண்டும். இவை நடைபெற்றால் மாத்திரமே மலையக மக்கள் சுதந்திரமாக வாழ்கின்றனர் என நம்பக்கூடியதாக இருக்கும்.

அத்துடன், பெருந்தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்கி, வருமானம் உழைக்கக் கூடிய வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். அப்போதுதான் மாற்றத்தை நோக்கி பயணிக்கக்கூடியதாக இருக்கும். ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியின்கீழ் மலையகத்துக்கு அமைச்சுப் பதவி மட்டுமல்ல பெருந்தோட்ட மக்களின் நலன்புரி, அபிவிருத்தி உட்பட இதர கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக விசேட செயலணியொன்றும் அமைக்கப்படும். அது பிரதம அமைச்சரின் கண்காணிப் பின்கீழ் செயற்படும். திகாம்பரம் உள்ளிட்டவர்களும் அதில் இருப்பார்கள்.

மட்டை, பந்து மற்றும் பிஸ்கட்டுகளை வழங்கிவிட்டு வாக்குப்பெறலாம் என சிலர் நினைக்கின்றனர். இலங்கை கிரிக்கெட் வீரரை அவமதித்த வேட்பாளர் அங்கம் வகிக்கும் இனவாத கூட்டணியிலேயே இவர்களும் போட்டியிடுகின்றனர். அவருக்கு வாக்களிப்பதால் மலையகத்தில் மாற்றம் வரப்போவதில்லை. எனவே, ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர்களை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இந்த அரசிடம் பொருளாதார திட்டங்கள் இல்லை. மக்கள் மீது சுமைகள் திணிக்கப்பட்டுள்ளன. நாம் ஆட்சிக்கு வந்ததும் 20 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்பதுடன், உடனடியாக எரிபொருள் விலையும் குறைக்கப்படும் - என்றார் (ம-ஒ.5)



# கடற்படைக்கு புதிய தளபதி

கொழும்பு, ஜூலை 16

புதிய கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரல் நிஷாந்தா உலுகெடென்ன நேற்று நியமிக்கப்பட்டார்.

இலங்கை கடற்படையின் தலைமைப் பணியாளராக இவர் பணியாற்றினார். கொழும்பு ரோயல் கல்லூரி மாணவனான இவர், 1985ஆம் ஆண்டில் கடற்படை மற்றும் கடல்சார் அக்கடமியில் 13ஆவது பயிற்சி அணியின் கடேட் அதிகாரியாக இலங்கை கடற்படையில் சேர்ந்தார். திருகோணமலை கடற்படை மற்றும் கடல்சார் அக்கடமியில் தனது அடிப்படை பயிற்சியைப் பெற்றார். இரண்டு வருட பயிற்சியை முடித்து, 1987ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் திகதி துணை லெப்டினெண்டாக நியமிக்கப்பட்டார். இதேவேளை கடற்படை தளபதி அட்மிரல் பியால் டி சில்வா நேற்று ஓய்வுபெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# ரயில் மோதி ஒருவர் சாவு

சாவகச்சேரி, ஜூலை 16

ரயில் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் அடையாளம் காணப்படாதபோதும், அவரிடமிருந்து குருநாகல் கனேமுல்ல பிரதேசத்தில் மருந்து வாங்கியதற்கான பற்றுச்சீட்டு மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயில் சாவகச்சேரி சந்தைக்குப் பின்புறமாகவுள்ள பகுதியில் வைத்து நேற்றுக் காலை 10 மணியளவில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் தபால் ரயிலில் நேற்றுக் காலை நாவற்குழிக்கு வந்திறங்கி அங்கிருந்து கொழும்பு சென்ற ரயிலில் சாவகச்சேரியை வந்தடைந்தவர் என்றும், சாவகச்சேரி ரயில் நிலையத்தில் கொழும்புக்கான அடுத்த ரயில் எப்போது வரும் என்று விசாரித்தவர் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இவர் தற்கொலை செய்து கொண்டாரா அல்லது தண்டவாளத்தை கடக்க முற்பட்டபோது ரயில் மோதி உயிரிழந்தாரா என்பது இதுவரை கண்டறியப்படவில்லை. (ஒ.5.9)

# யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

## நாடாளுமன்றத் தேர்தல் - 2020

எங்கள் தேசம் எங்கள் சுவாசம்
எங்கள் எழுச்சி வாக்குப் புரட்சி
தமிழ் தேசத்தின் விடியலுக்காய்
உங்கள் கைகளில் உங்கள் தேசம்
இளைஞர்களே யுவதிகளே
வருங்கால சந்ததிகளே
உங்கள் எதிர்காலம் உங்கள் கைகளில்
விழித்தெழுவோம் காத்திடுவோம்
எங்கள் தமிழ்த் தேசத்தைக் கட்டி எழுப்புவோம்.



## பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம் (விண்ணன்)

X 5

## உண்மைகள் யாவும் அம்பலத்திற்கு....

# சிங்கள பௌத்தத்துக்கு எதிரானோரை கொலை செய்யவும் தயங்கமாட்டேன்

## மேர்வின் சில்வா தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 16**

**சிங்கள பௌத்தத்துக்கு எதிரான பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுவோரை ஒட்டுமொத்தமாகப் படுகொலை செய்ய நான் பின்நிற்க மாட்டேன் என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

சஹ்ரானின் தவறான செயற்பாடுகளுக்கு நாட்டின் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தினரும் பொறுப்பேற்க வேண்டியதில்லை. நான் தேர்தலில் வெற்றிபெற்றதும் தவறிழைத்தவர்கள் யாரெனக்கண்டுபிடித்து அவர்களைச் சட்டத்தின்முன் நிறுத்த நடவடிக்கை மேற்கொள்வேன்.

இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்குச் சொந்தமானது. அதனை மற்றவர்களுக்கும் நிரூபிக்க வேண்டிய அவசியம் கிடையாது .ஏனைய மதத்தவர்களுக்கு இடையூறுமேற்கொள்ளுமாறு புத்த மதம் போதித்ததில்லை. ஏனைய மதத்தவர்களுக்கு இடையூறு விளைவிப்பதை பௌத்த மதம் ஒருபோதும் ஊக்குவித்ததில்லை. ஆதிகாலத்தில் முஸ்லிம்கள் மொரோக்கோவிலிருந்து இலங்கைக்குவந்து குடியேறினார்கள். அவ்விதம் வந்தவர்கள் திருமண உறவுகள் மூலம் எமது சிங்கள பௌத்த மக்களுடன் கலந்து வாழ்ந்தனர். அந்த வகையில் அவர்கள் எமது உறவினர்களே .எதிராக எவராவது பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்களானால் நான் அவர்களை ஒட்டுமொத்தமாகப் படுகொலை செய்ய பின் நிற்கப் போவதில்லை. இனவாதத்துக்கு இந்த நாட்டில் இடமில்லை.

அதேபோன்று எம்.சி.சி.ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த முயல வேண்டாமென நான் ராஜபக்ச தரப்பினர்களை எந்தவித அச்சமுமின்றி வலியுறுத்துகின்றேன்.அதனை மீறிச் செயற்பட அவர்கள் முனைவார்களானால் பொது மக்களை ஒன்றுகூட்டி அவர்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்தவும் நான் தயங்கப்போவதில்லை.

அதேசமயம் மூன்றில் இரண்டு மடங்கு பெரும்பான்மையை பெற முயல்வதற்கு முன்னர் நாடாளுமன்றத்தின் சாதாரண பெரும்பான்மையைப் பெற முயலுமாறு சிறிலங்கா பொதுஜனபெரமுன தரப்புக்குக் கூற விரும்புகிறேன். ஏனெனில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் அவர்களால் சாதாரண பெரும்பான்மையைக் கைப்பற்ற இயலாது.ஐ.தே.கட்சிஅரசின் ஆட்சிக்காலத்தைவிட தற்போதைய அரசின் நிர்வாகத்தில் மக்களது அத்தியாவசிய பொருள்களின் விலையேற்றம் உச்சத்தைத் தொட்டு வருகின்றது. மீண்டும் ஐ.தே.கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி அரசமைத்தபின்னர் இந்த நாட்டு மக்களது அத்தியாவசியதேவைகள்யாவும் பூர்த்தி செய்யப்படும்- என்றார். (ஐ-ச)

# நல்ல அறிவு கோத்தாவுக்கு இருக்கின்றதாம்

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய நல்ல அறிவு இருக்கின்றது. இதனால் வன்னி மக்கள் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல பொதுஜன பெரமுனவைப் பலப்படுத்த வேண்டும் என அதன் வேட்பாளர் ஜனக நந்தகுமார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

வன்னி மாவட்டத்துக்கு 11 மாதங்களுக்கு முன்னரே வந்தேன். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளருக்கு அனுசரணை வழங்குவதற்காகவே வந்தேன். எனக்கு பசில் ராஜபக்ச மஹிந்த ராஜபக்ச மற்றும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆகியோர் வன்னி மாவட்டத்தைப் பொறுப்பாகத் தந்தார்கள். வன்னியில் மக்களுக்குப் பிரச்சனைகள் இருக்கின்றன. இங்குள்ள மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனால் இங்கு ஜாதி, மத, கட்சிவேறுபாடின்றிஎல்லோருடனும் இணைந்து செயற்படுகின்றோம். அதனை மக்கள் நன்றாக விளங்கி வைத்துள்ளார்கள். ஜனாதிபதியினுடைய மாபெரும் வெற்றிக்குப் பின்னர் இங்குள்ள அனைத்து மக்களும் ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என விளங்கிக் கொண்டுள்ளார்கள்.

கொரோனா காரணமாக உலகின் பல நாடுகள் அழிவைச் சந்தித்திருந்த போதும் இலங்கை ஜனாதிபதியின் சிறந்த தலைமைத்துவத்தால் தான் இதனைக் கட்டுப்படுத்த முடிந்தது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே சொல்கின்றது. கடந்த தேர்தல் காலங்களில் ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என பலர் இங்கு கவலைப்படுகிறார்கள். தற்போதுகிராமங்களில் எமக்கான ஆதரவு அதிகரித்துள்ளது. நான் கடந்த காலங்களில் இன, மத பேதமின்றி மக்களுக்கு பணியாற்றியதால் எனக்கு மக்கள் ஒத்துழைப்புதருகிறார்கள். இதனால் இம்முறை மாபெரும் வெற்றியை வன்னியில் பெறுவோம். எங்களுக்கு 3 ஆசனங்கள் இங்கு கிடைக்கும் - என்றார். (ப-18)

# கூட்டமைப்பை தோற்கடிக்கவே விக்கி அணி தேர்தலில் போட்டி

## *ஒப்புக் கொள்கிறார் அதன் வேட்பாளர்*

வெற்றி என்பது மட்டும் எங்களது குறிக்கோள் அல்ல. வெற்றி அடைந்தால் சேவை செய்யலாம் என்பது மட்டும் குறிக்கோள் அல்ல. நாங்கள் வெற்றி அடைகின்றோமோ இல்லையோ அதற்கு அப்பால் மக்களுக்கு தீமை செய்கின்ற பொருத்தமில்லாத அரசியல் வாதிகளை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்பதும் எங்கள் கொள்கையாக இருக்கின்றது என்று முன்னாள் வடமாகாண அமைச்சரும், தமிழ்மக்கள்தேசியக்கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளருமான ஜீ.குணசீலன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மக்கள் இம்முறை தனிமைபடுத்த வேண்டும். அவர்கள் முற்றாகக் குணமடைந்து சீரடைந்து திருந்தி வரும் வரைக்கும் அவர்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும். எங்களுடைய மக்கள் அதற்குரிய முடிவை இம்முறை கட்பாயம்எடுக்கவேண்டும். தற்போதையசூழ்நிலையில் நம் சமூகத்துக்கு ஒவ்வாத விடயம் வரும் போது அவற்றை ஒதுக்கி வைக்கின்றோம். அதில் இருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று சிந்திக்கின்றோம். உண்மையிலேயே இப்போதும் அதே நிலமை தான். உதாரணமாக 'கொரொனா' வந்து விட்டது. எவ்வளவு முற்பாது காப்பு நடவடிக்கையை நாம் மேற்கொள்கின்றோம். இப்போது புதிதாக ஒரு 'கொரோனா' வந்துள்ளது. வீட்டுக்குள் கொரோனா வந்துள்ளது . வீட்டைச் சேர்ந்தவர்களுக்கு கொரோனா வந்துள்ளது. ஆகவே நாம் இந்த முறை அவர்களைத் தனிமைப்படுத்த வேண்டிய அவசியம் எங்களுக்கு இருக்கின்றது. இம்முறை கூட்டமைப்பு வீட்டுடன் தனிமைப்படுத்தப்படவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மக்கள் இம்முறை தனிமைப்படுத்த வேண்டும். அவர்கள் முற்றாகக் குணமடைந்து சீரடைந்து திருந்தி வரும் வரைக்கும் அவர்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும். எங்களுடைய மக்கள் அதற்குரிய முடிவை இம்முறை கட்டாயம் எடுக்க வேண்டும் என்பதுதான் எனது கோரிக்கை -என்றார். (ப)

# கொரோனாவைக் காரணம் காட்டி அரசைப் பலவீனப்படுத்த முடியாது

## முன்னாள் எம்.பி செஷான் சேமசிங்க

கொழும்பு, ஜூலை 16

கொவிட் 19 வைரஸ் பரலல்ல தேர்தல் பிரசாரமாகக் கொண்டு, அரசாங்கத்தை எவராலும் பலவீனப்படுத்த முடியாது. நெருக்கடியான நிலையில் குறுகிய அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்த் தரப்பினர் முன்னெடுக்கும் தேர்தல் பிரசாரங்கள் வெறுக்கத்தக்கவை. பொது மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த அரசாங்கம் அதிக கவனம் செலுத்தும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செஷான் சேமசிங்க தெரிவித்தார்.




இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொவிட் 19 வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதன் பின்னரே தேர்தல் ஆணைக்குழு பொதுத்தேர்தலுக்கான திகதியை அறிவித்தது. சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, பிரசாரக் கூட்டங்கள் பாதுகாப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டன. வைரஸ் பரவலைக் காரணம் காட்டி, எதிர்த் தரப்பினர் அரசாங்கத்தைப் பலவீனப்படுத்த முடியற்சிக்கிறார்கள். நெருக்கடியான நிலையில் குறுகிய அரசியல் நோக்கங்களைக் கொண்டு அரசியல் இலாபம் தேடிக் கொள்வது வெறுக்கத்தக்கது. அரசியல் ரீதியில் பெரும்பான்மையின மக்கள் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் எடுத்த தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் பொதுத்தேர்தலில் ஏற்படாது - என்றார். (ப)

# பெரமுன சு.கா. ஆட்சியமைத்தால் சில நாள்களிலேயே ஆட்சி கவிழும்

## லக்ஸ்மன் கிரியெல்ல கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 16

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், பொதுஜன முன்னணிக்கும் இடையில் மறைமுகப் போர் இடம்பெற்று வருகின்றது, அவர்கள் ஆட்சியமைத்தால் சொற்ப நாள்களிலேயே ஆட்சி வீழ்ந்துவிடும் என முன்னாள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் தற்போது உள்ளகப் போர் ஒன்று இடம்பெற்று வருகின்றது. இந்த இரண்டு அணியினரும் பொதுத் தேர்தலின் பின்னர் ஆட்சி அமைத்தால் சொற்ப நாள்களிலேயே பிளவடைந்துவிடுவார்கள் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இப்படியானவர்களுக்கு எவ்வாறு வாக்களிப்பது என்பதையும் மக்கள் சிந்திக்க வேண்டும். எவ்வாறாயினும் ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாங்கள் தனித்து எமது பயணத்தை முன்னெடுப்போம். ஐக்கிய தேசியக் கட்சியுடன் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர்கள் தனித்து தங்களது பிரசாரங்களை முன்னெடுக்கின்றார்கள். நாங்களும் தனித்தே செயற்படுகின்றோம். ஐக்கிய தேசியக் கட்சியுடன் நாங்கள் எதிர்காலத்தில் இணைவதா என்பது குறித்துசிந்தித்துக்கூடப் பார்க்கவில்லை. நாட்டில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வரும் நிலையில் அரசாங்கம் அவசரமாக 4ஹெலிகொப்டர்களைக் கொள்வனவு செய்ய முயற்சித்து வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது- என்றார்.

(ப)

# ஐ.தே.கவின் ஒரு பிரிவாக தமிழரசை மாற்ற முயற்சி

## சாடுகிறார் சிவாஜி

யாழ்ப்பாணம், ஜூலை 16

ரணில் விக்கரமசிங்கவின், சிங்கள பௌத்த நிகழ்ச்சி நிரலை செயற்படுத்தவே சுமந்திரன் இருக்கிறார். தமிழ் தேசியக் கூட்டமைப்பையும் தமிழ் அரசுக் கட்சியையும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரிவாக மாற்றுவதுதான் அவரது நடவடிக்கை. வடக்கு மாகாண சபையில் இனப்படுகொலை தீர்மானத்துக்கு எதிராக சுமந்திரன் எழுதிய கடிதம் இப்பொழுதும் என்னிடமுள்ளது இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறையில் நேற்று நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த நாலரை ஆண்டுகள் அரசுக்கு ஆதரவைக் கொடுத்து என்ன செய்தீர்கள்? நூறு அரசியல் கைதிகளையாவது விடுவித்தீர்களா? காணிகளை விடுவித்தீர்களா? என்ன செய்தீர்கள். ஒரு தொலைக்காட்சியில் சுமந்திரனின் விளம்பரத்தைப் பார்த்தேன். சர்வதேச குற்றங்களிற்காக வாதாடினாராம். சர்வதேச குற்றங்களில் இனப்படுகொலையும் ஒன்று என்பது சுமந்திரனுக்கு தெரியாதா? ஏன் நீங்கள் இனப்படுகொலைக்காக வாதாடவில்லை? போராடவில்லை? போராட முற்பட்ட எங்களையும் நசுக்கினீர்கள்.

ரணில் விக்கிரமசிங்கவின், சிங்கள பௌத்த நிகழ்ச்சி நிரலை செயற்படுத்தவே சுமந்திரன் இருக்கிறார். தமிழ் தேசியக் கூட்டமைப்பையும் தமிழ் அரசு கட்சியையும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரிவாக மாற்றுவதுதான் அவரது நடவடிக்கை.

2009ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அமெரிக்காவும், கனடாவும் மேற்கொண்ட சர்வதேச சமரச முயற்சியை நீங்கள் முறியடித்ததை பற்றி உங்களால் வாய்திறக்க முடியுமா சம்பந்தன் ஐயா?; 72 மணித்தியாலங்களில் அமெரிக்காவும் கனடாவும் இணைந்து போர்நிறுத்தத்தை நடைமுறைப்படுத்துவதாகச் சொன்னார்கள். அது நடந்திருந்தால் இவ்வளவு மக்கள் கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள். அவர்கள் வைத்த நிபந்தனை, இந்தத் திட்டத்துக்கு சம்மதமென புலிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குச் சொல்ல வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கனடாவுக்குச் சொல்ல வேண்டும். இங்கிலாந்து நாடாளுமன்றம் முன்பாக போராட்டத்தில் இருந்தபோது, கனடாவிலுள்ள சட்டத்தரணி கரிகாலன் தொலைபேசியில் சொன்னார். நான் உடனே வன்னியில் நடேசனுக்குத் தெரிவித்தேன். பின்னர் தொடர்புகொண்ட நடேசன், தலைவருடன் பேசிவிட்டேன், நாங்கள் தயார், சம்பந்தனிடம் சொல்லுங்கள் என்றார். நாங்கள் சொன்னால் அவர் தட்டிக்கழிப்பார், நீங்களே இதைச் சொல்லுங்கள் என்று, சம்பந்தனின் இந்தியா வீட்டு தொலைபேசி இலக்கத்தை வழங்கினேன். இதற்காக கனடா நியமித்த பிரதிநிதியுடன் அவர் ஓடிப்பிடித்து விளையாடினார். ஐயா அசையவில்லை. ஐயா இருந்தார், அவ்வளவு பேர் உயிரிழந்தார்கள்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 70ஆவது ஆண்டு விழாவில் சம்பந்தன் உரையாற்றியபோது, இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டது நல்ல விடயமாக இருக்கலாம் என்றார். ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்ததை போராளிகள் உயிரிழந்ததை, பெண்கள் மானபங்கப்படுத்தியதை நல்லதென்கிறீர்களா? பதில் என்ன? விடுதலைப்புலிகளின் சித்தாந்தத்தை ஏற்றுக் கொள்ளவில்லையென சிங்கள தொலைக்காட்சியொன்றிற்கு சுமந்திரன் சொல்லியிருந்தார். அதே தொலைக்காட்சியில் நானும் பேட்டியளித்துள்ளேன். தலைவர் பிரபாகரன் ஒரு வன்முறையாளரா பயங்கரவாதியா என சிங்களத்தில் கேட்டபோது, நான் சொன்னேன் அவர் பயங்கரவாதியல்ல, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் தலைவர், வீரன் என்று சொன்னேன். அடுத்த கேள்வி சுமந்திரனை பற்றி கேட்டார். சுமந்திரன் ஒரு துரோகி என பதிலளித்துள்ளேன்.

இன்று சிறிதரனும், சுமந்திரனும் இரட்டைக்குழல் துப்பாக்கி மாதிரி வாக்குச் சேர்க்கிறார்கள். இதே சிறிதரன் 2015ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான கூட்டத்தில், சரணடைந்த 12 ஆயிரம் போராளிகளும் சயனைட் கடித்து உயிரிழந்திருக்க வேண்டும் என்றார். போராளிகள் சயனைட் கடித்து இறந்திருக்க வேண்டுமென கூறிவிட்டு இப்பொழுது ஜனநாயக போராளிகள், அந்தப் போராளிகள் என்று வெட்கம் கெட்டு திரிகிறார்கள்.

தாயைப் பழித்தவனை, தமிழைப் பழித்தவனை தாய் தடுத்தாலும் விடோம் என்று சொன்னவர்கள், உங்களது தாயை, உங்கள் மனைவிமாரை, பிள்ளைகளை கொச்சைப்படுத்தி கேவலப்படுத்தியவர்களை துதிபாடுகிறீர்களே, வெட்கமாக இல்லையா? கடந்த ஒக்ரோபர் குழப்பத்தின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டம் இடம்பெற்றது. எமது கோரிக்கைகளை பத்திரிகைகளில் தெரிவித்து விட்டு அங்கு சென்று பேசினோம். சம்பந்தனின் வீட்டில் வெளிநாட்டுத் தூதர்களை அழைத்து பேசி, அவர்களின் மத்தியஸ்தத்தில் பேசலாமென்ற நிபந்தனையை விதிக்கக் கோரினோம். ஓமென்றார்கள். ஆனால் அந்த கடிதம் இப்பொழுது ஐயா வீட்டுக்குள் எங்கு இருக்கிறதோ அல்லது ரணில் வீட்டு குசினிக்குள் இருக்கிறதோ தெரியவில்லை - என்றார். (ஒ,5)

பாராளுமன்றத் தேர்தல் - 2020
யாழ் தேர்தல் மாவட்டம்

அன்புக்கும் மதிப்பிற்குமுரிய அரச உத்தியோகத்தர்களே!

நேர்மையும் கண்ணியமும் மிகுந்த
அனுபவமும் வெளிப்படைத்தன்மையும் கொண்ட
உங்கள் பிரதிநிதிகளை தெரிவுசெய்யுங்கள்.



6

தருமலிங்கம்
சித்தார்த்தன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)



7

பாலச்சந்திரன்
கஜதீபன்
(முன்னாள் மாகாணசபை உறுப்பினர்)

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA)





## கார்மேல் மாதா ஆலய பெருவிழா

மன்னார், ஜூலை 16
மன்னார் மறைமாவட்ட பரப்பாங்கண்டல் புனித கார்மேல் மாதா ஆலய வருடாந்தத் திருவிழா நேற்றுமுன்தினம் பங்குத் தந்தை அ.றஜனிகாந் அடிகளார் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.
திருவிழா திருப்பலியை மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி அன்ரனி விக்ரர் சோசை அடிகளார் தலைமை தாங்க உயிலங்குளம் பங்குத் தந்தை செ.அன்ரன் தவராஜா அடிகளார் மற்றும் கட்டைக்காடு பங்கு தந்தை அருட்பணி எமில் எழில்ராஜ் அடிகளார் ஆகியோர் இணைந்து ஒப்புக்கொடுத்தனர். (ஜ-60)

## மாலைதீவிலிருந்து 177 பேர் நாட்டுக்கு

மாலைதீவில் தங்கியிருந்த 177 இலங்கையர்கள் ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் நேற்று நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.
இவ்வாறு அழைத்து வரப்பட்டவர்கள் அங்குள்ள சுற்றுலா விடுதிகளில் பணியாற்றிய ஊழியர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
இவர்கள் நேற்றுப் பிற்பகல் 3.10 மணியளவில் மாலே விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு மத்தல விமான நிலையத்தை வந்தடைந்தனர். (க)

# ஒற்றையாட்சியை மையப்படுத்தியே புதிய அரசமைப்பு உருவாகும்!

### ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அறிவிப்பு

**கொழும்பு, ஜூலை 16**
**நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பில் நாட்டுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய சில விடயங்கள் அடங்கியுள்ளன. எனவே, அவற்றை இல்லாதொழித்து ஒற்றையாட்சியை அடிப்படையாகக்கொண்டே புதிய அரசமைப்பு உருவாக்கப்படும். என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் களுத்துறை மாவட்ட வேட்பாளர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.**

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பிலுள்ள அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது ஆளுங்கட்சி எதற்காக மூன்றிலிரண்டு பெரும்பான்மையை கோருகின்றது, அதனைப் பெறமுடியுமா என்று எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பு 19 தடவைகள் திருத்தப்பட்டுள்ளது. உதாரணமாக நாம் 'சேட்' ஒன்றை வாங்கியிருந்தோம். 19 தடவைகள் கிழிந்த இடங்களைத் தைத்துப் பாவித்துவிட்டோம். அவ்வாறு தைத்த இடங்களும் கிழிய ஆரம்பித்தால், புதிய 'சேட்டை' வாங்குவதே சிறந்த தேர்வாக இருக்கும்.
19 தடவைகள் திருத்தப்பட்டுள்ள எமது நாட்டு அரசமைப்பில் நாட்டுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய சில விடயங்களும் உள்ளன. அவற்றை நீக்குவதற்கும், அனைத்து இன மற்றும் மத மக்களை சமமாக வாழ வைக்கும் வகையிலுமான வேலைத்திட்டங்களை ஒற்றையாட்சிக்குள் உருவாக்குவதற்கும் புதிய அரசமைப்பு அவசியம். இதற்குத் தேவையான மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவை மக்கள் வழங்குவார்கள். இதற்கு அஞ்சியே எதிரணிகள் கூச்சலிடுகின்றன, என்றார். (ஒ.5,44)

# வர்த்தகர்களுக்கு எதிரான 162 வழக்குகளில் ரூ 542,000 தண்டம்

முல்லைத்தீவு, ஜூலை 16
முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு எதிராக கடந்த 6 மாதங்களில் தொடுக்கப்பட்ட 175 வழக்குகளில் 162 வழக்குகளின் விசாரணைகள் நிறைவு பெற்று வர்த்தகர்களிடமிருந்து தண்டப் பணமாக மொத்தம் 542,000 ரூபா அறவிடப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட இணைப்பதிகாரி ந.கிருஸ்ணகுமார் தெரிவித்துள்ளார்.
இந்த வழக்குகள் விற்பனைப் பொருட்களின் காலாவதி திகதி முடிவுற்றமை, விலைப்பட்டியலின்மை, உத்தரவாதமின்மை, இறக்குமதி விபரமின்மை, SLS தரச்சான்றுதலின்மை, கட்டுப்பாட்டு மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்தமை தொடர்பான காரணங்களுக்காக வர்த்தகர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டவையாகும். (ரி3-222)

## பிரசாரத்துக்கு சிறுவர்களைப் பயன்படுத்தத் தடை

கொழும்பு, ஜூலை 16
தேர்தல் பிரசார நடவடிக்கையில் சிறுவர்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.
தமது பிரசாரங்களுக்காக காணொலிகள், விளம்பரங்கள், சுவரொட்டிகளில் சிறுவர்களை சில வேட்பாளர்கள் பயன்படுத்தியுள்ளமை தொடர்பில் கண்காணிப்பு அமைப்புகளால் தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
அதனால், சிறுவர்களின் ஆளுமை வளர்ச்சி, மனநிலை, அடையாளம் மற்றும் அவர்களின் எதிர்காலம் என்பன மோசமாகப் பாதிக்கப்படலாமென ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (க)

## அஞ்சல் வாக்களிப்பு நிலையத்தில் ஒருவர் கைது

மொனராகலை, ஜூலை 16
மொனராகலை, தனமல்விலை இ.போ.ச. டிப்போ செயலகத்தில் அஞ்சல் வாக்கைச் செலுத்திய நபர் ஒருவர், அஞ்சல் வாக்குச் சீட்டை தொலைபேசிமூலம் ஒளிப்படம் எடுத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.
இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.
தனமல்விலை இ.போ.ச. டிப்போ பணியகத்தில் தேர்தல் கடமைகளில் ஈடுபட்டிருந்த தேர்தல் உத்தியோகத்தர்கள் மற்றும் கடமையிலிருந்த பொலிஸாரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபர், தனக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதுடன், ஒளிப்படம் எடுக்கக் கூடாதென்று தமக்குத் தெரியாதென்றும், தனக்கு மன்னிப்பு வழங்கும்படியும் வினயமாகக் கேட்டுக் கொண்டதற்கமைய, எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். (ப)



கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் கோணாவில் பிரதேசத்தில் மாலைநேரக் கல்வி நிலையத்துக்கு நேற்று அடிக்கல் நட்டு வைக்கப்பட்டது. (ஜ-214)

# கொரோனாவால் உயிரிழந்த குடும்பத்தினருக்கு காப்புறுதி

கொழும்பு, ஜூலை 16
கொரோனாத் தொற்றால் வெளிநாடுகளில் உயிரிழந்த இலங்கை தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கான காப்புறுதிப் பணத்தை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.
கொரோனாத் தொற்றினால் வெளிநாடுகளில் இதுவரை 35 இலங்கையர்கள் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பொது முகாமையாளர் வன்சேகர தெரிவித்துள்ளார். உயிரிழந்த ஒவ்வொருவரின் குடும்பத்தினருக்கும் தலா 6 இலட்சம் ரூபா காப்புறுதிவழங்கப்படுமெனவும் அவர் கூறியுள்ளார்.
வெளிநாடுகளில் உயிரிழந்த இலங்கையர்களின் இறப்புச் சான்றிதழ்கள் உள்ளிட்ட அனைத்து ஆவணங்களையும் வழங்குமாறு அந்தந்த நாடுகளின் தூதரகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பொது முகாமையாளர் வன்சேகர குறிப்பிட்டுள்ளார்.
இதுவரை 10 பேரின் இறப்புச் சான்றிதழ்கள் உள்ளிட்ட ஆவணங்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.5)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அமைச்சுப் பதவியும்

எதிர்வரும் தேர்தலின் பின்பு ஆட்சியமைக்கும் அரசாங்கத்தில் அமைச்சுப்பதவி பெறும் எண்ணம் எதுவுமே தங்களிடமில்லையெனவும், இலங்கைத் தமிழரசுக்.கட்சிக்கு அப்படியான கொள்கையே இல்லையெனவும், தேர்தல் காலத்தில் அமைச்சுப் பதவி பற்றிப் பேசவேண்டிய அவசியம் இல்லையெனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் சார்பில்போட்டியிடும்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் அண்மையில் மக்கள் சந்திப்பொன்றில் உரையாற்றும்போது, அரசியல் தீர்வு எப்போது கிடைக்குமெனச் சொல்லமுடியாதெனவும், அந்த இடைக்காலத்தில் பொருளாதாரத்தை வளர்ப்பது அவசியமெனவும், புதிய ஆட்சியில் அமைச்சரவையில் சேர்வதாக இருந்தாலும் அது தொடர்பாக பேரம் பேச எமக்குப் பலம் தேவை எனவும் குறிப்பிட்டிருந்தார்.

சந்தர்ப்பம் கிடைத்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொள்ளுமெனவும், அவை அதிகாரம் கொண்டவையாக இருக்கத்தக்க வகையில் பேரம் பேச நாம் பலமாக இருக்க வேண்டுமெனவும் கருத்து வெளிப்படும் வகையில் சுமந்திரன் தெரிவித்த விடயத்தை மறுத்தே தலைவர் இரா.சம்பந்தன் கடுந்தொனியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

ஏற்கனவே எம்.ஏ.சுமந்திரன் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் தொடர்பாக ஒரு சிங்கள ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்த கருத்துகள் தொடர்பாக தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை. சேனாதிராசா தமது கண்டனத்தைத் தெரிவித்திருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் கண்டனம் தெரிவித்திருந்தனர். சம்பந்தனும் அது சுமந்திரனின் தனிப்பட்ட கருத்து எனத் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்திருந்தார்.

அடிப்படையில் சுமந்திரன் தான்தோன்றித்தனமாக விடுதலைப் புலிகளைக் கொச்சைப்படுத்தும் வகையில் தொடர்ந்து வெளியிட்டுவரும் கருத்துகளோ, அமைச்சுப் பதவிகளை ஏற்பது போன்ற கருத்தோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைகளுக்கோ, தமிழரசுக் கட்சியின் கொள்கைகளுக்கோ உடன்பாடானவையல்ல. அவை அந்த இரண்டு அமைப்புகளினதும் எந்த ஒரு பொதுக்குழுக் கூட்டத்திலோ அல்லது மத்திய செயற்குழுக் கூட்டத்திலோ எடுக்கப்பட்ட முடிவுகளுமல்ல.

இப்படியான நடவடிக்கைகள் ஒரு அரசியல் கட்சியின் கட்டுப்பாட்டை மீறும் தான்தோன்றித்தனமானவை என்பது மட்டுமல்ல, மக்களை குழப்பத்தில் ஆழ்த்துபவையாகவும், மக்களின் கட்சி மீதான நம்பிக்கையைச் சிதைப்பவையாகவும் அமைத்துவிடும் என்பது கவனத்திலெடுக்கப்பட வேண்டும்.

ஆனால் தலைவர் சம்பந்தன் உரிய நேரத்தில் வெளியிட்ட மறுப்பறிக்கையானது, சுமந்திரனின் கருத்துகளால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை மழுங்கடித்துவிடுமென நம்ப முடியும்.

எனினும் கூட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எதிர்வரும் தேர்தலில் தோற்கடிப்பதற்கு கங்கணம் கட்டி நிற்கும் அரச சார்புக் கட்சிகளும் தமிழ் மாற்றுக் குழுக்களும் இப்படியான விடயங்களை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தயங்கப் போவதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் புனிதமான உரிமைப் போராட்டத்துக்கு தலைமை தாங்கும் பாரிய பொறுப்பு வாய்ந்த அமைப்பாகும். எனவே அதன் உறுப்பினர்கள் தமது சொந்த ஆசாபாசங்களை வெளிப்படுத்தி இந்தப் புனித அமைப்பைக் களங்கப்படுத்த அனுமதிக்கமுடியாது. இப்படியான நபர்களுக்கு மக்களே உரிய நேரத்தில் உரிய பாடத்தை வழங்குவார்கள் என்பது நிச்சயம்.

# எல்லாச் சவால்களையும் வெற்றி கொள்வோம்

### அரசு திடசங்கற்பம்



கொழும்பு, ஜூலை 16

நாடாளுமன்றத் தேர்தலை நிர்ணயிக்கப் பட்ட திகதிக்கு முற்கூட்டி ஜூலை 25ஆம் திகதி நடத்தவோ அல்லது பிற்போடவோ நெருக்கடியான சூழல் தற்போது ஏற்படவில்லை. சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் பலமாக வகுக்கப்பட்டுள்ளன. அதற்கு அமைவாக திட்டமிட்ட திகதியில் தேர்தல் நடத்தப்படும். இவ்வாறு வனஉயிரிகள் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் துறை அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா பரவலை கட்டுப்படுத்த அரசு ஆரம்பத்திலிருந்து உரிய நடவடிக்கைகளை முறையாகப் பின்பற்றி வருகிறது. தற்போது புதிதாக வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். இதனைக் கருத்திற் கொண்டு தேர்தலை பிற்போட வேண்டிய தேவை எதுவும் கிடையாது.

நெருக்கடியான சூழ்நிலையில் பொதுத்தேர்தலை எவ்வாறு நடத்துவது என்பது குறித்து தேர்தல் ஆணைக்குழு முறையான திட்டங்களை வகுத்துள்ளது.

கொரோனா பரவலை முழுமையாக இல்லாதொழித்து விட்டு பொதுத்தேர்தலுக்கு செல்லவில்லை. வைரஸ் பரவலுக்கு மத்தியிலே தேர்தலுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆகவே புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவார்கள் என்பது எதிர்பார்க்கப்பட்டதே. இந்த நெருக்கடியை எம்மால் முறையாக வெற்றிக் கொள்ள முடியும்.

தற்போதைய நிலையில் பொதுத்தேர்தலை ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதியில் நடத்தாமல் பிற்போடவோ, அல்லது அதற்கு முற்பட்ட தினத்தில் அதாவது சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலர் குறிப்பிடுவதைப் போன்று இம்மாதம் 25 ஆம் திகதியில் நடத்தவோ வேண்டிய தேவை கிடையாது. ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதியே பொதுத்தேர்தல் இடம்பெறும் - என்றார். (ஒ,5)

## முகக் கவசம் அணியாது நடமாடியோருக்கு வழக்கு

சாவகச்சேரி, ஜூலை 16

சாவகச்சேரி பொதுச்சந்தைக்குள் முகக் கவசம் அணியாமலும், முகக் கவசத்தைக் கழுத்தில் தொங்கவிட்டவாறும் நடமாடியவர்களுக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸார் நேற்று வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

சந்தைக்குள் தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளனவா என்று கண்காணிக்க வந்த பொலிஸ் நிலையத் தலைமைப் பொறுப்பதிகாரி, சந்தைக்குள் பலர் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது நடமாடியதை அவதானித்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பணித்தார். அதையடுத்துப் பொலிஸார் வழக்குப் பதிவு மேற்கொண்டுள்ளனர்.

அதேவேளை, யாழ்ப்பாணம் நகரப் பகுதியிலும் முகக் கவசம் அணியாது நடமாடியவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ 9)

## வேட்பாளர் மாரடைப்பால் உயிரிழப்பு

வவுனியா, ஜூலை 16

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் பேரவை சார்பாகப் போட்டியிடவிருந்த வேட்பாளர் ஒருவர் நேற்று மாரடைப்பால் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அகஸ்தீன் மக்டொனால்ட் (வயது-58) என்பவரே உயிரிழந்தவராவார்.

மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்த அவர் இனப்பற்றாளராகத திகழ்ந்து பல்வேறு சமூக சேவைகளை முன்னெடுத்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. அவர் நேற்றுக் காலை வீட்டில் இருந்தவேளை மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-110)

### ராகம மருத்துவமனை

## பணியாளர்களுக்கு கொரோனா இல்லை

கொழும்பு, ஜூலை 16

ராகம பிரதேசத்திலுள்ள தனியார் மருத்துவமனையொன்றின் பணியாளர்கள் 48 பேருக்கும் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனைகளில் அவர்களில் எவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்படவில்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

தனியார் மருத்துவமனையின் பணியாளர் ஒருவருக்கு கொரோனார் தொற்று உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து மருத்துவமனை வளாகத்தை தற்காலிகமாக மூடுவதற்கான தீர்மானத்தை மருத்துவமனை நிர்வாகம் நேற்றுமுன்தினம் எடுத்திருந்தது. இந்த நிலையில் அங்குள்ள பணியாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் எவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை. (ஒ,5)

# இராமன் முஸ்லிம்களின் நபி; இராவணன் முஸ்லிம் மன்னன்

## சர்ச்சையைத் தொடர்கிறார் உலமா கட்சித் தலைவர்

**கல்முனை, ஜூலை 16**

**இராவணன் ஒரு முஸ்லிம் என்பதை தெரிவித்திருப்பதற்கு காரணம் இராவணன் எனும் ஒரு தவறு செய்யும் மன்னனை திருத்துவதற்கு வந்த நபியாக இராமன் இருந்திருக்கலாம் என்று உலமா கட்சியின் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் மற்றுமொரு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளார்.**

திருக்கோனேச்சரர் ஆலயம் பௌத்தர்களுடையது என்று மேதானந்த தேரர் குறிப்பிட்ட நிலையில் அது முஸ்லிம்களுடையது என்று குறிப்பிட்டிருந்த உலமாக் கட்சியின் தலைவர் தற்போது இராமனை நபி என்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

இலங்கைத் தீவில் எந்த இனம் இந்த நாட்டின் பூர்வீக இனம் என்பதில் பல சர்ச்சைகள் அடிக்கடி எழுகின்றன. கோணேச்சர ஆலயம் பௌத்த ஆலயம் என பௌத்த தேரர் குறிப்பிட்ட கருத்தை முன்வைத்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு நான் பதில் வழங்குகையில் இராவணன் ஒரு முஸ்லிம் என்பதைத்தெரிவித்திருந்தேன். கோணேச்சர ஆலயத்தை முன்னிறுத்தும் போது அதனுடன் இராவணனின் பெயரும் சேர்த்து பேசப்படும். இராவணன் முஸ்லிம் என்பதனை நாங்கள் நம்புகின்றோம். சுமார் 2,800 ஆண்டுகளுக்கு முன்னர் விஜயன் மூலம் பௌத்த மதம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது என வரலாறு சொல்லுகின்றது. விஜயனின் வருகைக்கு முன்னர் கோணேச்சரம் ஆலயம் கட்டப்பட்டது.

விஜயனின் வருகைக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்தவர்கள் ஆதாமின் வாரிசுகள் என்பதை நம்புகின்றோம். அதனடிப்படையில் இலங்கையில் வாழ்ந்த இராவணனும் ஆதாமின் வாரிசு என்பதை தெளிவாகக் காட்டுகிறது. இராவணனின் சமாதி நாற்பது அடி என்றால் இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவராக இருக்க முடியாது. மாறாக 10 ஆயிரம் வருடங்களுக்கு முன்பே வாழ்ந்திருக்க வேண்டும். முதல் மனிதன் 60 முழம் கொண்டவனாகப் படைக்கப்பட்டான் என இஸ்லாமிய மார்க்கத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஆகவே இது முஸ்லிம் நல்லடியார்களின் சமாதி என்று முஸ்லிம்களால் பாதுகாக்கப்பட்டது.

இராமனை ரஹ்மான் என்றும் சீதா என்பதை செய்யீதா என்றும், இலக்குமணன் லுக்மான் என்றும், அனுமான் என்பது நூமான் என்றும் ஏன் இவ்வளவு ஒற்றுமை இருக்க வேண்டும். பௌத்தர்கள் இலங்கை வந்து வெறும்2,500 ஆண்டுகளே ஆகின்றன. இந்த 40 அடி சமாதி சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவனுடையதாய் தான் இருக்க வேண்டும். 2,500 ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கையில் ஆதாமின் வாரிசுகள் வாழ்ந்துள்ளனர். அதன் பிறகே விஜயன் இங்கு வந்து குவேனியைக் கரம் பிடித்தான். ஆதலால் குவேனி பௌத்த மதத்தைச் சேர்ந்தவள் இல்லை. அவள் இந்து அல்லது முஸ்லிமாக இருக்கலாம். என்னுடைய ஆய்வின்படி, அவர்கள் எல்லோரும் ஆதாமின் வாரிசுகளாவர். எனவே அவர் காலத்தில் முஸ்லிம்களின் இடமாகவே இது இருந்திருக்கும் - என்றார். (ஐ)




# மக்களைக் காட்டிக்கொடுத்து நாம் அரசியல் நடத்தவில்லை

## தலவாக்கலையில் பழனி திகாம்பரம்

தலவாக்கலை, ஜூலை 16

மலையக மக்களைக் காட்டிக்கொடுத்துவிட்டு சுகபோகத்துக்காக நாம் அரசியல் நடத்தவில்லை. மலையகத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காகவே அரசியல் நடத்துகின்றோம். எனவே, எமக்கான ஆதரவை வழங்கவேண்டியது மக்களின் பொறுப்பாகும். இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தலவாக்கலை கூமூட் தோட்டத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாச தோல்வியடைந்த பின்னர் எனது அமைச்சு பதவியும் பறிபோய் விட்டது. இதனால் அமைச்சின்கீழ் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி மற்றும் வீட்டுதிட்டங்களும் இடைநிறுத்தப்பட்டன. ஆனால் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு பிறகு நான்தான் அமைச்சராவேன். உங்களுக்காக முன்னெடுத்த அனைத்து சேவைகளையும் தொடர்ந்து முன்னெடுப்பேன்.

மலையகத்தில் இவ்வளவுநாள் இருந்த அரசியல்வாதிகள் என்ன செய்தார்கள்? நானும், மனோவும், ராதாவும் இணைந்த பின்னர் குறுகிய காலப்பகுதியில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கக்கூடியதாக இருந்தது.

நாம் ஒருபோதும் மக்களை காட்டிக்கொடுத்துவிட்டு, சுகபோகத்துக்காக அமைச்சுப் பதவிகளைப் பெறவில்லை. மக்களுக்கு சேவையாற்றுவதற்காகவே பதவிகளை ஏற்றோம். எனவே, அரசாங்கத்துக்கு எதிர்வரும் 5 ஆம் திகதி தக்கபாடம் புகட்டுவோம் - என்றார். (ஐ)

# பிரதமர் பதவிக்கு பொருத்தமானவர் ரணில் விக்கிரமசிங்கவே

## ஆசு மாரசிங்க கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 16

பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அமைக்கும் பட்சத்தில், பிரதமர் பதவிக்குப் பொருத்தமானவர்களில் ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர மாற்றுத் தெரிவுகள் இல்லை என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஆசுமாரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பொதுத்தேர்தலின் பின்னர் தற்போதுள்ள ஆளுந்தரப்புடன் இணைந்து அரசாங்கம் அமைக்க வேண்டிய எந்தவொரு தேவைப்பாடும் எமக்கில்லை. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமொன்றை அமைப்பதே எமது ஒரே எதிர்பார்ப்பாக இருக்கிறது. சஜித் ஜனாதிபதித் தேர்தலின்போது கூறிய நடைமுறைச் சாத்தியமற்ற கருத்துக்களையே தற்போதும் கூறி வருகின்றார்.

கொரோனா வைரஸ் பரவலையடுத்து நாட்டிலேற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலையை சீர்செய்வதற்கு முன்னர் ஒவ்வொரு குடும்பத்தினதும் பொருளாதாரத்தை சரிசெய்வதற்கான செயற்றிட்டமொன்று தேவைப்படுகிறது. அதனை முன் நிறுத்தியே ஐக்கிய தேசியக் கட்சி செயற்பட்டு வருகின்றது.

அதேபோன்று அரசாங்கம் விசேட ஜனாதிபதி செயலணிகளை உருவாக்கி, அவற்றின் உறுப்பினர்களாக இராணுவத்தினரை நியமித்து ஒருபுறம் மக்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்திவரும் அதே வேளை, மறு புறத்தில் தமது தொழிற்சங்கங்களின் ஊடாக எதிரணியினர் மீது தாக்குதல்களையும் நடத்தி வருகின்றது. அத்தகைய சில தாக்குதல் சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன. அவை பற்றி உடனடியாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அவதானம் செலுத்த வேண்டும் - என்றார். (ஐ)

# சுற்றுச்சூழலுக்கு நாசம் விளைவிக்கும் வேட்பாளருக்கு பாடம் புகட்டவேண்டும்

## வலி.கிழக்கு தவிசாளர் நிரோஷ் காட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

தேர்தல் பிரசாரத்தில் பொதுச் சொத்துக்களையும் சூழலையும் பாதுகாப்பதில் வேட்பாளர்கள் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும். பிரசாரம் என்ற போர்வையில் எமது பிரதேசத்தை நாமே அழித்து விடக்கூடாது என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் உள்ளதாவது;

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சிலர் பொதுச் சொத்துக்களை நாசம் செய்யும் வகையிலும் சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் வகையிலும் செயற்படுகின்றனர். இது சட்டம், ஒழுங்கு நடவடிக்கைக்குப் புறம்பான காரியமாகும். பொது ஸ்தாபனங்கள், மதில்களில் கண்டபடி சுவரொட்டிகளை ஒட்டுகின்றனர். உள்ளூராட்சி மன்றங்களான எமக்குச் சொந்தமான வீதிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வீதிகள், மாகாணத் திணைக்களத்திற்குச் சொந்தமான வீதிகள் என வேறுபாடின்றி நாசம் செய்யப்படுகின்றன.

எனவே அரச சொத்துக்கு இழப்பினை ஏற்படுத்தி மக்களின் வரிப்பணத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகளை நாசம் செய்வதுடன் மட்டும் நின்றுவிட வில்லை. இதற்கு அடுத்ததாக வீதிகளின் பெயர்ப்பலகைகள், திட்டங்களின் பெயர்ப்பலகைகளை மறைத்து வேட்பாளர்களின் படங்களை ஒட்டுகின்றனர். வேட்பாளர்கள் தமது பிரசார காரருக்கு உரிய அறிவுறுத்தல்களைக் கொடுக்க வேண்டும் என உள்ளூராட்சி மன்றம் என்ற வகையில் கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (ஐ)

# பொது எதிரியை பலப்படுத்த சு.க. தயாராக இல்லை

## அதன் முன்னாள் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 16

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளித்து பொது எதிரியைப் பலப்படுத்த நாங்கள் தயார் இல்லை என சுதந்திரக் கட்சியின் முன்னாள் செயலாளர் ரோஹண லக்ஷமன் பியதாச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

எதிர்வரும் பொதுத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பொதுஜன பெரமுனவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு சிறிலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன என்ற பெயரில் மொட்டுச் சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்தோம். அத்துடன் எமது கட்சிக்கு வேட்புமனுவில் போதுமான சந்தர்ப்பங்கள் கிடைக்காத மூன்று மாவட்டங்களில் நாங்கள் எமது கட்சியின் கைச் சின்னத்தில் தனித்துப் போட்டியிடுகின்றோம். எவ்வாறு இருந்தாலும் கொள்கையில் நாங்கள் ஒன்றாகச் செயற்படுகின்றோம். என்றாலும் கடந்த காலங்களில் தேர்தல் பிரசார மேடைகளில் எமது கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகவும் அவரின் வெற்றியைத் தடுக்கும் வகையிலும் எமது அணியில் போட்டியிடும் ஒருசிலர் பொய்க் குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்து தொடர்ந்து விமர்சித்து வருகின்றனர். இது தேர்தல் சட்டத்தையும் மீறுகின்ற செயலாகும். இது தொடர்பாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் முறைப்பாடு செய்திருக்கின்றோம். அத்துடன் கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலின்போதும் உள்நாட்டு வெளிநாட்டு சதித்திட்டங்கள் மூலம் எம்மை தோல்வியடையச் செய்ததாகவும் அதேபோன்றதொரு சதித்திட்டம் வேறு கோணங்களில் தற்போதும் இம்பெற்று வருவதாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். இவ்வாறான நிலையில் சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக அதே அணியில் இருந்து தெரிவிக்கப்படும் அவதூறுகள் எமது கூட்டணியைக் குழப்புவதற்கு மேற்கொள்ளப்படுகின்ற சதியாகவும் இருக்கலாம் - என்றார். (ஐ)

# பட்டொளி வீசிப் பறக்கப்போவது பாண்டியர்களின் மீன் கொடியே

## முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

**சோழக் கொடி மௌனிக்கப்பட்டதால் இனி மேல் பட்டொளி வீசிப் பறக்கப்போவது பாண்டியக் கொடியான மீன் கொடியே என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

திக்கம் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது;

நண்பர் ஒருவர் இரு தினங்களுக்கு முன்னர் என்னிடம் கேட்டார். 'சேர்! நீங்கள் வாக்காளர்களுக்கு சாராயப் போத்தல்கள் விநியோகிக்கவில்லை. சாப்பாட்டுப் பார்சல்கள் கொடுக்கவில்லை. ஒவ்வொருவருக்கும் ஏதேனும் பணத் தொகை கூடக் கொடுக்கவில்லை. எப்படி தேர்தலில் வெற்றியீட்டப் போகின்றீர்கள்' என்று. நான் அதிர்ந்து விட்டேன்.

'எங்கள் மக்கள் தமது புனிதமான வாக்குகளை கேவலம் ஒரு போத்தல் சாராயத்திற்கு விற்று விடக் கூடியவர்களா?' என்று கேட்டேன்.




'சேர்! எந்த ஒரு வாக்காளரும் நான் உங்களுக்கு வாக்களிக்க நீங்கள் என்ன தருவீர்கள்? என்று தான் கேட்கின்றார்கள். இன்றைய நிலை அப்படித்தான்' என்றார்.

'அதாவது ஐந்து வருட காலத்தில் என்ன செய்யப் போகின்றீர்கள் என்று கேட்காது உடனே எமக்கு என்ன தருவீர்கள் என்று கேட்கின்றார்கள் அல்லவா?' என்றேன். 'ஆமாம்! அதுவே தான்' என்றார். உடனே நான் 'முன்னொரு தேர்தலில் நடந்தது உங்களுக்கு தெரியுமா? என்றேன். 'என்ன?' என்றார். சென்ற 2015ஆம் ஆண்டுத் தேர்தலில் ஒரு வேட்பாளர் ஒவ்வொரு வாக்காளருக்கும் 5ரூபா வீதம் பணம் கொடுத்து வெற்றி பெற்றதாகக் கூறப்படுகின்றது.

ஆனால் அதுவல்ல முக்கிய செய்தி. வென்று வெற்றி வாகைச் சூடி வந்த நாடாளுமன்ற உறுப்பினர் தனது வாக்காளர்கள் கோரிய சில கோரிக்கைகளை நிராகரித்தாராம். அப்போது அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினரைக் கடிந்து 'நாங்கள் தான் உங்களைத் தேர்ந்தெடுத்தோம். நீங்கள் எங்களுக்குத் துரோகம் செய்கின்றீர்கள்.' என்றார்களாம். உடனே நாடாளுமன்ற உறுப்பினர் கோபம் கொண்டு 'நான் தானே உங்கள் வாக்குகளை வாங்கிவிட்டேனே. வாக்காளர்களுக்கு இருக்கும் உரித்துக்களை நீங்கள் இழந்துவிட்டீர்கள். எனக்கும் உங்களுக்கும் இடையில் ஒரு கடப்பாடும் இல்லை' என்றாராம். இதில் பல விடயங்கள் அடங்கியுள்ளன.

பணம் கொடுத்து, வேறு பொருள் கொடுத்து வாக்குகளைக் கேட்பதிலும் பார்க்க கொள்கைகள் மீது நாட்டம் காட்டி எமது வாக்காளர்கள் எமக்கு ஆதரவு வழங்க நாம் இடமளித்துக்கொடுக்க வேண்டும் - என்றார். (ப)

# முரளிக்கு புத்தி மட்டு

## முன்னாள் அமைச்சர் மனோ பரிகாசம்

கொழும்பு, ஜூலை 16

எனக்கு வாக்களிக்க வேண்டாம் என்றும், கொழும்பில் தமிழர்கள், அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு வாக்களிக்க வேண்டும் என்றும் முன்னாள் துடுப்பாட்ட வீரர் முத்தையா முரளிதரன் கூறுகிறார். இவருக்கு அரசியல் புத்தி மட்டு என ஒட்டு மொத்த தமிழ் பேசும் மக்களுக்கும் தெரியும் என்பதால், இவருக்கு நான் பதில் கூற விரும்பவில்லை என்று முன்னாள் அமைச் சர் மனோகணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

முரளிதரனுடன் கிரிக்கெட் அணியில் ஒன்றாய் விளையாடிய சக வீரர்களான குமார் சங்ககார, மஹேல ஜயவர்தன ஆகியோர் சமீபத்தில் அநியாயமான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி இருந்த போது முழு நாடுமே அவர்களுக்காகக் குரல் கொடுத்தது. அவ்வேளையில் தன் நண்பர்களுக்காக வாயைத் திறக்காத இவர், இப்போது தன் பிழைப்புக்காக அரசியல்வாதி விமல் வீரவன்சவுக்காக வாய் திறந்துள்ளார். இதிலிருந்தே இவர் யார் என்பது ஊர்ஜிதமாகியுள்ளது.

தமிழ், முஸ்லிம் வாக்குகள் வேண்டாம் என்று சொன்னவர் இந்த விமல் வீரவன்ச. கொழும்பு மாவட்டத்தில் இவர்களது கட்சி வேட்பாளர் பட்டியலில் ஒரு தமிழ், முஸ்லிம் வேட்பாளரும் இல்லை. இதுதான் உண்மை. இந்நிலையில் இவர் எதற்காக இன்று தமிழ் வாக்குகளைக் கோருகிறார்? சஜித் பிரேமதாசவை விட, கொழும்பில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற இவர் துடியாய்த் துடிப்பது எனக்குத் தெரியும். இந்த ஒரே நோக்கத்திற்காகத்தான், தமிழர்களின் மீது திடீர்ப் பாசம் விமல் வீரவன்ச வுக்கு ஏற்பட்டுள்ளது. இதன் மூலம், கொழும்பில் தமிழர்களின் பிரதி நிதித்துவத்தை இல்லாமல் செய்ய இவர் முயல்கிறார். இதற்குத்தான் முரளிதரன் ஒப்பந்த அடிப்படையில் பணி செய்கிறார். கூட்டமைப்பு தலைவர் சம்பந்தனிடமும், என்னிடமும் தமிழ்ச் சமூகங்களை ஒப்படைக்க முடியாது எனக்கூறும் விமல் வீரவன்சவிடம், தமிழர்களுக்கான மாற்றுத்தீர்வுத்திட்டம் என்ன இருக்கிறது என்பதைக் கேட்டுச் சொல்ல வேண்டும் - என்றார். (ப)

# பொருளாதாரக் கொள்கையை வடக்கில் வகுக்கவேண்டும்

## வலியுறுத்துகிறது ஈ.பி.டி.பி.

வடக்குக்குரிய பொருளாதாரக் கொள்கை வகுக்கப்பட வேண்டும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வலியுறுத்தியுள்ளது. அந்தக் கட்சியின் நாடாளுமன்ற வேட்பாளர் குலரட்ணம் விக்னேஸ் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தமிழர் பிரதேசங்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய இடங்களாகக் காணப்படுகின்றன.

முதலில் ஓர் தொழிற்றுறை அபிவிருத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சியை எமது வடபகுதி காண வேண்டுமென்றால் உண்மையில் வட பகுதிக்கென பொருளாதாரக் கொள்கை ஒன்றை வகுக்க வேண்டும் - என்றார். (ப)

# தமிழ்த் தேசிய அரசியலில் பயணிக்க சந்தர்ப்பம் தாருங்கள்

## விடுதலைப் புலிகள் மக்கள் பேரவை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 16

முன்னாள் போராளிகளான எமக்கு மக்களுக்கான சிறந்த ஒழுக்கம்மிக்க தமிழ்த் தேசிய அரசியலில் பயணிக்க ஒரு சந்தர்ப்பம் தாருங்கள் என மக்களிடமும் புலம்பெயர் சமூகத்திடமும் முன்னாள் போராளிகளிடமும் கேட்டுக் கொள்கின்றோம் என்று விடுதலைப் புலிகள் மக்கள் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்தக் கட்சியின் வேட்பாளர்களான ச.சசிகரன், செ.நாகசெல்வம். மற்றும் செ.கண்ணன் ஆகியோர் இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

30 வருடங்களுக்கு மேலாக நாம் கட்டிக் காத்த கலை, கலாசாரம், பண்பாடு எல்லாவற்றையும் இழந்துகொண்டு வருகின்றோம் . போருக்குப் பின் கடந்த 11 வருடங்களாக தமிழர் தாயகம் எல்லாம் சிதைந்து, சின்னாபின்னமாக்கப்பட்டு வருகின்றது. அதனால் தான் இனியும் எம்மால் பொறுமை காக்க முடியாத நிலையில் அரசியல் பிரவேசம் வந்துள்ளோம். எங்கள் மக்களின் கலை, கலாசாரம், விழுமியம் யாவும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது. நாங்கள் அதை விட்டுப் போக முடியாது. ஏனெனில் அந்தக் கனவுகளுடன் வாழ்ந்த மாவீரர்களுக்கு, நிர்க்கதியான அவர்களின் பெற்றோருக்கு நாங்கள் பொறுப்புச் சொல்ல வேண்டும்.

கூடாரச் சின்னத்தில் நாம் போட்டியிடுகின்றோம். எமது பிரவேசம், எமது தமிழ்த் தேசியத்தையும் மக்களையும் உடைக்கக் கூடும் என்று தமிழ்த் தலைமைகள் குறிப்பிடக் கூடும். விமர்சிக்கக் கூடும், ஆனால் எமது நிலைப்பாடு உடைப்பதற்கானதல்ல என்பதை அனைத்து மக்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

50 ஆயிரத்துக்கும் மேலான எமது மாவீரர்கள் எந்த அரசியலையும் அரசியல்வாதிகளையும் நம்பி மடியவில்லை. அவர்கள் மடியும் போது போராளிகளையும் தலைவரையும் நம்பித் தான் மடிந்தார்கள். தான், தனது குடும்பம் மற்றும் நாட்டைக் காப்பார்கள். என்று தான் அவர்கள் நம்பினார்கள். நாம் சிறையில் புனர்வாழ்வு பெற்றும் வந்தோம் இவர்களுக்காக நாம் நின்றோம். எமக்கும் கால் இல்லை. ஊனம் என்ற நிலை உண்டு. இனம், மொழி என்பன சிதைந்து போக விட முடியாது - எனக் கூறினர். (ப)

# வன்னி மக்களின் பிரச்சினைகளை மஹிந்த அரசால் தீர்ப்போம்

## பிரபா கணேசன் கூறுகின்றார்

மன்னார், ஜூலை 16

மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக் கூடிய ஒரு புதிய அரசாங்கத்தை நாங்கள் உருவாக்குவோம். மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் தலைமையிலான புதிய அரசாங்கத்தில் சக்தி மிக்கவர்களாக நாங்கள் இருந்து வன்னி மக்களுக்குத் தேவையானவற்றைச் செய்து கொடுப்போம் என முன்னாள் பிரதி அமைச்சரும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவருமான பிரபாக கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த எமது ஜனநாயக இடது சாரி முன்னணியின் வேட்பாளர்கள் இருவர் தாங்கள் கட்சியில் இருந்தும் தேர்தலில் இருந்தும் விலகி விட்டனர் என அறிவித்திருந்தார்கள். உண்மையிலேயே அவர்கள் விலகவில்லை. அவர்களை நாங்கள் விலக்கி விட்டோம். ஏனெனில் வேட்புமனு கைச்சாத்திட்ட மறுநாளே மக்கள் ஆதரவைப் பெறுவோம் என்று சொல்லிக் கொண்டு வந்த இருவரும் அடுத்த நாள் முதல் தங்களுக்குப் பெரும் தொகையான பணத்தைக் கொடுத்தால் தான் பிரசாரத்தில் ஈடுபடுவோம் எனத் தெரிவித்தார்கள். அப்படி நினைப்பவர்கள் நிச்சயம் மக்கள் சேவை செய்யப்போவது இல்லை என்று தெரியும்.

நான் ஒன்றும் வன்னிக்கு புதியவன் அல்லன். கடந்த மூன்று வருடங்களாக வன்னி மாவட்டத்தில் இருந்து கொண்டு வன்னி மாவட்டத்தில் இருக்கும் 1700 கிராமங்களிலே சுமார் 800 இற்கும் மேற்பட்ட கிராமங்களுக் குச் சென்று அந்த மக்களின் நிறை குறைகளைக் கண்டறிந்து அவர்களிடம் இருந்து அவர்களுக்கு எது அவசியப்படுகின்றது என்று உணர்ந்து தான் இன்று தேர்தல் களத்தில் களம் இறங்கியிருக்கின்றேன் -என்றார். (ப-56)

# தற்கொலைக் குண்டுதாரியின் மனைவி இன்னும் சாகவில்லை!

## குற்றப் புலனாய்வுப் பிரிவு சந்தேகம்

**கொழும்பு, ஜூலை 16**

**நீர்கொழும்பு, கட்டுவாப்பிட்டிய தேவாலயம் மீது நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரியான மொஹம்மட் ஹஸ்தூனின் மனைவி மகேந்திரன் புலஸ்தினி அல்லது சாரா என்று அறியப்படும் பெண் இறந்துவிட்டார் என்று நம்பப்பட்ட நிலையில், அவர் இறக்கவில்லை என்றும் தப்பிச் சென்றுள்ளார் என்றும் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.**

இது தொடர்பாக உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை செய்யும்ஜனாதிபதிவிசாரணைஆணைக் குழுவுக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றை மையப்படுத்தி, கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு சிறப்பு விசாரணை ஒன்றைஆரம்பித்துள்ளது. அந்த விசாரணைகளில் இதுவரை இரு சந்தேக நபர்கள் சாட்சி மறைப்பு தொடர்பிலான குற்றச்சாட்டில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவர் சாரா என அறியப்படும் தற்போது மாயமாகியுள்ள குண்டுதாரியின் சிறிய தந்தை எனவும் மற்றையவர் அம்பாறை உப பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் அபூபக்கர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் இருவரிடமும் சாரா தொடர்பில் தீவிர விசாரணைகள், தெமட்டகொடையில் உள்ள கொழும்பு குற்றத் தடுப்புப்பிரிவில்ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தினமான கடந்த 2019 ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற தொடர் தற்கொலை தாக்குதல்களைத் தொடர்ந்து, 2 ஆம் கட்ட தாக்குதலுக்கு தயாராகி இருந்தனர் என்று கூறப்படும் சஹ்ரானின் பெற்றோர், சகோதரர்கள் உள்ளிட்ட குழு, கல்முனை சாய்ந்தமருது பகுதியில் கடந்த 2019 ஏப்ரல் 26 ஆம் திகதி வீடொன்றுக்குள் குண்டை வெடிக்கச் செய்து தற்கொலை செய்து கொண்டது.

அந்தக் குழுவில் இருந்தனர் என நம்பப்படும், நீர்கொழும்பு கட்டுவாபிட்டிய தேவாலய குண்டுதாரியின் மனைவியான சாரா அந்த வீட்டில் இறந்தமைக்கான எந்த தடயங்களும் இதுவரை விசாரணையாளர்களால் கண்டறியப்படாத நிலையிலேயே, அவர் அங்கிருந்து தப்பியுள்ளார் என்று கிடைத்த உளவுத் தகவல்களை மையப்படுத்தி இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

2019 ஏப்ரல் 26 ஆம் திகதியன்று சாய்ந்தமருது வீட்டை இராணுவம், அதிரடிப் படை சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தியதுடன் இதன்போது அவ்வீட்டில் இருந்தவர்கள் குண்டை வெடிக்கச் செய்து தற்கொலை செய்துகொண்டனர் என பொலிஸார் அப்போது அறிவித்தனர்.


அந்த தாக்குதலின் பின்னர், அந்த வீட்டிலிருந்து பயங்கரவாதி சஹ்ரானின் மனைவியும், மகளும் காயங்களுடன் மீட்கப்பட்டு சிகிச்சையளிக்கப் பட்டதுடன், சஹ்ரானின் மனைவி தற்போதும் சி.ஐ.டி.யால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் சாய்ந்தமருது வீட்டில் மொஹம்மட் காசிம் மொஹம்மட் சைனி, மொஹம்மட் காசிம், மொஹம்மட் ரில்வான், மொஹம்மட் ஹிதாயா, பாத்திமா நப்னா, பாத்திமா அப்ரின், எம்.ஐ.எம். ராசிக், சித்தி உம்மா, மொஹம்மட் காசிம், அப்துல் ரஹீம் பெரோசா, மகேந்திரன் புலஸ்தினீ அல்லது சாரா, மொஹம்மட் நியாஸ், சிறுவர்களான சஹ்ரான் வாசிக் (8-வயது, சஹ்ரானின் மகன்), சாஹித் ( ரில்வானின் மகன், வயது - 3), மினாரா (ரில்வானின் மகள், வயது -4), ஹமாமா (சைனியின் மகள், வயது-3), உமர் ( சைனியின் மகன், வயது - 5), ருவைதா (ஹிதாயாவின் மகள், வயது - 1) ஆகியோர் உயிரிழந்தனர் என ஆரம்பகட்ட விசாரணைகளில் பொலிஸார் தகவல்களை வெளிப்படுத்திக்கொண்டனர்.

அந்த சாய்ந்தமருது வீட்டில் மீட்கப்பட்ட சடலங்கள் உருக்குலைந்திருந்த நிலையிலும், பல சடலங்கள் சிதறியிருந்த நிலையில் இந்த 17 பேர் தொடர்பிலும் டி.என்.ஏ. பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும் மகேந்திரன் புலஸ்தினி அல்லது சாரா எனும் பெண்ணின் பெற்றோரிடமிருந்து பெறப்பட்ட டி.என்.ஏ. மூலக்கூறுகளுடன், சாய்ந்தமருது வீட்டில் இறந்தனர் என நம்பப்படும் சடலங்கள், சடலங்களின் பாகங்களில் இருந்து பெறப்பட்ட எந்த டி.என்.ஏ. மூலக்கூறுகளும் ஒத்துப் போகவில்லை. அதனால் சாய்ந்தமருது வீட்டில் தாக்குதல் நடத்தப்பட முன்னரேயே சாரா அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டார் என நம்பப்படும் நிலையில் சி.ஐ.டி. அது தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

விசாரணைகளின் அடிப்படையில் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஒருவரும், சாராவின் சிறிய தந்தையும் கைது செய்யப்பட்டுள்ளனர். தாக்குதல் நடந்த காலப்பகுதியில் அந்தப் பொலிஸ் அதிகாரி களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியுள்ளமையும், குறித்த சம்பவத்தை அண்மித்த காலப் பகுதியில் அவர் கல்முனை சாய்ந்தமருது பகுதிக்கு சென்றுள்ளமை தொடர்பிலும் சில தகவல்கள் உள்ள நிலையில், அதனை உறுதி செய்யவும், சாரா தப்பிச் செல்ல குறித்த பொலிஸ் அதிகாரி உதவினாரா என அறியவும் விசாரணைகள் தொடர்கின்றன.

சாரா தொடர்பில் எந்தத் தகவலும் இல்லாத நிலையில், அவர் வெளிநாடொன்றுக்கு தப்பிச் சென்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (எ)



### கை கழுவும் இயந்திரங்கள் கையளிப்பு

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்கு கைகழுவும் இயந்திரங்கள் 10 வேள்ட் விஷன் லங்கா நிறுவனத்தினரால் வழங்கப்பட்டன.

இவை பிரதேசத்தில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம் ஆகியவற்றில் பொருத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## 16 மாவட்டங்களைச் சேர்ந்த 3,000 பேர் சுய தனிமையில்

கொழும்பு, ஜூலை 16

நாட்டில் 16 மாவட்டங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கந்தக்காடு மறுவாழ்வு மத்திய நிலையத்தில் பணியாற்றிய ஊழியர்களின் குடும்பங்கள் மற்றும் அவர்களுடன் தொடர்பைப் பேணிய நபர்களே சுய தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

"கம்பஹா, பொலன்னறுவை, காலி, கொழும்பு, இரத்தினபுரி, குருநாகல், களுத்துறை, கண்டி, அனுராதபுரம், யாழ்ப்பாணம், கேகாலை, மொனராகலை, அம்பாந்தோட்டை, புத்தளம், மாத்தறை மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்கள் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

எனவே குறித்த மாவட்டங்களைச் சேர்ந்தோர் சுகாதார வழிகாட்டுதல்களுக்கு இணங்க செயல்படுமாறு இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் கேட்டுக்கொண்டார். (ஐ)

## மத்தியஸ்தர் சபை அமர்வு ஞாயிறன்று

யாழ்ப்பாணம்,ஜூலை 16

கொரோனா வைரஸ் தாக்கத்தின் அசாதாரண சூழ்நிலை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வலிகாமம் தெற்கு உடுவில் மத்தியஸ்தர் சபையின் அமர்வுகள் மீண்டும் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு உடுவில் பிரதேச செயலகத்தின் கட்டடத் தொகுதியில் நடைபெறும்.

அமர்வுகள் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளுடன் மட்டுப்படுத்தப்பட்ட உறுப்பினர்களுடன், நீதிமன்றத்துடன் தொடர்புடைய பிணக்குகள் மட்டும் மட்டுப்படுத்தப் பட்டளவில் நடைபெறும் என்று மத்தியஸ்தர் சபையின் தவிசாளர். திருமதி ஜெ. ஜெயந்தினி தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற அமர்வுகள் கொவிட் 19 தாக்கத்தின் அசாதாரண சூழ்நிலை காரணமாக உடுவில் பிரதேச செயலகக் கட்டடத்தொகுதியில் தற்காலிகமாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-39)

## விண்ணப்பங்கோரல்

யாழ்ப்பாணம்,ஜூலை 16

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியின் தேசிய தொழில் தகைமை மட்டம் 5/6 இன் 1.11 அரையாண்டுக்கான பரீட்சை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி இறுதிப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எனவே மீள் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் விண்ணப்பப் படிவங்களை தொழில்நுட்பவியல் கல்லூரியின் பரீட்சைப் பகுதியில் பெற்று எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் பரீட்சைப் பகுதியில் தமது துறைத் தலைவரிடம் சமர்ப்பிக்குமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார். (க)

## இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்ப்பாணம், பாசையூர் பகுதியில் நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் வாள் மற்றும் கொட்டன்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் பாசையூரைச் சேர்ந்த 27 வயதுடையவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. சந்தேகநபர் வாள்வெட்டுக் குழுக்களுடன் தொடர்புடையவர் என்றும், பல்வேறு வாள்வெட்டுச் சம்பவங்கள் தொடர்பாக தேடப்பட்டு வந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-25)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை 16

யாழ்.வண்ணைநகர் ஸ்ரீ மத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரசுவாமி (யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன்) ஆலயப் பெருந்திருவிழா நேற்றுப் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (க)

# காணிகளுக்கு வேலியிட முயற்சி: தேர்தல் முறைப்பாட்டுக் குழு தடை!

## மக்களின் முறைப்பாட்டை அடுத்து நடவடிக்கை

**மன்னார், ஜூலை 16**

**நானாட்டான், இராசமடுக் கிராமத்தில் உள்ள அரச காணி, கோயில் காணி மற்றும் பொது மக்களின் காணிகள் என 49 ஏக்கர் காணிகளுக்கு வேலியிடத் தனியார் ஒருவர் முயற்சிக்கின்றார் என்று பொதுமக்கள் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய, அந்த நடவடிக்கைக்கு மன்னார் தேர்தல் முறைப்பாட்டுக் குழு தடை விதித்தது.**



நானாட்டான் செல்வ முத்துமாரியம்மன் ஆலய நிர்வாகத்தினரும், பொதுமக்களும் இணைந்து மன்னார் உதவித் தேர்தல்கள் ஆணையாளரிடம் செய்த முறைப்பாட்டுக்கு அமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.


மன்னார் உதவித் தேர்தல் ஆணையாளர் ஜெ.ஜெனிற்றனின் பணிப்புக்கு அமைய தேர்தல் முறைப்பாட்டுக் குழு அதிகாரி ஏ.டி.பி.றொஹான் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சம்பவ இடத்துக்குச் சென்று மக்களுடன் கலந்துரையாடினர். தற்போது தேர்தல் காலம் என்பதால் முரண்பாடுகளைத் தவிர்க்கும் நோக்குடன் அந்தக் காணிகளுக்கு வேலியிடும் நடவடிக்கைகளுக்குத் தடை விதித்தனர். இங்குள்ள அரச காணி 2017ஆம் ஆண்டு தேசிய காணி ஆணையாளரால் அரச காணியாக அடையாளப்படுத்தப்பட்டது. அந்தக் காணிகளில் 50க்கும் அதிகமான குடும்பங்கள் வசிக்கின்றன. சில குடும்பங்கள் இந்தியாவில் உள்ளன. அங்கு சைவ ஆலயமும் உள்ளது.

அந்தக் காணிகளுக்கே தனியார் ஒருவர் வேலியிடும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார் என்று நானாட்டான் செல்வ முத்துமாரியம்மன் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இந்தக் காணிகளுக்கு வேலியிடும் நபர் 1964ஆம் ஆண்டு 10 ஆண்டு குத்தகையில் 49 ஏக்கர் காணிகளையும் அரசிடம் பெற்றுள்ளார். முதல் 10 ஆண்டுகளுக்கே குத்தகை செலுத்தப்பட்டுள்ளது. அதன்பின்னர் குத்தகை செலுத்தப்படாது காணி பராமரிப்பு இன்றி இருந்ததால் தேசிய காணி ஆணையாளரால் 2017 ஆம் ஆண்டு அந்தக் காணி அரச காணி என்று நானாட்டான் பிரதேச செயலகத்துக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். 30 ஆண்டுகளுக்கு மேலாக அந்தக் காணிகளில் குடியிருக்கும் பொதுமக்களுக்கு காணிகளைப் பெற்றுத் தருவதற்கு அதிகாரிகளும், மக்கள் பிரதிநிதிகளும் முன்வரவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர். (எ-213)







சாவகச்சேரி நகரப்பகுதி நேற்றுமுன்தினம் மாலை புகை மண்டலமாகக் காட்சியளித்தது. நகரை அண்மித்த பகுதியில் உள்ள வயல்களில்துப்புரவுப் பணிகளை மேற்கொண்டவர்கள் குப்பைகளுக்கு வைத்த தீயிலிருந்து எழுந்த புகையாலேயே நகரப்பகுதி புகைமண்டலமாக காணப்பட்டது. (ரி3-9)

## சிறுவர்களுக்கான மகிழ்வூட்டல் நிகழ்வு

கொடிகாமம், ஜூலை 16

யாழ்.பல்கலைக்கழக பாலசிங்கம் விடுதிக்கு அண்மையிலும், கொக்குவில் ரயில் நிலையத்தை அண்டி வாழும் அடையாளப்படுத்தப்பட்ட அடிப்படை வசதிகள் தேவைப்பாடுடைய குடும்பங்களைச் சேர்ந்த 40 சிறுவர்களுக்குத் தலைமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட மகிழ்வூட்டல் நிகழ்வும், அவர்களுக்கான சத்துணவுகளும் கடந்த ஞாயிற்றுக் கிழமை வழங்கப்பட்டன.

Our lady of Lourdes tamil community அமைப்பின் நிதியுதவியுடன் யாழ்ப்பாணம் கே.கே.பி இளைஞர் கழகத்தால் ஏற்பாடுசெய்யப்பட்ட இந்த நிகழ்வுக்கு, கலாநிதி சுதாகரன் தலைமைதாங்கினார். (ரி3-159)

## வவுனியாவில் மிதிவெடி மீட்பு

வவுனியா, ஜூலை 16



வவுனியா பாவற்குளத்தை அண்டிய காட்டுப்பகுதியில் வெடிக்கும் நிலையில் காணப்படும் மிதிவெடி ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. குறித்த காட்டுப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை பொதுமகன் ஒரு வர் மாடு மேய்க்கச் சென்ற வேளையில் மிதிவெடியை அவதானித்துள்ளார். இதனையடுத்து உலுக்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியிருந்தார். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் மிதி வெடி யைப் பார்வையிட்டதுடன் நீதிமன்றில் அனுமதி பெற்று அதனை செயலிழக்கச் செய்யவுள்ளனர் எனத் தெரிவித்தனர். (ரி3-110)

## டிப்பர்கள் மோதி பசு சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 16

நாவற்குழி -கேரதீவு வீதியில் மறவன்புலவில் பசு மாட்டை அதிவேகமாக அடுத்தடுத்து டிப்பர் வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக மோதி தூக்கி வீசியுள்ளன.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது. இரண்டு வயதுடைய சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பசு மாடே இவ்வாறு உயிரிழந்துள்ளது என மாட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார். (ரி3-9)

## இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பொலிஸ் பரிசோதகர் கைது!

கம்பஹா, ஜூலை 16

பிணை நிபந்தனைகளுக்கான கோரிக்கைகளை எதிர்த்து விடயங்களை முன்வைக்காமல் இருக்க, இலஞ்சம் பெற்றுக்கொண்டார் என்ற குற்றச்சாட்டில் யக்கல பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கம்பஹா நீதிமன்றில் இடம்பெறும் வழக்கொன்றிலேயே 15 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்றார் என்று இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினரால் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.


அவர் கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார். இதன்போது அவர் எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்ன உத் தரவிட்டார். 2019 ஆம் ஆண்டு காரொன் றில் அசிட் மற்றும் பெரிய கத்தியொன்றை கொண்டு செல்லும் போது கைது செய்யப்பட்ட நால்வர் சம்பந்தப்பட்ட வழக்கு தொடர்பிலேயே இலஞ்சம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (ரி1)

## வீட்டில் பதுக்கிய மரமஞ்சள் மீட்பு

கொழும்பு, ஜூலை 16

பெரலிய, முக்கலான வனப்பகுதியிலுள்ள வீடொன்றில் பதுக்கி வைக்கப்பட்ட நிலையில் 255 கிலோ மர மஞ்சளைப் பொலிஸ் அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர். சட்ட விரோதமான முறையில் வெட்டப்பட்டு வீட்டில் விற்பனைக்காகத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 255 கிலோ மரமஞ்சளே இவ்வாறு கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பில் சந்தேகத்தின் பேரில் எல்பிட்டிய பிட்டவல நான்காம் கட்டைப் பகுதியில் வசிக்கும் 29 வயதான சந்தேகநபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ரி1)



# லைசென்ஸ் வழங்கலும் இராணுவத்தினர் வசம்!

## ஆராய்கின்றது அரசு

**கொழும்பு, ஜூலை 16**

**சாரதி அனுமதிப்பத்திர உரிமங்கள் தயாரிக்கும் நடவடிக்கையை அடுத்த ஆண்டு முதல் இலங்கை இராணுவத்திடம் ஒப்படைப்பது தொடர்பாக அரசு கவனம் செலுத்தியுள்ளது. இது தொடர்பான சிறப்பு விவாதம் ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடந்தது என்று போக்குவரத்துச் சேவைகள் மேலாண்மை அமைச்சகம் தெரிவித்துள்ளது.**

சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கு ஒருவர் சுமார் ஆயிரத்து 340 ரூபாவைச் செலுத்த வேண்டியுள்ளது. சாரதி அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கான ஒப்பந்தம் தனியார் நிறுவனம் ஒன்றுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் ஆண்டுதோறும் பெருந் தொகை வெளிநாட்டுக்குச் செல்கின்றது. இது தொடர்பாக விவாதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றிய பாதுகாப்பு அமைச்சின் ஓய்வுபெற்றமேஜர் ஜெனரல் கமால் குணரத்ன, இராணுவத்தால் மிகக் குறைந்த கட்டணத்தில் சாரதி அனுமதிப்பத்திரங்களைத் தயாரிக்க முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதற்கேற்றவாறு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க போக்குவரத்து அமைச்சர், இராணுவ மற்றும் பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்த ஒரு கூட்டுக் குழுவையும் அவர் நியமித்துள்ளார். (எ)





யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஜே/81 கோட்டை கிராம அலுவலர் பிரிவின் பண்ணை கடற்கரை பகுதியில் டி.எவ்.சி.சி.வங்கி ஊழியர்களால் கடந்த சனிக்கிழமை கடற்கரையைச் சுத்திகரிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றமையுடன் கொரோனா நோய்த் தொற்று தொடர்பான விழிப்புணர்வும் இடம்பெற்றது. (ரி3)

## தேர்தலை ஒத்திவைக்கக் கோரி ஆணையாளருக்கு கடிதம்

கொழும்பு, ஜூலை 16

நாட்டில் தற்போது காணப்படும் ஆபத்தான நிலைமையில் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் எனப் பொது மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அறக்கட்டளை தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமான கோரிக்கை அடங்கிய கடிதம் ஒன்றை தேர்தல் ஆணையாளரிடம் நேற்று கையளிக்கப்பட்டதாக அந்த அறக் கட்டளையின் தலைவர் அசேல சம்பத் கூறியுள்ளார்.

மக்களைப் பலிகொடுத்தாவது மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற வேண்டும் என்ற மனநோயில் பாதிக்கப்பட்டுள்ள அரசாங்கம், எப்படியான நிலைமையாக இருந்தாலும் தேர்தலை நடத்த முயற்சித்து வருகிறது. இப்படியான நோக்கத் துக்காகச் சகல மக்களின் உயிர்களையும் பலிகொடுக்க முடியாது.

இதனால், தேர்தலை ஒத்திவைத்து, மக்களின் உயிர்களைப் பாதுகாக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அசேல சம்பத் குறிப்பிட்டுள்ளார். (ரி3)



சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத

## பஸ் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

*எச்சரிக்கின்றது தேசிய போக்குவரத்து ஆணைக்குழு*

கொழும்பு, ஜூலை 16

சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பஸ் போக்குவரத்தில் ஈடுபடுமாறும், அவற்றைப் பின்பற்றாத வகையில் செயற்படும் பஸ் உரிமையாளர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கொமாண்டர் நிலான் மிரெண்டா தெரிவித்துள்ளார்.



மேலும், ஆசனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவே பஸ்களில் பயணிகளை ஏற்றிச்செல்ல வேண்டும் எனவும், பஸ்களில் பயணிகள் உட்பட நடத்துநர்கள் மற்றும் சாரதிகள் ஆகியோர் கட்டாயம் முகக் கவசம் அணிய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், கடந்த மார்ச் மாதம் தொடக்கம் அனைத்து பஸ் நிலையங்களிலும் 24 மணித்தியாலங்களும் தொடர்ச்சியாக கிருமித் தொற்று ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டு வருகின்றது என்றும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத பஸ்கள் தொடர்பில் முறைப்பாடுசெய்ய பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ரி3)


## கலவானவில் கொரோனா தொற்றாளர்

*300 கடைகளுக்கு பூட்டு*

கொழும்பு, ஜூலை 16

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் பணியாற்றும் கலவான பகுதியைச் சேர்ந்த ஆலோசகர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து, அங்குள்ள 300 கடைகள் நேற்றுமுன்தினம் நண்பகலுடன்மூடப்பட்டுள்ளன.

கந்தகாடு நிலையத்தில் இருந்து கலவானவுக்கு சென்றிருந்த அவர், கடைகள், வங்கி, மருந்தகம் மற்றும் பல வீடுகளுக்கும் சென்றிருக்கிறார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதையடுத்து, கலவான பகுதியில் உள்ள 300 கடைகள் நேற்றுமுன்தினம் நண்பகலுடன் மூடப்பட்டன. அதேவேளை, தொற்றாளர் சென்ற இடங்களில் உள்ளவர்களை சுயதனிமைப் படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் தொற்றாளரின் குடும்பத்தைச் சேர்ந்த 11 பேர் தியத்தலாவ தனிமைப்படுத்தல் முகாமுக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். (ரி3)



## கிளிநொச்சி பொலிஸாருக்கு புத்திஜீவிகள் பாராட்டு

கிளிநொச்சி, ஜூலை 16

இலங்கை அரசின் கொரோனாத் தடுப்பு சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்தும் கிளிநொச்சி பொலிஸார் தொடர்பில் புத்திஜீவிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியில் வீதிகளால் பயணிக்கும் அனைவரும் முகக் கவசம் அணிய வேண்டும் என்பதுடன், அதனை முறையாக அணிய வேண்டும் எனவும் தெரிவித்துள்ள கிளிநொச்சி பொலிஸார், அவ்வாறு செயற்படாத அனைவரினதும் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் மற்றும் தேசிய அடையாள அட்டைகளைப் பார்வையிட்டுப் பதிவுகளை மேற்கொண்டு வருகின்றமையுடன், முகக் கவசம் அணிவது தொடர்பில் கடும் எச்சரிக்கைகளையும் விடுத்து வருகின்றனர்.

சமூகத் தொற்று ஏற்படாதவாறு மக்கள் சுகாதார முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பிரிவு தெரிவித்துள்ள நிலையில் கிளிநாச்சி பொலிஸாரின் இந்தச் செயற்பாட்டைப் பலரும் பாராட்டி வருகின்றனர். (ரி3-6)



யாழில் அமைந்துள்ள தனியார் காப்புறுதி நிறுவனம் ஒன்றில் உள்ள மின் இணைப்பு சாதனங்களில் நேற்று காலை ஏற்பட்ட தீ விபத்து சிறிது நேரத்தில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ரி3-20)

# 2021-2030 வரையான காலம் திறன் அபிவிருத்தி தசாப்தம்

## ஜனாதிபதி அறிவிப்பு

**கொழும்பு, ஜூலை 16**
**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, 2021 – 2030க்கு இடைப்பட்ட பத்து வருடங்களை இலங்கையின் திறன் அபிவிருத்தி தசாப்தமாக அறிவித்துள்ளார் என்று அவரது ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

"நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" அரசாங்கத்தின் தேசியக் கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக கல்வி மறுசீரமைப்பு மற்றும் திறன் அபிவிருத்தித்துறையில் சிறந்த பெறுபேற்றை இதன் மூலம் அடைந்துகொள்வதே நோக்கமாகும். தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் 2014ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத் தொடரில் முன்வைத்த முன்மொழிவின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட "உலக இளைஞர் திறன் விருத்தி தினம்" பெற்றுக்கொண்ட பெறுபேறின் அடிப்படையில் திறன் அபிவிருத்தி தசாப்தம் திட்டமிடப்பட்டுள்ளது. பூகோள மயமாக்கலுக்கு ஏற்றாற்போல் அடுத்த தலைமுறையின் திறன் அபிவிருத்தி மற்றும் பேண்தகு அபிவிருத்திக்காக பூகோள செயற்திட்டம் 2030ஆம் ஆண்டை மையப்படுத்தி திறன் அபிவிருத்தி தசாப்தத்தின் செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பயிற்சி பெறாத தொழிற்படையை மொத்த சனத்தொகையில் 10 வீதமாகக் குறைத்தல் மற்றும் நாட்டின் அபிவிருத்தி செயற்திட்டத்தை முன்னெடுப்பதற்கு முடியுமான டிஜிட்டல் தொழிநுட்பத்தில் தேர்ச்சி பெற்ற மற்றும் எதிர்காலத் தேவைகளுக்குப் பொருத்தமான தலைமுறையை உருவாக்குவதன் மூலம் இலங்கையை ஆசியாவின் மனிதவள அபிவிருத்தியின் மையமாக உருவாக்குவதற்கு சாதாரண கல்வி, மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வியை உருவாக்குவது திறன் அபிவிருத்தி தசாப்தத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுபவைகளாகும் – என்றுள்ளது. (ப)

# ரிஷாத் இரு நாள்களில் கைதாகலாம்

## அமீர் அலி ஊகம்

கொழும்பு, ஜூலை 16
அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் இரண்டு நாள்களில் கைது செய்யப்படலாம். அதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

சிலவேளைகளில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் இரண்டு நாள்களில் கைது செய்யப்படலாம். அதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஜனாதிபதித் தேர்தலில் சஹ்ரானை வைத்து பதினான்கு இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் வென்றார்கள். தற்போது இந்த ஜனாதிபதி, பிரதமர் ஆட்சிக் காலத்தில் பெரும்பான்மை சமூகத்தைத் திருப்திப்படுத்தவில்லை என்கின்ற பிரச்சனை உள்ளது. பல பொருள்களுக்கு விலைகளை குறைப்போம், மின்சாரப் பட்டியலைக் குறைப்போம் என்று பட்டியல் இட்டார்கள். ஆனால் இவர்கள் எதுவும் செய்து காட்டவில்லை என்பதற்காக பெரும்பான்மைச் சமூகம் சற்றுத் தளம்பல் நிலையில் உள்ளது என்று ஆட்சியாளர்களுக்குத் தெரியும். இந்த அரசாங்கம் சரியான முறையில் வைரஸ் தாக்கத்தைக் கையாளாதமையினால் எல்லா கட்சியினரும் இவர்களுக்கெதிராக பேசிக் கொண்டிருக்கின்றார்கள்– என்றார். (ப-150)




# கூட்டுறவைப் பலப்படுத்த வேண்டும்

## சுயேச்சைக் குழு பேச்சாளர் தேவராஜா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 16
பட்டம் சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழு 2 இல் இருந்து தெரிவுசெய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எமது மண்ணுக்குரிய உள்ளூர் உற்பத்திகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கி, அவற்றைக் கூட்டுறவைப் பலப்படுத்துவதன் மூலம் வளர்த்தெடுப்பர் என யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் பட்டம் சின்னத்தில் சுயேச்சைக் குழு 2 இல் போட்டியிடும் மக்கள் மேம்பாட்டு ஐக்கிய முன்னணியின் பேச்சாளரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான சோ. தேவராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

எம்மை நாம் வளர்த்துக்கொள்வதற்கு எம்முடைய சுதேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது மிகவும் அவசியம். அதற்கு எமது மண் வளத்தையும், நிலத்தடி நீரையும் பாதுகாப்பதுடன், உள்ளூர் கலை, இலக்கியங்களையும் பாதுகாத்துப் பரவலடையச் செய்யவேண்டும். இதுவரை தெரிவுசெய்யப்பட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இவற்றில் கரிசனை காட்டியதாகத் தெரியவில்லை. அவர்கள் வெறுமனவே தமிழ் தமிழ் என்று கூச்சலிட்டார்களே தவிர, தமிழ் மொழியின் வளர்ச்சிக்கோ, தமிழர் கலைகளின் பாதுகாப்புக்கோ, தமிழ் எழுத்தாளர்கள் கலைஞர்களின் உயர்ச்சிக்கோ எதையும் செய்யவில்லை. எமது நிலம் நஞ்சாக்கப்படுகிறது. எமது நீர் மாசுபடுத்தப்படுகிறது, எமது காடுகள் அழிக்கப்பட்டு சுற்றுச்சூழல் சிதைக்கப்படுகின்றன. கடல் வளம் கொள்ளையிடப்படுகின்றது. கலாசாரம் சீரழிக்கப்படுகின்றது. கல்வி திட்டமிட்டு தரங்குறைக்கப்படுகின்றது – என்றார். (ப)

# தேர்தலின்போது மட்டும் இனவாதம் கண்களை மறைத்து விடுகின்றது

## ஐ.ம.ச வேட்பாளர் அப்துல் ரஹ்மான்

மட்டக்களப்பு, ஜூலை 16
தேர்தல் வரும் போது மாத்திரம் மக்கள் மத்தியில் பிரதேசவாதம், ஊர்வாதம், இனவாதம் கண்களை மறைத்து விடுகின்றன. நம்மை அறியாமலே நாம் ஆட்பட்டு விடுகின்றோம் என நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் வேட்பாளருமான பொறியியலாளர் அப்துல் ரஹ்மான் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாடாளுமன்றத் தேர்தல் முன்னோக்கியுள்ள காலம் சவால்களுக்குரியது கவலைக்குரிய விடயம் என்று புரிந்து கொள்கின்றோம். இங்கு வீதிகள், சந்திகளில் சண்டித்தனம் பேசி விட்டு அங்கு சரணடைபவர்கள் மக்கள் பிரதிநிதியாக முடியாது. எமக்குத் தேவை அறிவுபூர்வமாகக் கையாளும் அரசியல். இந்த நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைக்கு மத்தியில் ஒட்டுமொத்த முஸ்லிம்களுக்கு அறிவுபூர்வமாக, ராஜதந்திரமாக, புத்திசாலித்தனமாகக் கையாளும் அரசியல் தலைமை எமக்குத் தேவை. கடந்த காலங்களில் நாம் தெரிவு செய்த அரசில் தலைமைகள் நடந்து கொண்ட விதமும், விடயங்களைக் கையாளும் விதங்களும் கூட எமது சமூகத்தின் மீது சுமையாக, பழியாக மாறியுள்ளது. தேர்தல் வரும் போது பிரதேசவாதம், ஊர்வாதம், இனவாதம் தமது கண்களை மறைத்து விடுகின்றன. நம்மை அறியாமலே நாம் ஆட்பட்டுவிடுகின்றோம். மக்களாகிய நாம் அரசியல் என்று வரும் போது தெளிவான உண்மையைப் புரிந்து கொள்வதற்குத் தடுமாறுகின்றோம். அரசியல்வாதிகள் தங்களது இலாபத்திற்காக பிரதேச வாதத்தை வளர்த்துக் கொண்டிருக்கின்றார்கள். நான் தலைமை தாங்கும் அரசியல் மனிதநேய அரசியல் – என்றார். (ப)

# எமது மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்

## கூட்டமைப்பு வேட்பாளர் வேண்டுகோள்

மட்டக்களப்பு, ஜூலை 16
வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் இந்த அரசாங்கக் காலத்தில் முன்னர் அனுபவித்த கஷ்டங்களை மீண்டும் எதிர்கொள்ளாத வகையில் எமது மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். இல்லையேல் எமது நிலைமை கைமீறிப் போகும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு வேட்பாளர் சட்டத்தரணி ந.கமலதாசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரசியல் செயற்பாடுகளில் ஈடுபாடு குறைவு, பொருளாதார அபிவிருத்தியில் துணிந்து செயற்பட சாதக சூழலின்மை, வாழ்வாதாரத்தை நிலை நிறுத்த முடியாமை, வேலைவாய்ப்பின்மை, போசாக்கின்மை, பிறப்பு வீத வீழ்ச்சி மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம், போதை வஸ்துப் பாவனை, இளம் குடும்ப விவாகரத்துக்கள் அதிகரிப்பு, பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள், முன்னாள் போராளிகள் எதிர்கொள்ளும் சவால்கள், சுற்றாடல் பிரச்சினைகள், பொதுச் சுகாதாரப் பாதிப்புக்கள், சட்டவிரோத மணல், கனியவள அகழ்வுகள், காடழிப்பு, காணி அபகரிப்பு, சட்டவிரோத குடியேற்றம், உற்பத்திகளை சந்தைப்படுத்தலில் இடைத்தரகர்களின் சுரண்டல்கள், வசதிகள் வழங்கலில் பாரபட்சம், வளங்கள் சமமாகப் பங்கிடப்படாமை, இன, மத, பிரதேச முரண்பாடுகள் ஆகிய சவால்களை வெற்றிகொள்ள, அரசியல் அனுபவசாலிகள், கல்விமான்கள், துறைசார் புலமைசாலிகள், தொழில் விற்பன்னர்கள், மதத்தலைவர்கள் மற்றும் சட்ட ரீதியான உள்நாட்டு, வெளிநாட்டு அனுசரணைகளுடன் எனது சட்டத்துறை அறிவையும் அனுபவத்தையும் முழுமையாகப் பயன்படுத்தி வெளிப்படைத்தன்மையுடன், பொறுப்பாண்மையோடு, சனநாயக விழுமியங்களுக்கூடாக செயலாற்ற ஆதரவையும், ஒத்துழைப்பையும், ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் பெருமனதுடன் எதிர்பார்க்கிறேன் – என்றார். (ப)

# கூட்டமைப்பு மக்களை திருப்திப்படுத்தவில்லை

## அதனாலேயே அதைவிட்டு வெளியேறினாராம் ரூபன்

திருகோணமலை, ஜூலை 16
வட ,கிழக்கு தமிழ் மக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திருப்திப்படுத்தாமையும் நம்பிக்கையை ஏற்படுத்தாதமையுமே கட்சியை விட்டு வெளியேறக் காரணம். அதனாலேயே தேசியக் கூட்டணியை உருவாக்க வேண்டியதன் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் திருகோணமலை மாவட்ட முதன்மைவேட்பாளரும் முன்னாள் போராளியுமான ரூபன் என்று அழைக்கப்படும் ஆத்மலிங்கம் இரவிந்திரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பலர் வெளியேறியுள்ளார்கள். ஐந்து கட்சிகள் இணைந்து பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியாகக் களமிறங்கியுள்ளோம். அவர்களுடைய கடந்த காலச் செயற்பாடுகள் மந்த கதியில் இருந்தது. நாங்கள் ஒருமித்து வாக்களித்தால் திருகோணமலையில் செழிப்புமிக்க மாவட்டமாகவும் நாடாளுமன்றம் அனுப்புகின்ற போது எமது மக்களுடைய பிரச்சினைகளுக்கான தீர்வையும் அரசியல் அதிகாரங்கள் ஊடாக தீர்த்து வைக்க முடியும் – என்றார். (ப)

# உண்மையை ஒருநாள் உணர்வீர்கள்!

## கம்பவாரிதிக்கு ஒரு பகிரங்க மடல்

*அன்பு நண்பன் ஜெயராஜுக்கு!*

பெற்றோர், உடன் பிறந்தோர் மற்றும் ஏனைய உறவுகள் போலவேதான் நட்பும் என்ற விடயத்தில் நான் மிகுந்த நம்பிக்கையுடைய வன். முன்னாள், இந்நாள் என்றெல்லாம் நண்பனைக் குறிப்பிட முடியாது. ஆகவே இக்கடிதத்தைப் படித்த பின்பும் தங்கள் மனதி லிருந்து எமது உறவு அறுந்து போகாது என்ற முழு நம்பிக்கையுடன் இத்திறந்த மடலை எழுதுகிறேன். இக்கடிதத்தை எழுத நேர்ந்த மைக் காக காலத்தைத்தான் சபிக்கின்றேன். "துலையப் போகிறது நம் இனம்", என்று எந் தக் காலத்திலும் என் மனதின் உள்ளுணர்வு சொல்லாது நாக்கும் உச்சரிக்காது பேனாவும் எழுதாது.

நானும் நீங்களும் வெவ்வேறு பாதையைத் தெரிவு செய்தவர்கள். நீங்கள் எமது மொழிக் காக உங்கள் இளமைக் காலத்தை முழுமை யாக அர்ப்பணித்தவர். நான் எமது இனத்துக் காக மாற்று வழியொன்றைத் தேர்ந்தெடுத்த வன். நான் தேர்ந்தெடுத்த வழிமுறைக்கு முற் றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது என என் தலைவர் அறிவித்தார். ஆனாலும் என் இள மைக்காலம் எனக்கிட்ட பணியை மனச்சாட் சிப்படி செய்தேன். என் இளமைக்கால உழைப்பு முழுவதும் ஐயத்துக்கு அப்பாற்பட்டது என்ற திருப்தியை தங்கள் எழுத்துக்கள் மூலம் உணர்ந்து கொண்டேன். அதற்காக எனது நன்றிகள்.

*"நகுதற் பொருட்டன்று நட்பு மிகுதிக்கண்*
*மேற்சென்று இடித்தற்பொருட்டு"*

*(அதிகாரம் 78 குறள் 784)*

ஒரு நண்பனின் பண்பு என்பது அவனது நண்பன் தவறுவிடும் பட்சத்தில் அதனைக் கேலி செய்வதாக இருக்கக்கூடாது. மாறாக அவரது தவறு குறித்து விளக்கி வழிகாட்டுவ தாக அமைய வேண்டும் என்ற வள்ளுவரின் வாய்மொழி.

01. பிரபாகரனுடைய இருப்பு எவ்வளவு முக்கி யமாக இருந்ததோ இன்றைய சூழலில் சுமந்திரனின் இருப்பும் இன ஒற்றுமை யும் அந்தளவு முக்கியத்துவம் பெறுகின் றன. இந்த உண்மையை நிராகரிப்ப வர்களே இனத் துரோகிகளாம்.

02. இங்கு நடந்தது இன அழிப்புத்தான் என மாகாண சபையினூடு ஐ. நா. சபைக்கு இவர்களால் அனுப்பப்பட்ட மகஜர் என் னாயிற்று. அதனால் இன நன்மை நோக்கி ஒரு துரும்புதானும் அசைந்ததா?

எனத் தாங்கள் குறிப்பிட்டமைதான் நான் இப் பகிரங்கக் கடிதத்தை எழுத நேர்ந்தமைக்கான காரணம்.

"ஒரே ஒரு சூரியன்; ஒரே ஒரு சந்திரன்; ஒரே ஒரு எம்.ஜி.ஆர்.", என்று தமிழகத்தில் ஒருவர் குறிப்பிட்டார். அதுபோல் ஒரே ஒரு பிரபா கரன் தான். எந்தக் காரணத்தை முன்வைத்தும் அவரோடு எவரையும் ஒப்பிட முடியாது. பிர பாகரனை இந்தளவுக்கு வேறு எவரும் கேவ லப்படுத்தியதாக எனது 65 வயது அனுபவத் தில் எனக்கு நினைவில்லை என்பதை என் நண்பனுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனெனில் நம்மிடையே உள்ளது உண்மை யான நட்பு. இதனை விபரிக்க முன்னர் இரண் டாவது விடயத்துக்கு வருகின்றேன்.

இன அழிப்புத் தொடர்பாக வடக்கு மாகாண சபை ஏகமனதாக நிறைவேற்றி ஐ. நாவுக்கு அனுப்பிய மகஜர்பற்றிக் குறிப்பிட்டுள்ளீர்கள். இதன் காத்திரம், தேவை தங்களுக்குப் புரியா மல் போனது எமதினத்தின் துரதிர்ஷ்டமே. கம்பன் விழாக்களில் எத்தனையோ விடயங் கள் எடுத்துரைக்கப்படுகின்றன. அதில் முக்கி யமான ஒன்றான தசரதனின் புத்திர சோகத்தை நானும் உணர்கிறேன். இரட்டை இலக்க எண்ணிக்கையிலான நாடுகளின் உதவியுடன் எமது மக்களின் மீது தொடுக்கப் பட்ட இறுதி யுத்தத்தில் நிகழ்ந்த அவ லங்கள், இழப்புக்களை சந்தித்த மக்களுக்கு மட்டுமே தெரியும். இழப்பின் வலி துறவியான தங் களுக்கு உணர முடியாமற் போன துக்கு காலம்தான் குற்ற வாளி. பதினாறே வயதேயான எனது மகன் விரலைச்சூப்பியபடியே இறந்து கிடந்தான். தாங்கள் அந்தக் களத்தில் இருந்திருந்தால் துடிதுடிக்காமல் செத்த வாழ்வு கிடைத்தமை குறித்து எனக்கு ஆறு தல் கூறியிருப்பீர்கள். எறிகணைத் தாக்குதல் அவனது பிடரியில் பட்டதால் துடிப்பதற்கு தேவை இல்லாமல் போய்விட்டது.



எனது மிக நெருங்கிய உறவுகளில் நால் வரை இழந்தேன். அத்துடன், பொதுவில் அங்கே இருந்த எல்லோருமே எமது உறவுகள்தான். அங்கு நடந்த அவலங் களை எழுதப் பல நூறு நூல்கள் வெளி யிட வேண்டியிருக்கும். புதுக்குடியிருப் பிலோ, முல்லைத்தீவிலோ ஓர் எண் ணெய்க் கிணறு இருந்திருந்தால் ஒரு வேளை எமது மக்கள் சர்வதேச நாடுகளால் காப்பாற்றப்பட்டிருப்பார்கள் என கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு அனுப்பியிருந்த கடிதத் தில் நான் குறிப்பிட்டிருந்தேன். தாம் தயாரித்த மனிதப் பேரழிவு ஆயுதங்களின் அதியுச்ச பயன்களை அறிந்து கொள்ளும் ஒரு களமா கவே இக்களத்தை ஆயுத உற்பத்தி நாடுகள் நோக்கினஎன்றும் அதில் குறிப்பிட்டிருந்தேன். இந்த ஆணைக்குழுவினால் பயன் விளை யும் என்று எண்ணி இதனை நான் அனுப்ப வில்லை. ஆனால், அந்தந்த காலத்திற்குரிய பதிவுகளைச் செய்ய வேண்டும். அது போன் றதே வடக்கு மாகாண சபையின் தீர்மானம். வம்ச விருத்தியைக் கருத்திற்கொண்டே திரு மணங்கள் நடைபெறுகின்றன. அது கிடைக் காவிடினும் முதுமைக்கான நட்பு, துணை கிடைத்து விடுமே. பிள்ளை பிறக்கவில்லை என்பதற்காக திருமணம் முடித்ததால் உனக்கு என்ன பயன்கிடைத்தது என்று கேட்க முடியுமா?

வட மாகாண சபையில் ஏகமனதாகத் தீர்மா னம் நிறைவேற்றியதைத் தொடர்ந்து சீற்றமுற் றார் சுமந்திரன். தனது சகாக்கள் மூலம் முத லமைச்சர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மா னம் கொண்டுவர ஏற்பாடு செய்தார். ஜெனி வாவுக்கு இவர் அரசு தரப்புப் பிரதிநிதியாகச் செல்வதாகத் தமிழ் மக்களுக்கு சொல்ல வில்லை. பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதி யாகச் செல்வது போல நடித்து ரணிலின் அரசைக் காப்பாற்ற தலா இரு வருடம் என இருமுறை கால அவகாசம் பெற ஏற்பாடு செய்தவர் சுமந்திரன். இவரது மண்டை கழுவு தலில் அவிந்து போனார்கள் சில புலம்பெயர் அமைப்பினர். அரசுக்கு கேடு தரக்கூடிய எதையும் நாம் செய்ய மாட்டோம் என இவர் சொல்லும் காணொலிகள் தற்போது வெளிவ ருகின்றன. இந்த விடயத்தைத் தாங்கள் கவ னத்தில் கொள்ளவில்லை என்பது கவ லைக்குரியது. என்னைப் பொறுத்தவரை இதன் பாதிப்புப் பற்றி தங்களால் புரிய முடிய வில்லை. எப்போதும் பாதிக்கப்பட்ட மக்களின் தரப்பில் இருந்தே விடயங்களை அணுக வேண்டும். தமிழருக்குக் கேடு தரக்கூடிய விட யங்களைப் புரிந்த இவரை இனி எங்கேயும் பிரபாகரனுக்கு அடுத்த பெயராக உச்சரிக்கா தீர்கள் என்பதே எமது மக்களின் பெயராலும் எங்கள் தனிப்பட்ட நட்பினைக் கவனத்திற் கொண்டும் வேண்டுகின்றேன்.

சிவனே என்று தானும் தன்பாடும் என்றிருந் தவர் நீதியரசர் விக்னேஸ்வரன். அவரைக் கம்பன் கழகத்தின் பெருந்தலைவராக்கினீர் கள். 2009 பேரழிவின் பின்னர் கொழும்பில் நடைபெறவிருந்த கம்பன் விழா தொடர்பாக ஏற்கனவே நீதியரசர் ஒரு விடயத்தைத் தங்க ளின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

(மறுபக்கம் பார்க்க)



# உண்மையை......

**உண்மையில் இலங்கைத் தமிழரைப் புரிந்து கொண்டு இத்தனை ஆண்டுகள் கம்பன் கழகத்தை வழிநடத்தியது மாபெரும் சாதனைதான். பட்டிமன்றத்தினை கட்டணச் சீட்டினைப் பெற்றுக் காணும் ஒரு வரலாற்று அற்புதத்தை எமது நாட்டில் நிகழ்த்தியவர் நீங்களல்லவா...!**

நிகழ்வின் ஆரம்பத்தில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த எமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த வேண்டும் என்றார் அவர். தாங்களோ அங்கே படையினர், புலிகள், பொதுமக்கள் என எல்லோருமே உயிரிழந்தனர். ஆகவே, அங்கு உயிரிழந்த அனைவருக்குமாக அஞ்சலி செலுத்தலாம் என்றீர்கள். அவரோ புலிகளுக்கென்று மாவீரர் நாள் உண்டு; படையினருக்கு இராணுவ தினம் உண்டு; ஆகவே, பொது மக்களுக்கு மட்டுமே அஞ்சலி செலுத்த வேண்டும் என்றார். ஆனால், நிகழ்வில் தாங்கள் கூறியபடியே சகலருக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது. சற்றுத் தாமதமாக வந்த நீதியரசர் இதனை அறிந்ததும் கம்பன் கழக பெருந்தலைவர் பொறுப்பில் இருந்து விலகுகிறேன் எனக் கடிதம் எழுதிக் கொடுத்து விட்டுப் புறப்பட்டார். இந்தத் தகவலும் நம் இருவருக்கும் பழக்கமான எமது ஊர் பிரமுகர் எனக்குச் சொன்னது.

வட மாகாண சபையின் முதல்வராக விக்னேஸ்வரன் வர வேண்டும் எனப் பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்தவர் தாங்கள். சூழ்ச்சியும், வஞ்சகமும் நிறைந்த படுகுழிதான் அரசியல். ஜெயராஜ் விசயம் விளங்காமல் அப்பாவியான அவரை இப்படுகுழியில் தள்ளப் பார்க்கிறாரே என அப்போது நான் நினைத்தேன்.

உண்மையில் இலங்கைத் தமிழரைப் புரிந்துகொண்டு இத்தனை ஆண்டுகள் கம்பன் கழகத்தை வழிநடத்தியது மாபெரும் சாதனைதான். பட்டிமன்றத்தினை கட்டணச் சீட்டினைப் பெற்றுக் காணும் ஒரு வரலாற்று அற்புதத்தை எமது நாட்டில் நிகழ்த்தியவர் நீங்களல்லவா...! எனவே, நீங்களே முதல்வராகியிருக்கலாமே. அப்பாவியான நீதியரசரை ஏன் இப்படுகுழியில் தள்ளுகிறார் என நான் நினைத்ததுண்டு. நீங்கள் போட்டியிட்டிருந்தால் விருப்பு வாக்குக்காக அனந்தி சசிதரனுக்கு எதிராக சொந்தக் கட்சியினரே தேர்தலன்று செய்த மோசடிகள் இடம்பெற்றிருக்காது.

நீதியரசரை அரசியல் படுகுழிக்குள் தள்ளிவிட்டுப் பின்னர் தூற்றுவது அறமல்ல என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். தாங்கள் முதலமைச்சராவதற்கு துறவுநிலை ஒரு தடையல்ல, உத்தரப்பிரதேசத்தில் ஒரு துறவியே ஆட்சி நடத்துகிறார். அரசர்கள் யோகியாவதும் யோகிகள் அரசராவதும் வரலாறும் நமக்கு காட்டியிருக்கிறதுதானே.

எது எப்படி இருந்தாலும் காலம் தாழ்த்தியேனும் சுமந்திரனின் உண்மை முகத்தைப் புரிந்துகொள்வீர்கள். அப்போது நிச்சயம் நான் உங்கள் பக்கம் நிற்பேன். அப்போது தூற்றுபவர்களுக்கு ஜெயராஜ் ஏமாந்துதான் போனாரேயொழிய; ஏமாற்றுபவரல்ல என நான் உரத்துச் சொல்வேன்.

நாங்கள் ஏமாந்து போனோம் என்று சேர். பொன். இராமநாதன், ஜீ.ஜீ. பொன்னம்பலம், தந்தை செல்வா, அமிர்தலிங்கம், சம்பந்தர் போன்றோர் காலம்தாழ்த்தித்தான் உணர்ந்தார்கள். ஏமாந்ததைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டவர் தந்தை செல்வா ஒருவரே. அடுத்தவர் ஜெயராஜ் என்பது எதிர்கால வரலாறு என எனது உள்மனம் நம்புகிறது. புலிகளைப் பயங்கரவாதிகள் எனக் குறிப்பிட்டவர் சுமந்திரன். அதுவும் நீதி தேவதை ஆட்சி புரியும் மன்றில். அது ஆலயத்துக்கு சமமானதாக நம்பப்படுகிறது. இதன் மூலம் 35 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்களின் பெற்றோருக்கு உங்கள் மகன், மகள் பயங்கரவாதிதான் என உரத்துச் சொல்கிறார். அவரது பார்வையில் நானும் பயங்கரவாதி. நமது நண்பர் சிவகுமாரின் தம்பி சிவசங்கரும் அப்படியே. ஆதலால்தான் நாங்கள் உரத்துக் கூறுகிறோம், சுமந்திரன் ஒரு துரோகி என்று...

சுமந்திரனை ஏற்காதோர் துரோகிகள் என அர்த்தப்பட தாங்கள் சொன்ன கூற்றுக்காக என்றோ ஒருநாள் வருத்தப்படுவீர்கள்.

சுமந்திரனை விட்டால் நாதியில்லை எனத் தாங்கள் நம்புகிறீர்கள். உண்மையில் அவரை விடத் தகுதியானவர்களை கூட்டமைப்புக்குள் தலையெடுக்காமல் பார்த்துக் கொள்கிறார் அவர். யாழ். பல்கலைக்கழக துணைவேந்தராக இருந்த கலாநிதி மோகனதாஸ் இருக்கத்தக்கதாக யாழ். மேயர் ஆனல்ட்டே என அறிவித்தார் சுமந்திரன். முதல்வருக்கு எதிரான சதியை தனது சார்பாக முன்னெடுத்தமைக்கான சன்மானமே இது என ஏனைய அரசியல்வாதிகளுக்கு உணர்த்தினார். தாம் தேர்ந்தெடுத்த முதல்வருக்கு எதிரான சதியை முன்னெடுத்த ஆனல்ட்டுக்கு முன்னால் தமது அன்புக்குரிய துணைவேந்தர் சாதாரண உறுப்பினராக இருப்பதை விரும்பாதமையால்தான் அரியாலை கிழக்கு மக்கள் அந்த வட்டாரத்தில் கூட்டமைப்பைத் தோற்கடித்தனர். உண்மையில் இன ஒற்றுமையை தகர்த்தவரும் சுமந்திரனே.

சுமந்திரன் மூலம் வேட்பாளர் பட்டியலில் இடம்பிடித்தாலும் அவருடன் சேர்ந்து நின்றால் தோல்வி உறுதி எனத் தெரிந்ததால்தான் ஆனல்ட் கழன்று கொண்டார். இது விளங்காமல் ஆனல்ட் மீதும் கோபம் கொள்கிறீர்கள் நீங்கள்.


இன்று தன்னைவிட தவராசா புகழ் பெற்றுவிடுவார் என்பதற்காகவே அவர் தலையெடுக்காமல் பார்த்துக் கொள்கிறார் சுமந்திரன். தேசியப் பட்டியலில் முதலாவது தெரிவு அம்பிகா என அறிவித்ததன் பின்னணி இதுதானே தவிர ஒரு பெண்மணி பாராளுமன்றம் செல்ல வேண்டும் என்பது சும்மா விடும் கதைதான். சுமந்திரன் பற்றி படம் எடுப்பதானால், சிங்கம் 1, 2, 3 போன்று பாகம் பாகமாகத்தான் எடுக்க வேண்டும். எனது நண்பரே இதெல்லாம் புரிய உங்களுக்கு சில காலம் செல்லும்.

வேறென்ன! பழைய நினைவுகள் இன்னமும் பசுமையாக உள்ளன. ஒரே வீட்டில் நாங்கள் இருந்ததும் அந்த வீட்டில் நீங்கள் சமைத்துத் தந்த சாப்பாடும் மறக்க முடியாதவை. எனது திருமணத்தின் பின் நல்லூரில் இருந்த வீட்டுக்கு வரவழைத்து தங்கள் பெற்றோருக்கு எம்மை அறிமுகப்படுத்தி விருந்தளித்தமையை என்றும் மறக்கமாட்டேன்.

இக்கடிதத்தின் ஆரம்பத்தைப் பார்த்த உடனே இது யார் எழுதியது எனப் புரிந்திருப்பீர்கள். எழுதியது எதைப் பற்றி என்பதை விட யார் எழுதினார் என்பதை வைத்தே விமர்சனம் செய்யும் பாங்கு எமது சமூகத்தில் உண்டு. எனவே பெயர் போட வேண்டிய தேவை இல்லைத்தானே.

*இவ்வண்ணம்,*
*அன்பின் நண்பன்.*

# மக்களை நேசித்த சேவையாளன் ரங்கராஜா



செல்வராஜா ரமேஸ்
(உள்ளூராட்சி உதவியாளர்
பிரதேச சபை, காரைநகர்)

வடக்கு கிழக்கு (இணைந்த) மாகாணம், வடக்கு மாகாணம் என்பவற்றின் பிரதம செயலாளராகக் கடமையாற்றி முழுமக்களுக்கும் நிறைவான பெருஞ்சேவை செய்த மாகாண நிர்வாகி இளைப்பாறிய சிவகுருநாதன் ரங்கராஜா கடந்த மாதம் 15 ஆம் திகதி அன்று இறைவனடி சேர்ந்தது இன்றும் மறக்க முடியாத நிகழ்வாக உள்ளது.

அமரர் ரங்கராஜா சேவைக்காலத்தில் வடக்கு கிழக்கு மக்களுக்கு மட்டுமன்றி, அகில இலங்கை மக்களும் பயன் அடையக்கூடிய சேவைகளை அர்ப்பணிப்பான சிந்தனையுடன், முழு வீச்சுடன் முன்னெடுத்த அதிகாரியாக யாவர்க்கும் பயனுள்ள மனிதனாகப் பரிணமித்தார்.

வடக்கு கிழக்கு மக்களுக்கு அசாதாரண சூழ்நிலையில் முழு நேரமும் மக்களின் நிலைபேறான வளர்ச்சி அபிவிருத்திக்காக தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய பெருமகனாக உலாவந்தார்.

நிர்வாகத் துறையில் அடியெடுத்து வைத்த ரங்கராஜா திட்டமிடல் துறையில் அகல கால்பதித்து அத்துறை ஊடாக அழிவடைந்த வடக்கு கிழக்கு மாகாணத்தை மீளெழச் செய்த நிர்வாகியாக இருந்தார்.

இலங்கை நிர்வாக சேவையில் பலர் வருவார்கள், போவார்கள். ஆனால் ரங்கராஜாவின் வடக்கு கிழக்கு நிர்வாகக் காலம் என்பது பொன் எழுத்துக்களால் பொறிக்கக்கூடிய பொற்காலமாகப் பதிவு பெற்றுள்ளது.

இலங்கையில் வரலாற்றுச் சிறப்புக்கொண்ட பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோயில் கொண்டமைந்த பொன்னாலையில் 02.02.1949 இல் பிறந்தார்.

கலைமாணி, வர்த்தகமாணி, விஞ்ஞான முதுமாணிப் பட்டங்களைப் பெற்றுக் கொண்ட அமரர் சி.ரங்கராஜா 1977 இல் இலங்கை நிர்வாகசேவைக்குத் தெரிவு செய்யப்பட்டு அட்டாளைச்சேனை, சம்மாந்துறை பிரதேச செயலகங்களிலும் பின்னர் அம்பாறை மாவட்டச் செயலகத்திலும் உதவி மாவட்டச் செயலராகக் கடமையாற்றினார்.

பின்னர் வவுனியா மன்னார் மாவட்டச் செயலகங்களில் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றினார். இவ்வாறு செவ்வனே பணியாற்றி வந்தவேளையில் வடக்கு கிழக்கு மாகாணத்தின் பிரதிப் பிரதம செயலாளர் திட்டமிடல் என்ற பெரும் பதவியைப் பெற்று தனது மக்கள் பணியை ஆரம்பித்தார். நலிவுற்ற மக்களுக்கான திட்டங்களை இரவு பகலாக ஆராய்ந்து முன்னெடுத்த சேவையாளனாக வடக்கில் பெயர் பெற்றார்.

அதன்பின்னர் வடக்கு கிழக்கு மாகாணத்தின் ஆளுநரின் செயலாளராகக் கடமையாற்றி மக்களுக்கும், அரச பணியாளர்களுக்கும் முழுமையாக சேவையை முன்னெடுத்த ஓர் திட்டமில் நிர்வாகியாக வலம் வந்தார்.


நீர்ப், நீக்கொட், நியாப், நேர்ப், நெக்டெப், பீஸ் போன்ற இன்னோரென்ன கருத்திடங்களை முன்வைத்து செயற்படுத்திய செயல்வீரனாக இனம் காணப்பட்டார்.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற வெளிநாட்டு நிதி நிறுவனங்களுடன் எமது தேசங்களின் நிலமைகளை முன்னிறுத்தி நியாயப்படுத்தி பல உட்கட்டுமான கருத்திட்டங்களை முன்னிறுத்திய திட்டமிடலாளன் அவர். தனது அர்ப்பணிப்பான சேவைகளை மக்களுக்காக முன்னெடுத்த செயல் வீரனாக திகழ்ந்த ரங்கராஜாவை இன்று இழந்துள்ளோம்.

நிர்வாகப்பணி, திட்டமிடல்பணி, சமூகப்பணி, ஆன்மீகப் பணி, புதிய ஆளணிகளை காலத்துக்குக் காலம் உருவாக்கும் பணி என அவரது சேவை நீண்டு கொண்டே முடிவிலியாகச் செல்லும். எல்லோர் மனங்களிலும் தன் சேவையால் நிறைந்த மனிதமாணிக்கத்தை என்றும் மனதிற்கொள்வோம்.

# ஆடிப் புதுக்கூழ் தேடிக் குடிப்போமே!

■ கே. எஸ். சிவஞானராஜா



*"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப்பனங்கட்டி கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே"*

ஆடிப்பிறப்பை வரவேற் கும் இந் தப்பாடல் தங்கத் தாத்தா என அழைக்கப்படும் நவாலியூர் சோமசுந்தரப் புலவரால் பாடப்பட்டது. சிறுவர்களும், பெரியவர்களும், பல்லு விழுந்த தாத்தா பாட்டிமாரும் பாமர மக்களும் இரசித்துச் சுவைத்து உள்ளம் பூரிக்குமாறு ஆடிப் பிறப்பன்று காய்ச்சப்படும் ஆடிக் கூழ் மணக்க மணக்க வாயூறும்படியாகக் வன்னப்பலா இலை கோலி மடித்து அள்ளியும், கிள்ளியும் சொல்லியும் குடிக்கப்படும்.
ஒவ்வொரு வீட்டிலும், அம்மாமார் அனைவரும் ஆடிப் பிறப்பன்று தெய்வப் பெண்கள் போல, தோய்ந்து குளித்து தலைவாரிப் பூச்சூடி தோய்த்துலர்ந்த ஆடை உடுத்து கும்குமப் பொட்டுவைத்து இறைவன், இறைவி, தேவர்கள் யாவரையும் வணங்கி மகிழும்படியாக பொதுப் பொலிவுடன் ஆடிப்பிறப்பை வரவேற்பார்கள்.
தேவர்களுக்கு ஒரு வருடம் ஒரு நாளாகக் கருதப்படுவதால் தை மாதம் தொடக்கம், ஆனிமாதம் வரை பகலாகவும், ஆடி மாதம் தொடக்கம், மார்கழிமாதம் வரை இரவாகவும் இருக்கும் இது உத்தராயணம், தட்சணாயனம் என்பதாகப் போற்றப்படும். இந்த இரண்டுக்கும் இடையேயுள்ள காலத்தைப் பேறாக்குவதும், ஆயுளை நூறாக்குவதும் பாவதோசங்களை நீறாக்குவதும், ஆடியாகும். தேவர்களின் ஆசீர்வாதம் கிடைப்பதற்காகவே ஆடிப்பிறப்பு, ஆடிச் செவ்வாய், ஆடிச் சுவாதி, ஆடிக் கிருத்திகை, ஆடி அமாவாசை, ஆடிவேல்,ஆடி வெள்ளி, ஆடிப்பால், ஆடி விதை, ஆடிப்பெருக்கு ஆடிப் பதினெட்டு, ஆடிப்பூரம், ஆடிக்குருவி, ஆடித் தபசு, ஆடித் துளசி, ஆடிப்பிறை, ஆடி உழவு, ஆடிப் பௌர்ணமி, ஆடித் தீர்த்தம் என ஆடி மாதம் கோடி பெறும் .நாடித்தேடித் தொழுவார் பால் சௌபாக்கியம் ஓடியே கூடிவரும். எனவே ஆடி மாதத்தைப் பேணி நடப்பதற்கு வாலாயமாக ஆடி மாதப் பிறப்பு நமக்கு பேறகிறது. இப்போதைய அவசர உலகிலே ஆடிக்கூழ் எப்படிச் சாத்தியமாகும்? ஒரேயடியாகக் காலையிலே காய்ச்சி குளிர்சாதனப் பெட்டியில் அடக்கமாக மூடிவைத்து விட்டால், அவரவர் விரும்பியவாறு, விரும்பிய நேரத்தில் குடிக்கலாம் . பலாவிலை தேடிப்பொறுக்கி கோலி எடுத்து அம்மா அகப்பையால் துலாவி அள்ளியள்ளி வார்க்க நேரமிருக்காது, பொறுமையுமிருக்காது. எது எப்படியிருந்தாலும் தயவுசெய்து ஆடிப் பிறப்பன்று எல்லோரும் ஒன்றாக இருந்து ஆடிக் கூழை அள்ளி வார்த்துக் குடிக்க முயன்றுபாருங்கள். அது சாத்தியமாகாது போனால் கவலைப்படவேண்டாம். எல்லாவற்றுக்கும் மேலாக நவாலியூர் சோம சுந்தரப் புலவர் ஆடிப்பிறப்புக்குரிய பாடலையாவது கூழ் குடிப்பதற்கு முன்னதாக ஒரு முறையோ இரு முறையோ பாடுவீர்களாயின் நீடித்த ஆயுள், ஆரோக்கியம் பெறுவீர்கள். வானவரும் வந்து இரசிப்பர்.

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப் பனங்கட்டி கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே

பாசிப் பயறு வறுத்துக் குத்திச் செந்நெல்
பச்சை அரிசி இடித்துத் தெள்ளி
வாசப் பருப்பை அவித்துக் கொண்டு நல்ல
மா வைப் பதமாய் வறுத்தெடுத்து

வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரிற் சர்க்கரையும் கலந்து
தோண்டியில் நீர் விட்டு மாவை அதில் கொட்டி
சற்றுக் குழைத்துத் திரட்டிக் கொண்டு

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித் தட்டி
வெல்லக் கலவையை உள்ளேயிட்டு
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே

பூவைத் துருவி பிழிந்து பனங்கட்டி
போட்டு மாவுருண்டை பயறுமிட்டும்
மாவைக் கரைத்தம்மா வாரத்துத் துழாவுவாள்
மணக்க மணக்க வாயூறிடுமே

குங்குமப் பொட்டுக்கு பூமாலை சூடி
குத்து விளக்கு கொழுத்தி வைத்து
அங்கிளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப்படைப்பும் படைப்போமே

வன்னப் பலாவிலை ஓடிப்பொறுக்கியே
வந்து மடித்ததைக்கோலிக் கொண்டே
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க
ஆடிப் புதுக் கூழ் குடிப்போமே

வாழைப்பழத்தை உரித்துத் திண்டோம்
நல்ல மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச்சுட ஊதிக் குடித்து
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே!

# தோற்றாலும் மாற்றமில்லை மக்கள் பணியில்!

■ நேர்கண்டவர்: இரா.புத்திரசிகாமணி



ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் யாழ் மாவட்டத்தில் தேர்தலில் களமிறங்கியுள்ள 'கிருபா லேணர்ஸ்' நிறுவன அதிபரான கிருபாகரனுடனான செவ்வி இங்கு பிரசுரமாகின்றது.

**கே**: யாழ்.நகரில் ஒரு பிரபல தொழில் அதிபராகவும் வர்த்தகராகவும் இருக்கும் நீங்கள் எப்படி அரசியலில் பிரவேசித்தீர்கள்.

**ப**: எனது அரசியல் பிரவேசம் எதிர்பாராத வகையில் ஏற்பட்ட ஒரு திருப்பம். நான் மாத்தளையில் பிறந்து வவுனியாவில் வளர்ந்து யாழ்ப்பாணத்தில் தொழிலை ஸ்திரப்படுத்திக்கொண்டவன். வாழ்க்கையின் அடிமட்டத்தில் இருந்து வந்தவன். யாழ்ப்பாணத்தில் நடத்திவரும் சாரதிப் பயிற்சி நிறுவனத்தின் பிரதிநிதியாக கொழும்பில் இயங்கும் அகில இலங்கை சாரதியப் பயிற்சி நிறுவனங்களின் யாழ்.பிராந்திய முகவராக நியமிக்கப்பட்டேன். எங்கள் அமைப்பு தொடர்பான சங்கக் கூட்டங்களில் கலந்து கொள்ளும்போது சஜித் பிரேமதாசவுடன் தொடர்புகள் ஏற்பட்டன. சஜித் பிரேமதாச தனியாக ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கியபோது நான் யாழ்.-கிளிநொச்சி மாவட்ட நேரடி வேட்பாளராகத் தெரிவுசெய்யப்பட்டேன். இது ஒரு திடீர் திருப்பம்.

**கே**: சஜித் பிரேமதாச ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிநிதியாகவே போட்டியிட்டு பெருமளவிலான வாக்குகளைப் பெற்றார். ஆனால் இன்று நிலைமை அப்படி இல்லை. ரணில் சஜித் அணி என இரண்டாகப் பிரிந்து வாக்கு கேட்கின்றீர்கள். முன்பு இருந்த அதே ஆதரவு இப்பொழுது கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றீர்களா?

**ப**: தனித்தனியாகப் பிரிந்து வாக்கு கேட்டாலும் சஜித் பிரேமதாஸவுக்கான ஆதரவு இன்றும் குறையவில்லை. அதேவேளை எனக்கு இளைய தலைமுறையினரின் ஆதரவுநிறையவுண்டு. குறிப்பாக இளைஞர் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் சமூகப் பெரியார்களின் தனிப்பட்ட ஆதரவு இருக்கின்றது. கடந்த காலங்களில் செய்த சமூகப்பணிகளும் கைகொடுக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

**கே**: அரசியலில் ஈடுபடும் நோக்கத்துடன்தான் நீங்கள் ஏற்கனவே திட்டமிட்டு சமூகப்பணிகளில் ஈடுபட்டீர்களா?

**ப**:பெரும்பாலான பாடசாலைகளுக்கு இயன்றவரை நிதியுஉதவிகளை வழங்கி உள்ளேன். விளையாட்டு மைதானங்களை அமைப்பதற்கும், விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கும் பங்களிப்புச் செய்துள்ளேன். கற்றல் உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்களையும் வழங்கி உள்ளதோடு பல கோயில் திருப்பணிகளுக்கும் உதவிகளைச் செய்துள்ளேன். இவை எல்லாம் திட்டமிட்டு செய்தவை அல்ல. எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல் செய்த பணிகள்.

**கே**: நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டால் நீங்கள் மேற்கொள்ளப்போகும் செயற்றிட்டங்கள் என்ன?

**ப**: முதற்கட்டமாக இளைஞர்கள் மத்தியில் பரவி வரும் போதைப்பொருள் பாவனை,சட்டவிரோத வாள்வெட்டுச் சம்பவங்கள் ,சமூகச் சீர்கேடுகள் என்பவற்றை இல்லாதொழிக்க அரச உதவியுடன் நடவடிக்களை மேற்கொள்வேன். இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள், சுயதொழில் வாய்ப்புகள், பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு நிரந்தரமான வாழ்வாதாரத்தை ஏற்படுத்தல் மற்றும் கல்வி,விவசாயம்,சுகாதார மேம்பாட்டுத்திட்டங்களையும் மேற்கொள்வேன்.


**கே**:தேர்தல் முடிவு எப்படி இருக்கும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்.வெற்றிபெறுவீர்கள் என்ற நம்பிக்கையுள்ளதா?

**ப**:முடிவு எதுவானாலும் மக்களின் தீர்ப்பை ஏற்றுக் கொள்வேன். தேர்தலின் பின்னரும் நான் எனது பணிகளைத் தொடர்ந்து செய்வேன். அரசியல் பணிகளை மேலும் பலப்படுத்தி மக்களோடு மக்களாகவே இருப்பேன்.

# கொரோனாவால் குணமடைந்தோரிடம் 3 வாரமே எதிர்ப்பு சக்தி நீடிக்கும்

## லண்டனில் நடந்த ஆய்வில் தகவல்

கொரோனாவால் குணமடைந்தவர்களிடம் 3 வாரங்கள்வரை மட்டுமே நோய் எதிர்ப்பு சக்தி அதிகபட்ச திறனுடன் இருப்பதும் அதன் பின்னர் படிப்படியாகக் குறைந்து செல்வதும் கண்டறியப்பட்டுள்ளது.



இங்கிலாந்து தலைநகர் லண்டனில் உள்ள கிங்ஸ் கல்லூரி சார்பில் கொரோனாவால் குணமடைந்த 90க்கும் அதிகமானோரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

60 சதவீத நோயாளிகளுக்கு வலிமையான நோய் எதிர்ப்பு சக்தி இருந்தபோதிலும், 17 சதவீத நோயாளிகளுக்கு மட் டுமே 3 மாதங்கள் வரை நோய் எதிர்ப்பு சக்தி நீடிக்கின்றது. 3 மாத காலத்தில் நிறைய பேருக்கு நோய் எதிர்ப்பு சக்தி 23 மடங்கு குறைந்துவிட்டது. சிலருக்கு முற்றிலுமாக போய்விட்டது. குணமடைந்தவர்களுக்கு பருவநிலை மாற்றத்தின் போது, மீண்டும் கொரோனா தாக்க வாய்ப்புள்ளது என்றும் ஆய்வில் தெரியவந்துள்ளது. (ரி1)



## சட்டவிரோத பீடிகள் எரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

சட்டவிரோதமாக இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட பீடிக் கட்டுக்கள் உதவி மதுவரி ஆணையாளரின் பணிப்புரைக்கிணங்க மதுவரித் திணைக்களத்தினரால் எரித்து அழிக்கப்பட் டன.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி பி. ரகுநாதன் மற்றும் மதுவரி அத்தியட்சகர் கிருபாகரன் ஆகியோர் முன்னிலையில் யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் மயானத்தில் அந்தப் பீடிக்கட்டுகள் மண்ணெண்ணெய் ஊற்றி எரிக்கப்பட்டன.

கடந்த 26 ஆம் திகதி இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட ஒரு லட்சத்து 32 ஆயிரம் பீடிகள் வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப்பகுதியில் மதுவரித் திணைக்களத்தினரால் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டிருந்தனர். கைதுசெய்யப்பட்டவர்கள் புகையிலை வரி சட்டத்தின் கீழ் 2 லட்சம் ரூபா தண்டம் அறவிடப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

## டிராக்டர் சில்லில் சிக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஜூலை 16

மட்டக்களப்பு வெல்லாவெளி பகுதியில் உழவு இயந்திரத்தில் சிக்குண்டு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் மாலை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு வெல்லாவெளி 40ஆம் கிராமம் வம்மியடி ஊற்றைச் சேர்ந்த 56 வயதுடைய 4 பிள்ளைகளின் தந்தை ஒருவரே உயிரிழந்துள்ளார்.

உழவு இயந்திரத்தில் நெல் ஏற்றும்போது தவறுதலாக சறுக்கி வீழ்ந்து இயந்திரத்தின் முன் சக்கரத்தில் சிக்குண்டு உயிரிழந்துள்ளார் என்று வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் உழவு இயந்திரத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (ரி)

## சடலங்கள் மாறியதால் கிளம்பியது சர்ச்சை!

கொழும்பு, ஜூலை 16

வெளிநாட்டில் இருந்து நாட்டுக்கு அனுப்பப்பட்டிருந்த இரு சடலங்களில் ஒன்று தவறுதலாக அடக்கம் செய்யப்பட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை குவைத் நாட்டில் இருந்து சீல் வைக்கப்பட்டு இரு சடலங்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டிருந்தன. ஒரு சடலம் குவைத்தில் வாகன விபத்தில் உயிரிழந்த ஆண் ஒருவருடையது. மற்றையது குவைத்தில் இருதய நோயால் உயிரிழந்த பெண் ஒருவருடையது. இந்தப் பெண் நிக்கரவெட்டிய பிரதேச விகாரையின் தேரர் ஒருவரின் சகோதரி என்று தெரிவிக்கப்படுகின்றது.

நிக்கரவெட்டிய பிரதேச விகாரையின் தேரர் ஒரு சடலத்தைப் பொறுப்பேற்று நல்லக்கடம் செய்துள்ளார். உயிரிழந்த ஆணின் உறவினர்கள் நீர்கொழும்பு மருத்துவமனைக்குச் சென்றபோது அங்கிருந்தது பெண்ணின் சடலம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதனால் தேரரால் பொறுப்பேற்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்ட சடலம் தங்களின் உறவினரது என்று அவர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். அதையடுத்து அவர்கள் முரண்பட்டுள் ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பிரச்சினை கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்காக இரு தரப்பினரும் பொலிஸாரால் அழைக்கப்பட்டுள்ளனர். (எ)

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதன்படி நாளை வெள்ளி காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். மாவட்டத்தில்** கொடிகாமம், கறுக்காய், வாழைத்தோட்டம், கரம்பன், வரணி, கரம்பைக்குறிச்சி, சுட்டிபுரம், அம்மன் கோவிலடி, இயற்றாலை, நாவற்காடு, குடமியன், மிருசுவில் வடக்கு ஆகிய இடங்களிலும், **மன்னார் மாவட்டத்தில்** காலை 9மணியிலிருந்து மாலை 3மணிவரை சீனத்துறைமுகம், வங்காலை ஒரு பகுதி, முள்ளிப்பழம், தள்ளாடி, கடலேரி வீதி, சாந்திபுரம், Southbar, தரவன் கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.



## இன்றைய நாள்

**மேடம்:** மனதில் தெளிவு பிறக்கும். பெண்களுக்கு அலைச்சல் குறையும். பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வீர்கள். வியாபாரத்தில் முனைப்புடன் உழைக்கத் தொடங்குவீர்கள்.

**இடபம்:** அலுவலக நண்பர்களிடம் அதீத நம்பிக்கை வைக்க வேண்டாம். எதிலும் கவனமுடன் செயல்படவும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** சகோதர வகையில் சிறு சங்கடங்கள்வந்துநீங்கும். வியாபாரத்தில் உள்ள பிரச்சினைக்கு சுமுக தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும்.

**கடகம்:** வியாபாரத்தில் புது முதலீடு செய்வீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை கேட்டு நடப்பார்கள். பெண்களுக்கு மனதை அழுத்திக் கொண்டிருந்த பிரச்னைகள் விலகும். பிள்ளைகள் நல்ல செய்தி கொண்டு வருவார்கள்.

**சிம்மம்:** உறவினருடன் விட்டுக் கொடுத்து சென்று பிரச்னைகளை முடித்துக் கொள்வீர்கள். அலுவலகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்புடன் நடந்து கொள்வர்.

**கன்னி:** பெண்களுக்கு வீண் செலவுகள் ஏற்படும். பிள்ளைகளின் மூலம் மகிழ்ச்சிக் குறைவு ஏற்படலாம். பிறரை நம்பி வாக்குறுதி கொடுக்க வேண்டாம். வாகன மாற்றம் செய்யும் எண்ணம் மேலோங்கும்.

**துலாம்:** தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது. மனதில் இனம்புரியாத பயம் ஏற்படக்கூடும். அலுவலகப் பணிகளில் பல குறுக்கீடுகள் வந்தாலும் அதை சமாளித்து வெற்றி காண்பீர்கள்.


**விருச்சிகம்:** பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சிக்கனமாக செலவு செய்வீர்கள். அலுவலகத்தில் பணிச்சுமை சமாளிக்கும்படி இருக்கும்.

**தனுசு:** வியாபாரத்தில் மறைமுக போட்டிகளைச் சமாளித்து வெற்றி பெறுவீர்கள். அலுவலகத்தில் ஏற்பட்ட பிரச்னையை நினைத்து கவலைப்பட வேண்டாம்.

**மகரம்:** உணவு விஷயத்தில் கவனமாக இருந்தால் உடல் ஆரோக்கியம் மேம்படும். மகனுக்கு எதிர்பார்த்த வரன் அமைவதால் மனதில் உற்சாகம் கூடும்.

**கும்பம்:** பண விஷயங்களில் கவனமாக இருந்தால் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். கணவன்- மனைவி இடையே ஒற்றுமை கூடும்.

**மீனம்:** அலுவலகத்தில் எதிலும் பொறுமையை கடைப்பிடிப்பது நல்லது. வங்கியில் விண்ணப்பித்திருந்த கடனுதவி கிடைக்கும். பெண்கள் குடும்பத்தினரின் ஆதரவைப் பெற்று மகிழ்வர்.



# பட்லருக்கு வாய்ப்பு

லண்டன், ஜூலை 16
பட்லருக்குத் தொடர்ந்தும் டெஸ்ட் ஆட்டங்களில் வாய்ப்பு வழங்கப்படும் என்று இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் தெரிவித்துள்ளார்.
மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக நடந்த டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி தோல்வியடைந்தது. அதில் ஜோஸ் பட்லர் முதல் இன்னிங்ஸில் 35 ஓட்டங்களையும், இரண்டாம் இன்னிங்ஸில் 9 ஓட்டங்களையும் பெற்றார். பட்லர் கடந்த 12 டெஸ்ட் ஆட்டங்களில் ஒரு அரைச் சதம் கூடப் பெறாத நிலையில், அவர் மீது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அவர் 42 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி 31.46 என்ற துடுப்பாட்டச் சராசரியையே கொண்டுள்ளார்.
பட்லருக்கு அணியில் தொடர்ந்து வாய்ப்பளிக்க வேண்டுமா என்று பலரும் விமர்சித்துள்ள நிலையில், அவருக்குத் தொடர்ந்து வாய்ப்பு வழங்கப்படும் என்று இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் சில்வர்வுட் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
அவர் மீது நெருக்கடியைச் சுமத்த விரும்பவில்லை. அது அவருக்கு மேலும் அழுத்தத்தைக் கொடுக்கும். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த அவருக்கு வாய்ப்புக்கள் கொடுக்க விரும்புகின்றோம்.
ஆட்டத்துக்கான பயிற்சி, ஆட்டம் என்பவற்றில் அவர் சிறப்பாகவே காணப்பட்டார். முதல் இன்னிங்ஸில் அவர் நல்ல நிலையில் இருந்தார். அவர் இன்னும் கூடுதல் நேரம் களத்தில் நின்று ஓட்டங்களைக் குவிக்க வேண்டும். அது அவருக்குத் தெரியும்.
அவர் நம்பிக்கையுடன் இருக்கின்றமையை எங்களால் உறுதி செய்ய முடிகின்றது. வெற்றிபெற அவருக்கு வாய்ப்புக்கள் வழங்க வேண்டும். அவர் மீது எமக்கு நம்பிக்கை உண்டு- என்றார். (ஏ)

# டோனியின் சாதனைக்கு அடித்தளமிட்டது கங்குலி

## சங்ககார தெரிவிப்பு



புதுடில்லி, ஜூலை 16
கங்குலியின் தலைமைத்துவத்தின்போது, டோனி போன்ற வீரர் ஒருவர் இருந்திருந்தால் கங்குலி நிறையத் தொடர்களை வென்றிருப்பார் என்று தெரிவித்துள்ளார் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்ககார. தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆஸ்திரேலிய கிரிக்கெட் உச்சத்தில் இருந்து, அனைத்து அணிகளையும் அவர்கள் வீழ்த்திக் கொண்டிருந்த போது கங்குலி தலைமையிலான இந்திய அணி அவர்களை அதிக தடவை வென்றிருந்தது. நிறைய அளவு கோல்களைக் கொண்டு ஒரு வரை அளவிடலாம். நம் காலத்துக்குப் பின்னர் நாம் சிலதை விட்டுச் செல்ல வேண்டும். கங்குலி அருமையான மரபை விட்டுச் சென்றிருக்கின்றார். மற்றையவர்கள் அதை அப்படியே கடைப்பிடிக்க வேண்டியதுதான். கங்குலி விட்டுச் சென்ற மரபிலிருந்தே டோனி அணித் தலைவராகச் சாதித்தார். டோனி தனித்துவமான வீரர், சிறந்த அணித் தலைவர், இந்தியக் கிரிக்கெட்டை முன்னோக்கிக் கொண்டு சென்றார். ஆனால் இவை அனைத்துக்கும் கங்குலிதான் அடித்தளம் அமைத்துக் கொடுத்தார். (ஏ)



# 'சபாஷ்' ஹோல்டர்

நியூயோர்க், ஜூலை 16
மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் ஜேசன் ஹோல்டர் ஐ.சி.சி. பந்துவீச்சுத் தரவரிசையில் 2ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளார். கடந்த 20 ஆண்டுகளில் எந்தவொரு மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரரும் செய்யாத சாதனையை ஹோல்டர் செய்துள்ளார்.
இங்கிலாந்துக்கு எதிராக சவுதாம்டன் டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் ஹோல்டர் 6 இலக்குகளைக் கைப்பற்றினார். இது மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வெற்றிக்குக் காரணமாக அமைந்தது. 42 ஓட்டங்களுக்கு 6 இலக்குகள் என்று அன்றைய தினம் ஹோல்டர் தனது சிறந்த டெஸ்ட் பந்துவீச்சையும் சாதித்திருந்தார்.
அந்த டெஸ்ட் ஆட்டத்தில் ஹோல்டர் மொத்தம் 7 இலக்குகளைக் கைப்பற்றினார். இங்கிலாந்து அணியின் தலைவர் பென் ஸ்டோக்ஸின் இலக்கை இரு இன்னிங்ஸிலும் ஹோல்டரே வீழ்த்தியிருந்தார்.
அவர் 862 புள்ளிகளைப் பெற்று ஐ.சி.சி. பந்துவீச்சுத் தரவரிசையில் இரண்டாம் இடத்துக்கு முன்னேறியுள்ளார். 2000 ஆம் ஆண்டில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர் வோல்ஷ் 866 புள்ளிகளைப் பெற்றபின்னர், 862 புள்ளிகளைப் பெற்ற இரண்டாவது மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரராக ஹோல்டர் உள்ளார்.
அதேவேளை, துடுப்பாட்டத் தரவரிசையில் ஸ்டீவ் ஸ்மித் முதலிடத்திலும், விராட் கோலி இரண்டாம் இடத்திலும் உள்ளனர். (ஏ)

# ரியல் மட்ரிட் அதிரடியில் துவண்டது கிரெனடா!



கொழும்பு, ஜூலை 16
லா லிகா கால்பந்து தொடரின் கிரெனடா அணிக்கெதிரான லீக் ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி வெற்றி பெற்றது. இந்த ஆட்டம் லாஸ் கோர்மென்ஸ் விளையாட்டரங்கில் உள்ளூர் நேரப்படி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
விறுவிறுப்பாக நடந்த இந்த ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணியின் வீரரான பெர்லெண்ட் மெண்டி அணிக்காக முதலாவது கோலை பெற்றுக்கொடுத்தார். ஆட்டத்தின் 16ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரீட் அணியின் மற்றொரு வீரரான கரீம் பென்ஸிமா இரண்டாவது கோலை அடித்தார். இறுதியில் 21 என்ற கோல்கள் கணக்கில் ரியல் மட்ரிட் அணி வெற்றி பெற்றது. (ஏ)

# ஆரியரின் சகோதரர் சுட்டுக் கொலை

லண்டன், ஜூலை 16
ஐவரிகோஸ்ட் நாட்டின் கால்பந்து அணியின் அணித் தலைவர் செர்ஸ் ஆரியரின் சகோதரர் கிறிஸ்டோபர் இனந்தெரியாத வர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவர் அங்குள்ள பிரான்ஸ் டவுலஸ் பிரதேசத்தின் உள்ளூர் அணி ஒன்றின் கால்பந்து வீரராவார்.
உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை இரவு விடுதி ஒன்றில் வைத்து கிறிஸ்டோபர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அவர் கொலை செய்யப்பட்டமைக்கான காரணம் தெரியவில்லை என்று தெரிவித்துள்ள அந்த நாட்டுப் பொலிஸார் இது தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளனர். (ஏ)

# கிண்ணமே முக்கியம்



புதுடில்லி, ஜூலை 16
ஆஸ்திரேலியத் தொடரில் இந்திய அணி சிறப்பாக விளையாடினால் மட்டும் போதாது, இந்திய அணி கிண்ணம் வெல்ல வேண்டும் என்று தெரிவித்துள்ளார் இந்தியக் கிரிக்கெட் சபையின் தலைவர் சௌரவ் கங்குலி.
இந்திய அணி எதிர்வரும் டிசெம்பர் மாதம் ஆஸ்திரேலியா செல்கின்றது. அங்கு 4 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கின்றது. இந்தத் தொடரின் முதல் டெஸ்ட் ஆட்டம் டிசெம்பர் 3ஆம் திகதி முதல் 7ஆம் திகதிவரை பிரிஸ்பேனில் நடக்கவுள்ளது.
இந்தத் தொடர் தொடர்பாக இந்தியக் கிரிக்கெட் சபையின் தலைவர் கங்குலியும், இந்தியக் கிரிக்கெட் அணித் தலைவர் விராட் கோலியும் கலந்துரையாடியுள்ளனர். அப்போது கங்குலி, உங்களிடம் சிறப்பான திறமை உள்ளது. ஆஸ்திரேலிய மண்ணில் நீங்கள் தான் விளையாடப் போகிறீர்கள், உங்கள் அணி தான் திறமையை வெளிப்படுத்தப் போகிறது. நான் இங்கிருந்து தான் பார்க்கப் போகிறேன்.
இந்திய அணி வேகப்பந்து வீச்சாளர்கள் முகமது ஷமி, பும்ரா, இஷாந்த் சர்மா, ஆல் ரவுண்டர் ஹர்திக் பாண்ட்யா என எல்லோரும் ஆஸ்திரேலிய மண்ணில் களமிறங்கும் போது முழு உடற்தகுதியுடன் தான் இருப்பர்.
ஆஸ்திரேலியாவுக்கு எதிராக ஒட்டுமொத்த இந்திய அணியும் சிறப்பான முறையில் விளையாடினால் மட்டும் போதாது. ஆட்டங்களில் வெற்றி பெற்று கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (ஏ)


## அமெரிக்காவுக்கு தகவலளித்த ஈரானியருக்கு தூக்குத் தண்டனை

தெஹ்ரான், ஜூலை 16

அமெரிக்காவின் உளவு அமைப்பான சிஐஏவுக்கு ரகசியமாக தகவல் அளித்த ஈரானியருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஈரானின் ரொக்கெட், அணு ஆயுத தயாரிப்பு மற்றும் சுலைமானியின் இருப்பிடம் குறித்த தகவல்களை வழங்கிய குற்றச்சாட்டில் ரிசா அஸ்ஹரி மற்றும் முஹமத் மைஸ்வி மஜித் ஆகிய இரு ஈரானியர்களை அந்நாட்டு அரசு கைது செய்தது.

கைது செய்யப்பட்ட இருவரும் பணத்திற்காக அமெரிக்காவின் உளவு அமைப்பான சிஐஏக்கு ரகசிய தகவல்களை அனுப்பியமை உறுதியாகியுள்ளதாக ஈரான் நீதிமன்றம் கடந்த மாதம் தீர்ப்பு வழங்கியது. தீர்ப்பையடுத்து முதல் நபரான ரிசா அஸ்ஹரிக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டதாக ஈரான் அரசு தெரிவித்துள்ளது. (ரி1)



## ஹொங்கொங்கிற்கான அந்தஸ்தை நீக்கம்
*ட்ரம்ப் அதிரடி*

வொஷிங்டன், ஜூலை 16

ஹொங்கொங்கிற்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்தை நீக்குவதற்கான உத்தரவில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

பிரித்தானிய கொலனியாக முன்னர் இருந்த ஹொங்கொங் மீது, தேசிய பாதுகாப்பு சட்டத்தை சீனா அமுல்படுத்தியதை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது ஹொங்கொங், சீனாவுக்குச் சமனாகவே கருதப்படுமென் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (ரி1)



# வெளிநாட்டு மாணவரை அனுப்பாது அமெரிக்கா

**நியூயோர்க், ஜூலை 16**

**வெளிநாட்டு மாணவர்களை மீளவும் அவர்களது நாடுகளுக்கே அனுப்பும் திட்டத்தை ட்ரம்ப் நிர்வாகம் கைவிட்டுள்ளது.**

இணையத்தினூடாகக் கற்கைநெறிகளைப் பயிலும் வெளிநாட்டு மாணவர்கள், அமெரிக்காவை விட்டு வெளியேற வேண்டுமென்று ட்ரம்ப் அரசு கடந்த வாரம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

ட்ரம்ப் நிர்வாகத்தின் இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஹவார்ட் பல்கலைக் கழகமும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஒன்றும் வழக்குத் தாக்கல் செய்திருந்தன.

இந்த வழக்கை விசாரணைசெய்த நீதிபதி, கட்சிக்காரர்கள் உடன்பாடொன்றுக்கு வரவேண்டுமென உத்தரவிட்டார்.

இந்நிலையில் எட்டப்பட்டுள்ள இணக்கப்பாட்டுக்கு அமைய, சட்டரீதியாக மாணவர் விசாவுடன் அமெரிக்காவில் உள்ளவர்கள், தேவையேற்படின் வகுப்புக்களுக்கு சமுகமளிக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)



## ஹுவாவிக்கு பிரிட்டனிலும் தடை

லண்டன், ஜூலை 16

சீனாவின் ஹுவாவி நிறுவனத் தயாரிப்புகளுக்கு அமெரிக்காவில் தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்போது, பிரிட்டனிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் சீனா - பிரிட்டன் இடையிலான உறவில் தற்போது விரிசல் ஏற்பட்டுள்ளது. பிரிட்டனில் ஹுவாவி தொலைத்தொடர்பு நிறுவனத் தயாரிப்புகள் 20 ஆண்டுக்கும் மேலாகப் பயன்பாட்டில் உள்ளது.

ஹுவாவி நிறுவனத்துக்குத் தடை விதிப்பது தொடர்பான அறிவிப்பை நாடாளுமன்றத்தில் டிஜிட்டல் துறை அமைச்சர் ஒலிவர் டவுடன் அறிவித்தார்.

பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன், தனது அமைச்சரவை சகாக்களுடனும் தேசியப் பாதுகாப்பு கவுன்சிலுடனும் ஆலோசனை நடத்தியிருந்தார். அதைத் தொடர்ந்து இந்த அறிவிப்பை அமைச்சர் நாடாளுமன்றத்தில் வெளியிட்டார். (ரி1)

## 35 நாள்கள் கடலில் இருந்த 57 மீனவர்களுக்கு தொற்று

காபூல், ஜூலை 16

ஆர்ஜன்டீனாவில் கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின் கடலுக்குச் சென்று 35 நாள்கள் இருந்து விட்டு திரும்பிய 57 மீனவர்களுக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எச்சிசென் மரு என்ற மீன்பிடிக் கப்பலில் இருந்த சிலருக்கு கொவிட்19 நோய்த் தொற்றுக்கான அறிகுறிகள் தெரிய ஆரம்பித்தமையை அடுத்து கரைக்குத் திரும்பியுள்ளனர் என்று டீரா டெல் பியுகோ மாகாண சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. 61 பேர் இருந்த இந்தக் கப்பலில் 57 பேருக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ரி1)





## எண்ணெய் குழாயில் தீ வாகனங்கள் பல தீக்கிரை



கெய்ரோ, ஜூலை 16

எகிப்தின் பாலைவன நெடுஞ்சாலையொன்றில் சேதமடைந்த மசகு எண்ணெய் குழாய் எதிர்பாராத விதமாகத் தீப்பிடித்ததில் பெரும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக 17 பேர் காயமடைந்துள்ளமையுடன், வீதியில் பயணித்த பல வாகனங்களும் தீக்கிரையாகியுள்ளன என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சேதமடைந்த குழாய் வழியாக மசகு எண்ணெய் கசிந்து கொண்டிருக்கையில், போக்குவரத்தில் ஈடுபட்ட வாகனமொன்றிலிருந்து வெளியேறிய தீப்பொறி காரணமாக இந்த தீப்பரவல் இடம்பெற்றிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. எனினும் விபத்துக்கான காரணம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்றுகின்றன கடந்த இலையுதிர்காலத்தில் இதுபோன்ற ஒரு விபத்தில், திருடர்கள் நைல் டெல்டா மாகாணமான பெஹீராவில் பெற்றோல் அள்ள முயன்றபோது எரிபொருள் கசிந்து தீப்பிடித்ததில் ஏழு பேர் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ரி1)

## அரச மரியாதை ஏதுமின்றி சீன வீரர்களின் உடல் அடக்கம்
### அமெரிக்க உளவுத்துறை தகவல்

கல்வான் பள்ளத்தாக்கில் இறந்த சீன ராணுவ வீரர்களின் உடல்களை, உரிய அரச மரியாதையுடன் அடக்கம் செய்ய சீனா அனுமதிக்கவில்லை என்று அமெரிக்க உளவுத் துறை தெரிவித்துள்ளது.

ராணுவ வீரர்களின் உடல்களை அவர்களின் முறைப்படி அடக்கம் செய்ய வேண்டாம் என்று ராணுவ வீரர்களின் குடும்பத்தினரிடம் சீன அரசு கேட்டுக் கொண்டது என அமெரிக்க உளவுத்துறை தெரிவித்துள்ளது.

மோதலில் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்ற தகவலை உலகத்துக்குத் தெரிவித்து விடக்கூடாது என்ற மனநிலையில் சீனா இவ்வாறு செயற்பட்டுள்ளது என்று உளவுத் துறை தெரிவித்துள்ளது. (ரி1)

## கண்ணீர் அஞ்சலி

உடுவில் பிரதேச செயலகத்தில் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் மனிதவள அபிவிருத்தி உதவியாளராகக் கடமையாற்றும்

**வீரசிங்கம் குகநேசன்** அவர்களின் அன்புத் தந்தையார்

**கணபதி வீரசிங்கம்**

அவர்கள் நேற்று (15.07.2020) புதன்கிழமை இறைபதம் அடைந்தையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது திணைக்கள உத்தியோகத்தர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**யாழ். மாவட்ட மனிதவள அபிவிருத்தி உதவியாளர்கள் / அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்**

## கண்ணீர் அஞ்சலி



எமது கலாசாலையின் விரிவுரையாளர்
ந. அனந்தசயனன் அவர்களின்
அன்புச் சகோதரரும்,
ஆசிரியர்களுக்கான வாண்மைத்துவ
அபிவிருத்தி நிலைய (பரந்தன்)
முகாமையாளருமான

**நடேசு செந்தில்வடிவேல்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பிரிவுத்துயருடன்: விரிவுரையாளர் கழகம்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் தம்பிப்பிள்ளை
### (ஓய்வுபெற்ற வீடமைப்புத் திணைக்கள உத்தியோகத்தர்)



மீசாலையைப் பிறப்பிடமாகவும், உசனை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் தம்பிப்பிள்ளை நேற்று (15.07.2020) புதன்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், கமலாதேவியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், குணாளனின் (கனடா) அன்புத் தந்தையாரும், பாலேஸ்வரியின் (கனடா) அன்பு மாமனாரும், சேரானின் (கனடா) அன்புப் பேரனும், காலஞ்சென்ற சேதுப்பிள்ளை, பரமசாமி, அன்னப்பிள்ளை மற்றும்சுப்பிரமணியம், கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சிவலோகநாதன், இராசேந்திரன் (இந்திரா அண்ணா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2020) வியாழக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் உசனில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈச்சங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உசன், மிருசுவில்.**

**தகவல்: இராசேந்திரன் (இந்திரா)**

## மரண அறிவித்தல்

### திருமதி டொறத்தி பற்றிமாஜோதிஅரசநிலை



ஊறணியைப் பிறப்பிடமாகவும் கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி டொறத்திபற்றிமா ஜோதிஅரசநிலை நேற்றுமுன்தினம் (14.07.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜேக்கப் றோமான் (அதிபர்), திருமதி மாகிறற் றோமான் தம்பதியரின் புதல்வியும், இராஜசிங்கம் சேவியர்அரசநிலை என்பவரின் மனைவியும், அன்றன் மொறிசனின் தாயும், காலஞ்சென்றவர்களான ஜெயராஜா, அனற் மற்றும் புஸ்பராசா, அருட்பணி நேசராஜா, தோமஸ் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.07.2020) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு 15/3, புது வீதி, கொய்யாத்தோட்ட இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, பிற்பகல் 3.30 மணிக்கு ஊறணி புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெறும் இரங்கல் திருப்பலியின் பின் ஊறணி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**021 222 5793, 077 338 5946**

(cs/33029) (13/17)


## சிறப்புத் தேவையுடையோருக்கு ஒரு தொகுதி உபகரணங்கள்

சாவகச்சேரி, ஜூலை 16

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் தென்மராட்சி பிரதேசத்தில் வதியும் சிறப்புத் தேவையுடையோருக்கு வழங்கவென ஒரு தொகுதி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பிரதேச விசேட தேவையுடையவர்களின் கோரிக்கைக்கு அமைவாக பிரதேச சமூக சேவைகள் அலகினின் வேண்டுகோளின் பிரகாரம் இந்த உபகரணங்கள் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டன.

இதில் முச்சக்கர தள்ளு வண்டிகள் 7 , கழிவகற்றல் நாற்காலிகள் 2, நடைச் சட்டங்கள் (வோக்கர் ) 2, சக்கரநாற்காலி 11, ஊன்று கோல் 4, காற்று மெத்தை 1, ஆகியவையே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-9)

## ஆடிப்பூர திருவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை 16

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தில் ஆடிப்பூரத் திருவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடை பெறவுள்ளது. (க)

## வீதி விபத்தில் மூவர் காயம்

சாவகச்சேரி, ஜூலை 16

இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுக்கொன்று மோதிக் கொண்டதில் அவற்றில் பயணித்த மூவர் காயமடைந்தனர்.

இந்த விபத்து சாவகச்சேரி நுணாவில் ஏ - 9 வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

விபத்தில் மீசாலையைச் சேர்ந்த 34 மற்றும் 36 வயது குடும்பத் தலைவர்களும், நுணாவில் மத்தியைச் சேர்ந்த 46 வயது குடும்பத்தவரும் காயமடைந்தனர். இவர்கள் மூவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ-9)

# டெங்கு மட்டுமல்ல கொரோனாவும் பரவும்

## குப்பை வீசிய ஐவருக்கு தலா 10,000 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

டெங்கு மற்றும் கொவிட் -19 நோய்த் தொற்று பரவலுக்கு வழிவகுக்கும் வகையில் திண்மக் கழிவுகளை வீசிய ஐவருக்கு தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது யாழ்ப்பாண நீதிவான் மன்று.

யாழ்ப்பாணம் மாநகர மருத்துவ சுகாதர அதிகாரி பணிமனைக்கு உள்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோகர் தொடர்ந்த வழக்குகளிலேயே தண்டம் விதிக்கப்பட்டது.

நாட்டில் முதன்முறையாக திண்மக் கழிவுகளை பொது இடத்தில் வீசியதால் கொவிட்- 19 நோய்த் தொற்றுக்கு ஏதுநிலையை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் சுகாதாரத் துறையினரால் வழக்குத் தொரடப்பட்டு தண்டமும் அறவிடப்பட்டுள்ளது. (த)

## இருவர் கைது

சாவகச்சேரி, ஜூலை 16

கொடிகாமம், பாலாவிப் பகுதியில் இருவர் பொலிஸாரால் நேற்றுமுன் தினம் கைது செய்யப்பட்டுள்ளார். இவர்களில் கொலைச் சம்பவம் ஒன்று தொடர்பாகக் கடந்த 15 மாதங்களாகத் தேடப்பட்டு வந்தவர் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி பாலாவிப் பகுதியில் முதியவர் ஒருவர் கூரிய ஆயுதம் ஒன்றால் குத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் 25 பேருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இதுவரையில் 18 பேர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் 7 பேர் தலைமறைவாக இருந்தனர். பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவர்களில் இருவர் தற்போது கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 29 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ஏ-9)



## 8 பேருக்கும் ரூ.5,80,000 தண்டம்

மதுபோதையில் வாகனம் செலுத்திய ஆறு பேருக்கு ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாவும், அனுமதிப் பத்திரமின்றி வாகனங்களில் மணல் ஏற்றிய இருவருக்கு. நான்கு லட்சத்து 10 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று சாவகச்சேரி நீதிமன் றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

மதுபோதையில் வாகனம் செலுத்திய ஐந்து பேருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதமும், மதுபோதையில் சாரதிய அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத் திய ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது.

இதேவேளை உரிய அனு மதிப் பத்திரமின்றி ஹன்ரர் வாகனத்தில் மணல் ஏற்றிய ஒருவருக்கு 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவும், உழவு இயந் திரத்தில் மணல் ஏற்றியவருக்கு 2 லட்சம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ -9)

# ஜனாதிபதி செயலணிகளால் ஆளப்படுவது வெட்கக்கேடு!

*சாடுகின்றார் முன்னாள் தூதுவர் தயான் ஜயதிலக*

கொழும்பு, ஜூலை 16

பிரதமரையும் அமைச்சரவையையும் கூட உள்ளடக்காத ஜனாதிபதி மற்றும் விசேட ஜனாதிபதி செயலணிகளாலேயே பொதுமக்கள் ஆளப்படுகின்றனர். இது நாட்டுக்கு மிகக் கேடான விடயம், வெட்கக்கேடான விடயம் என்று ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்திருக்கிறார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் மீண்டும் மஹிந்த ராஜபக்சவின் யுகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறோம் என்று நினைப்பது சரியல்ல. ஏனெனில், தற்போதைய நிலைமை அதனை விடவும் மோசமாகவுள்ளது. அரசின் கட்டமைப்பில் ஒரு மாற்றம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

பிரதமரையும், அமைச்சரவை அமைச்சர்களையும் தவிர்த்து முன்னாள் இராணுவ அதிகாரிகளை உள்ளடக்கியதாக ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ச உருவாக்கியுள்ள விசேட செயலணிகளின் ஆபத்தான தன்மை குறித்து எச்சரிக்கை கொள்ளவேண்டியுள்ளது என்று தெரிவித்தார்.

அதேவேளை, அரசமைப்பின் 19 மற்றும் 13 ஆவது திருத்தங்களை இல்லாதொழிப்பதற்கான முன்னெடுப்புக்களுக்கு எதிராக எழும் எதிர்ப்புக்குரல்கள் தொடர்பில் கருத்துவெளியிட்ட அவர், தற்போது நாட்டின் உயர்மட்ட நிர்வாகம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அநேக உறுப்பினர்களின் பங்களிப்பைக் கொண்டதாக இருக்கிறது. மத்தியில் மிக உயர்வாக அதிகாரம் குவிக்கப்பட்டுள்ளமையைத்தான் இது காண்பிக்கிறது. இத்தகையதொரு சூழ்நிலையில் 19 ஆவது திருத்தத்தையோ அல்லது 13 ஆவது திருத்தத்தையோ நீக்கினால் என்ன நடக்கும்?' என்று கேள்வி எழுப்பினார்.

ஏற்கனவே அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுப்பதற்கு முன்னாள் இராணுவ அதிகாரிகளின் பங்களிப்புடனான செயலணிகள் மற்றும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலரின் நிலவுகை என்பன காணப்படும் நிலையில், அதேதரப்பினருக்கு நாடாளுமன்றின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கப்பெற்றால் நிலைமை எத்தகையதாக இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். அவ்வாறிருக்கையில் பிறருக்கான வாய்ப்புக்களும், இடைவெளியும் எவ்வாறு வழங்கப்படும்? என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (த)

*கொரோனா எல்லை மீறலைக் கட்டுப்படுத்த*

# வர்த்தமானியை வெளியிட்டால்தான் அதிரடி நடவடிக்கையில் இறங்கலாம்

*பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கூறுகின்றது*

கொழும்பு, ஜூலை 16

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் வைரஸ் பரவல் ஏற்பட்டுள்ளமையால் 16 மாவட்டங்களில் 2ஆயிரத்து 800 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். குறைந்தது ஒரு வாரத்துக்கேனும் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை தவிர்க்குமாறு அரசியல் கட்சிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் அவர்கள் உதாசீனப்படுத்தியுள்ளனர். எனவே சுகாதார பாதுகாப்பு வழிமுறைகள் துரிதமாக வர்த்தமானியில் வெளியிட்டால் மாத்திரமே இவற்றுக்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க முடியும்.

இவ்வாறு பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மகேந்திர பாலசூரிய தெரிவித்தார்.

மேற்கூறிய விடயங்களை சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்கு கொண்டுசெல்லும் நோக்கில் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தினர் நேற்று சந்தித்து கலந்துரையாடினர்.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் பொதுத் தேர்தலை சுகாதார பாதுகாப்புடன் நடத்துவது தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட்டது. பொது சுகாதார பரிசோதகர்கள் முகங்கொடுத்துள்ள தொழில் ரீதியான சில இடர்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது என்று பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (த)

## பாலகதிர்காம பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை 16

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம ஆலயப் பெருந் திருவிழா எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும் திருவிழாக் காலத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும்.

நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இந்த வருடம் ஆடி வேல் இரதபவனி நடைபெறமாட்டாது என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (க)


# சேவை நலன் பாராட்டு

## விஜயரத்தினம் பிறேம்டாஸ்குமாரசிறி

**(B.A in English)**

ஆங்கில ஆசிரியர்

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி



**சேவை விவரம் :**

- யா/ புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை - 25.03.1999 - 31.12.2001
- யா/ யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர் - 01.01.2002 - 31.12.2008
- யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி. - 01.01.2009 - 16.07.2020

ஆங்கிலத்துறையின் அழகிய மகுடமாய்
மாணவர் மனதில் ஆழமாய்ப் பதிந்தவர்
நேரம் தவறாது வகுப்பறை சென்று
விருப்புடன் கற்பித்தல் பெரும்பணி செய்தவர்
எவர்க்கும் உதவிடும் இனிய பண்பாளர்
வாழ்க பல்லாண்டு! வாழ்கவே பிறேம் சேர்!

Congratulations

எமது பாடசாலையில் ஆங்கில ஆசிரியராக, 11 வருடங்கள் கடமையாற்றி அகவை அறுபதில் **இன்று (16.07.2020) வியாழக்கிழமை தடம்பதிக்கும் எங்கள் மணிவிழா நாயகனை எமது கல்லூரியில் காவலனாக** விளங்கும் முருகப்பெருமானின் ஆசியுடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: **ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**

**யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி**

(cs 33037) (13.17)

# கொரோனாவால் இறந்தோரின் குடும்பங்களுக்கு காப்புறுதி நிதி

## வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் கூறுகிறது

வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தொழிலாளர்கள் கொரோனா தொற்றால் உயிரிழந்திருந்தால், அவர்களின் குடும்பங்களுக்குரிய காப்புறுதி பணத்தை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பொது முகாமையாளர் வி.வன்சேகர தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றால் வெளிநாடுகளில் இதுவரை 35 இலங்கையர்கள் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்த ஒவ்வொருவரின் குடும்பத்துக்கும் தலா 6 இலட்சம் ரூபா காப்புறுதி வழங்கப்படும்.

வெளிநாடுகளில் உயிரிழந்த இலங்கையர்களின் இறப்பு சான்றிதழ்கள் உள்ளிட்ட ஆவணங்களையும் வழங்குமாறு அந்தந்த நாடுகளின் தூதரகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை 10 பேரின் இறப்பு சான்றிதழ்கள் உள்ளிட்ட ஆவணங்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்துக்கு கிடைத்துள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

**சபைக்கீதம் இயற்றுதல்**
**வலிகாமம் கிழக்கு பிரதேசசபை**

எமது சபைக்கென சபைக்கீதமொன்றை இயற்றுவதென எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய எமது பிரதேசத்துக்கு உட்பட்ட அனைத்து கலைஞர்களிடமிருந்தும் ஆக்கங்கள் கோரப்படுகின்றன. தாங்கள் வலி.கிழக்கு பிரதேச சபையின் சமூக, கலாசார, பொருளாதார, அரசி யல், பண்பாட்டு விபரங்களை உள்ளடக்கியதான கீதவரைவினை எமது பிரதேச சபை அலுவலக முகவரிக்கு **2020.07.31** இற்கு முன்னதாக பதிவுதபால் மூலம் அனுப்பிவைக்குமாறு சேவையுணர்வுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

கௌரவ சபையினால் தெரிவு செய்யப்படும் நடுவர்களின் முடிவே தெரிவில் இறுதியானதாக அமையும்.

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர்**
**வலி கிழக்கு பிரதேசசபை,**
**புத்தூர்.**
(in 13210) (13.17)

# கைதிகள் கொலை வழக்கிலுள்ள புலனாய்வு அதிகாரி விடுதலை!

*வழக்குத் தொடுத்த சட்டமா அதிபர் திணைக்களம் சாட்சியங்கள் இல்லை என்றுகூறி கைவிரித்தது*

கொழும்பு, ஜூலை 16

வெலிக்கடை சிறைக் கைதிகள் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த மூன்றாவது பிரதிவாதியான சிறைச்சாலை புலனாய்வு அதிகாரி இந்திக்க சம்பத் இமதூவகே மூவரடங்கிய கொழும்பு விசேட மேல் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டார்.

நீதிபதிகளான கிஹான் குலதுங்க, பிரதீப் ஹெட்டியாரச்சி மற்றும் மஞ்சுல திலகரத்ன ஆகியோர்கொண்ட குழாம் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வெலிக்கட சிறைச்சாலையில் 8 கைதிகளை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றமை உட்பட குற்றச்சாட்டுகளின் கீழ் சட்ட மா அதிபரால் இந்த வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்த நிலையில், பிரதிவாதியான புலனாய்வு அதிகாரி சம்பத் இமதூவகேவை வழக்கிலிருந்து விடுவிக்குமாறு சட்ட மா அதிபர் சார்பில் வழக்கை வழிநடத்தும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் டிலான் ரத்னாயக்க மன்றில் கோரினார்.

பிரதிவாதிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கு போதுமான சாட்சியங்கள் இன்மையால், இந்த கோரிக்கை விடுக்கின்றேன் என்றும் அவர் மன்றில் தெரிவித்தார்.

அதற்கமைய, மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்றம் பிரதிவாதியை அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுதலை செய்தது.

வழக்கின் முதலாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளான இன்ஸ்பெக்டர் நியோமால் ரங்கஜீவ, முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளர் எமில் ரஞ்சன் லமாஹேவா ஆகியோருக்கு எதிரான சாட்சி விசாரணையை எதிர்வரும் 30 ஆம் திகதி நடத்தவும் நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டுள்ளது. (க)

**பெறுகைகளுக்கான அறிவித்தல்**
**வடமாகாண சுகாதார திணைக்களம்**
**வைத்தியசாலைகளுக்கு மூல உணவுகளை வழங்குவதற்கான பெறுகைகள்**
**2020/2021**

தலைவர். திணைக்கள பெறுகைக் குழு மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள கீழ்வரும் வைத்தியசாலைகளுக்கு மூல உணவுகளை வழங்குவதற்குத் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுப்பத்திரங்களினை கோருகின்றார்.

| விபரங்கள் | தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை | கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை | வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை | மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை | முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை |
|---|---|---|---|---|---|
| குறியீட்டு இலக்கம் | NP/21/05/Diet/ BHTEL/2020 | NP/21/05/Diet/ DGHKOC/2020 | NP/21/05/Diet/ DGHVAV/2020 | NP/21/05/Diet/ DGHMAN/2020 | NP/21/05/Diet/ DGHMUL/2020 |
| பெறுகை ஆவணங்களை பெறும் முகவரி | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். 021 222 6253 | கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை, A9 வீதி, கிளிநொச்சி 021 228 4111 | வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை, A9 வீதி வவுனியா 024 222 8094 | மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை, மன்னார் 023 225 1550 | முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு 021 206 1423 |
| பெறுகைப் பாதுகாப்பு பிணைத்தொகை | Rs. 150,000/= | Rs. 150,000/= | Rs. 250,000/= | Rs. 120,000/= | Rs. 140,000/= |
| மீளளிக்கப்படாத வைப்பு | Rs. 3500/= | Rs. 3500/= | Rs. 4000/= | Rs. 3500/= | Rs. 3500/= |

(01) பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

(02) ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) அத்துடன், மூல உணவுகளை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) அத்துடன் வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(03) ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 –பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(04) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மேலே காட்டப்பட்ட முகவரிகளில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை மேலே குறிக்கப்பட்ட முகவரியிலே வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரை பரிசீலிக்க முடியும்.

(05) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கிலமொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை மேலே காட்டப்பட்ட முகவரிகளில் வேலைநாட்களில் 17 யூலை 2020 ஆம் திகதி தொடக்கம் 29 யூலை 2020 ஆம் திகதி வரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான் கோரிக்கையுடன் காசாக மேலே தெரிவிக்கப்பட்ட தொகையினை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

(06) பெறுகை ஆவணங்கள் 30 யூலை 2020 ஆம் திகதி 10:00 மணிக்கு முன்பதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம், வடமாகாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

(07) பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்கள தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 24 யூலை 2020 ஆம் திகதி காலை 10:00 மணிக்கு நடைபெறும்.

**வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்**

(08) மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும்.

(09) இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன்,**
**தலைவர்,திணைக்களபெறுகைக் குழு (பெரிது)**
**வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**சுகாதாரக் கிராமம்,பண்ணை,யாழ்ப்பாணம்,**
தொ.பே - 021-222-0811, 021-222-0812, 021-222-0839 தொலைநகல்: 021-222-0818, 021-221-7905
மின்னஞ்சல்: capdhsnp@gmail.com
(in 13209) (13.17)



# சண்முகநாதனின் நினைவுதினம்

வவுனியா, ஜூலை 15

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட்டின் இராணுவ பொறுப்பாளருமான ச.சண்முகநாதனின் (வசந்தன்) 22ஆவது நினைவு தினம் வவுனியாவில் நேற்று நடைபெற்றது.

உமாமகேஸ்வரன் பவுண்டேசன் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் திருவுருவ படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் உமாமகேஸ்வரன் பவுண்டேசன் அமைப்பின் தலைவர் ஜி.ரி.லிங்கநாதன், அமைப்பின் உப தலைவரும் புளொட்டின் மத்திய குழு உறுப்பினருமான இ.ராஜேஸ்வரன், வவுனியா நகரசபை உறுப்பினரும் புளொட்டின் வவுனியா மாவட்ட பொறுப்பாளருமான க.சந்திரகுலசிங்கம் (மோகன்) மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (த-110)



யாழ்.மாவட்டத்தின் 20 ஆவது தேசிய மாணவர் படையணியில் அதிகாரிகளுக்கான நிலைப்படுத்தல் மற்றும் பதவி உயர்வு வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்றது. (க)

# ரம்ஸி ரஸீக் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும்

## சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 16

சமூகவலைத்தளச் செயற்பாட்டாளரான ரம்ஸி ரஸீக்கின் மீது சுமத்தப்பட்டிருக்கும் அனைத்துக் குற்றச்சாட்டுக்களும் நீக்கப்பட்டு, எவ்வித நிபந்தனைகளுமின்றி அவர் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது. அமைதியான முறையில் கருத்துச்சுதந்திர உரிமையைப் பயன்படுத்தித் தமது கருத்துக்களை வெளியிடுகின்ற செயற்பாட்டாளர்களை அச்சுறுத்துவதற்கும், அடக்குவதற்கும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனச் சட்டத்தைப் பயன்படுத்துவதை உடனடியாக நிறுத்துமாறும் அது கடுந்தொனியில் வலியுறுத்தியுள்ளது.

ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தரும் சமூகவலைத்தள செயற்பாட்டாளருமான ரம்ஸி ரஸீக்கினால் அவரது பேஸ்புக் பக்கத்தில் செய்யப்பட்ட பதிவொன்றுக்காக, அவர் கடந்த ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளின்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார். அவர் முறையாக சட்டத்தரணியொருவரின் உதவியை நாடுவதற்கும், உறவினர்களுடன் பேசுவதற்கும் அனுமதி மறுக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டியிருக்கும் சர்வதேச மன்னிப்புச்சபை, அவர் பல்வேறு நோய்நிலைமைகளைக் கொண்டிருப்பதால் முறையான சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளற்ற சிறைச்சாலை சூழலினால் அவருக்கு ஏற்படக்கூடிய விளைவுகள் தொடர்பில் ரஸீக்கின் குடும்பத்தினர் கவலையடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டிருக்கிறது. ரம்ஸி ரஸீக் சுதந்திரமாகக் கருத்துக்களை வெளியிடுவதற்குத் தனக்குள்ள உரிமையைப் பயன்படுத்தியமைக்காகத் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் நிலையில், அவர் உடனடியாகவும் எவ்வித நிபந்தனை களுமின்றியும் விடுவிக்கப்பட வேண்டும். அத்தோடு அவர்மீது சுமத்தப்பட்டிருக்கும் அனைத்துக் குற்றச்சாட்டுக்களும் கைவிடப்பட வேண்டும் என்றும் மன்னிப்புச் சபை வலியுறுத்தியிருக்கிறது. அதுமாத்திரமன்றி ரம்ஸி ரஸீக்கின் விடுதலையை வலியுறுத்தி பதில் பொலிஸ்மாஅதிபர் சந்தன விக்ர மரத்னவிற்குக் கடிதமொன்றை எழுதுமாறும் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (ப)

# பரீட்சைத் திணைக்கள பணிகள் முடக்கப்பட்டன

கொழும்பு, ஜூலை 16

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் ஒரு நாள் மற்றும் வழமையான சேவைகள் அனைத்தும் மீள அறிவிக்கும் வரையில் நேற்றுத் தொடக்கம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவிவரும் கொரோனா அச்சம் காரணமாக பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சான்றிதழ்களைப் பெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் நிகழ்நிலை (online) ஊடாக அல்லது மின்னஞ்சல் ஊடாக விண்ணப்பித்து 48 மணித்தியாலங்களில் சான்றிதழ்களை அவர்களின் வீடுகளுக்கே அனுப்பிவைக்க வசதிகள் ஏற்படுத்திகொடுக்கப்பட்டுள்ளன என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.doenets.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக அல்லது 0112784323 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக சான்றிதல் பிரிவை தொடர்பு கொள்ள முடியும். 1911 என்ற இலக்கத்துக்கு அழைத்து தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (17.06.2020) புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

அமரர் **வல்லிபுரம் நவரத்தினம்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (16.07.2020) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நவம் பந்தல்சேவை குடும்பம்

நுணாவில் மத்தி,
கல்வயல் வீதி, சாவகச்சேரி.

## பெறுகைகளுக்கான அறிவித்தல்

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்

**வைத்திய சாலைகளுக்கு உலர் உணவு, சமைத்த உணவு, அழுக்குத் துணிகள் சலவைச் சேவை, சுத்திகரிப்பு பொருள்களை வழங்குவதற்கான பெறுகைகள் மற்றும் போட்டோ பிரதி இயந்திரம் சுத்திகரிப்பு, குளிருட்டிகள் சுத்திகரிப்பு -2020/2021**

தலைவர், பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு, சமைத்த உணவு, அழுக்குத் துணிகள் சலவைச் சேவை சுத்திகரிப்பு பொருட்களை வழங்குவதற்குத் தகைமையுள்ள விலை மனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுப் பத்திரங்களினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவை வழங்க வேண்டிய நிலையம் | கேள்வி உத்தரவாத முறி |
|---|---|---|---|---|
| 01. | DH/CM/2020/ 01 தொடக்கம் 17வரை | சமைத்த உணவு வழங்கல் சேவை | பிரதேசவைத்தியசாலைகள் (யாழ் மாவட்டம்) | 10000.00 |
| 02. | D/JF/2020/02 | உலர் உணவு வழங்கல் சேவை | ஆதாரவைத்தியசாலை பருத்தித்துறை | 80000.00 |
| 03. | D/JF/2020/03 | | பிரதேசவைத்தியசாலை.வல்வெட்டித்து | 16000.00 |
| 04. | D/JF/2020/04 | | ஆதாரவைத்தியசாலை.சாவகச்சேரி | 80000.00 |
| 05. | D/JF/2020/05 | | பிரதேசவைத்தியசாலை சங்கானை | 25000.00 |
| 06. | D/JF/202006 | | ஆதாரவைத்தியசாலை ஊர்காவற்துறை | 30000.00 |
| 07. | D/JF/2020/07 | | பிரதேசவைத்தியசாலை.நெடுந்தீவு | 10000.00 |
| 08. | D/JF/2020/08 | | பிரதேசவைத்தியசாலை.அச்சுவேலி | 10000.00 |
| 09. | D/JF/2020/09 | | பிரதேசவைத்தியசாலை.கோப்பாய் | 50000.00 |
| 10. | H/LS/2020/01 தொடக்கம் 10வரை | அழுக்குதுணிகள் சலவைச் சேவை | பருத்தித்துறை (அ).பருத்தித்துறை (ஆ).சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, தெல்லி ப்பளை, கோப்பாய், சங்கானை, சண்டிலிப்பாய், வேலணை, நல்லூர் யாழ்ப்பாணம் மற்றும் உடுவில் | 3000.00 |
| 11. | RDHS/CLE-ME/2020-2021 | சுத்திகரிப்பு பொருட்களுக்கான வழங்கல் சேவை | பிரதேசவைத்தியசாலைகள் ஆதார வைத்திய சாலைகள் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை | 10000.00 |
| 12. | NP/RDHS/PC / 2020/01 | Photocopier Service Toshiba - 40 Cannon-27 Gestner-04 Sharp - 06 | பிரதேச வைத்தியசாலைகள், ஆதார வைத்தியசாலைகள், சுகாதார வைத்திய பணிமனை, பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், | 25000.00 |
| 13. | NP/RDHS/IC) /2020/02 | Intercom Repair | ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி | 10000.00 |
| 14 | NP/RDHS/AC /2020/03 | Airconditioner Service (Mechanical Service, Pump down Service, Normal Service, Gas filling 1kg) (Brand Singer LG,York,American air & other brand) 9000BTU 12000BTU 18000BTU 24000BTU 36000BTU 60000BTU | பிரதேச வைத்தியசாலைகள், ஆதார வைத்தியசாலைகள், சுகாதார வைத்திய பணிமனை, பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம். | 10000.00 |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.
02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
    அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கு பொருட்களின் / சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
03. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 - பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, 572/3 வைத்தியசாலை வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் 0212223725, 0212226253, 0212214966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இம்முகவரியில் வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிவரை பரிசீலிக்கமுடியும்.
05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கிலமொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம் எனும் முகவரியில்29 யூலை 2020 ஆம் திகதிவரை 09:00 மணிதொடக்கம் 15:00 மணிவரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாதவைப்பாகச் ரூபா 1.000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.
06. பெறுகை ஆவணங்கள் 30 யூலை 2020 ஆம் திகதி 10:00 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
07. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்கள தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 24 யூலை 2020 ஆம் திகதி மாலை 14:00 மணிக்கு நடைபெறும்.
08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும். என்பதுடன் இப்பிணைப்பணம் அலுவலக காசாளரிடம் அல்லது வங்கியில் செலுத்தி அவ்வாவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.
09. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ் விலைமனுகோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன்.
தலைவர், பிராந்திய பெறுகைக் குழு (பெரிது)
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்
021-222-3725, 021-222-6253, 021-221-4966 தொலைநகல்: 021-222-9971
மின்னஞ்சல்: rdhsjaffna15@gmail.com

## பேசாலை கடற்கரை வீதி வீட்டில்
# நெடுநேரம் அகழ்ந்தும் எதுவுமே சிக்கவில்லை

மன்னார், ஜூலை 16

மன்னார் பேசாலை கடற்கரை வீதியில் அமைந்துள்ள வீட்டுக்குள் புதையல் உள்ளன என்றுகூறி நேற்று நீண்ட நேரமாக அகழ்வு மேற்கொள்ளப்பட்டபோதும் எதுவுமே சிக்கவில்லை.

அந்த வீட்டில் புதையல் உள்ளன என்றுகூறி கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு பொலிஸார் அந்த வீடு புகுந்து அகழ்வில் ஈடுபட முற்பட்டனர். அதற்கு அந்த வீட்டுக்காரர் உட்பட அயலவர்களும் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர். நீதிமன்றத் தீர்ப்பு இல்லாது எப்படி அகழ்வில் ஈடுபடுவீர்கள் என்று கேள்வி எழுப்பியதால் பொலிஸார் அகழ்வைக் கைவிட்டு அந்த வீட்டு உரிமையாளரை கைதுசெய்துசென்றிருந்தனர். அவர் ஒரு நாள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்தநிலையில் பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்து அகழ்வுக்கு அனுமதி பெற்று மன்னார் பதில் நீதிவான் இ.கயாஸ் பெல்டானோ முன்னிலையில் நேற்று அகழ்வில் ஈடுபட்டனர். எனினும் எதுவுமே சிக்கவில்லை. (த-56)



# தூக்கில் தொங்கியபடி சிறுமியின் சடலம் மீட்பு

வவுனியா, ஜூலை 16

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் சிறுமியின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியை நீண்டநேரமாகக் காணவில்லை என்று தேடியபோதே அவருடைய வீட்டின் அறைக்குள் அவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக இருப்பதை உறவினர்கள் அவதானித்தனர்.

வவுனியா பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

பொலிஸார் சடலத்தை மீட்டு வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்த்தனர். (த-18)

## கண்ணிவெடியகற்றுனர்களுக்கான பதவி வெற்றிடம்

ஹேலோ ட்றஸ்ற் நிறுவனமானது ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு உலகளாவியரீதியில் 23 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றிக் கொண்டிருக்கின்றது.

ஹேலோ ட்றஸ்ற் இன் எதிர்கால வேலைக்காக மிதிவெடிப்பயிற்சிக்காக ஆண், பெண் இருபாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் விளங்கிக்கொள்ள வேண்டியது யாதெனில் கண்ணிவெடியகற்றலானது துப்பரவற்றதும், தேகவலுவை அதிகம் பிரயோகிக்க வேண்டிய கடினமான வேலையுமாகும். எமது தரமான நடவடிக்கைகள் மூலம் கண்ணிவெடி அகற்றுதலிலுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக் கொள்ள முடியும். எனவே இதனை கருத்தில் கொள்ளும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பலமான அர்ப்பணிப்பு உணர்வு எதிர்பார்க்கப்படுகின்றது.

**குறிப்பு :** முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பிரதேசத்திற்கு அண்மையில் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. பயிற்சியுடன் கூடிய பணி. முதல் 03மாத காலத்திற்கு கிளிநொச்சி மாவட்டத்திலேயே இடம்பெறும். அதன்பிறகு சாத்தியமானவரை பணியாளர்களது வதிவிடங்களுக்கு அண்மையாகவுள்ள வேலைப்பகுதிகளுக்குப் பணிக்கமர்த்தப்படுவார்கள். வழமைபோன்று பெண் விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக்கோவைகளை எதிர்வரும் ௨௨ம் திகதி ஜூலை மாதம் ௨௦௨௦ புதன்கிழமைக்கு முன்னதாகக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கமுடியும்.

**ஹேலோ ட்றஸ்ற்,**
**450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**

# ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து ஒரு சதமேனும் கிடைக்கவில்லை

## ரணிலின் கருத்துக்கு சுகாதார அமைச்சர் பதில்

கொழும்பு, ஜூலை 16

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து இலங்கைக்கு ஒரு சதமேனும் நிதியுதவி கிடைக்கப் பெறவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினுடைய கேள்விகளுக்கு பதிலளித்து என்னால் நேரத்தை வீணடிக்க முடியாது என்று சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனம், உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பன சுகாதார அமைச்சுக்கு வழங்கிய நிதிக்கு என்ன ஆனது? என்று சில வாரங்களுக்கு முன்னர் கேள்வியெழுப்பியிருந்தார். அந்தப் பணத்தை ராஜபக்சவினர் வழமைபோன்று திருடிவிட்டனர் என்ற சாரப்பட ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், சுமார் 2 வாரங்களின் பின்னர் சுகாதார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"ரணில் விக்கிரமசிங்க கேள்வியெழுப்புவது பற்றி முறையாகக் கற்றுக் கொள்ள வேண்டும். ஒரு சந்தர்ப்பத்தில் அவர் பெரிய பொய் கூறினார். உலக சுகாதார ஸ்தாபனம் 4ஆயிரத்து 200 கோடி ரூபாவை இலங்கைக்கு வழங்கியதாகக் கூறினார். அதுபற்றி அவருக்கு விளக்கமளித்தேன். 20 லட்சம் டொலர் மாத்திரமே உலக சுகாதார ஸ்தாபனத்திடமிருந்து எமக்குக் கிடைக்கப் பெற்றது.

உலக சுகாதார ஸ்தாபனம், உலக வங்கி என்ற இரண்டும் வேறு வேறாகும். 128 மில்லியன் டொலர் உலக வங்கியிடமிருந்து எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. மூன்று வருடங்களுக்கே அந்த நிதி கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கமைய இந்த வருடத்துக்கு எமக்கு 22 மில்லியன் டொலர் மாத்திரமே கிடைக்கப் பெற்றுள்ளது.

அதேபோன்று ஐரோப்பிய சங்கத்திலிருந்து எமக்கு ஒரு சதமேனும் கிடைக்கப் பெறவில்லை. என்றார்.

(த)



## சைக்கிளால்..

மாண்டமான அளவில் காட்சிப்படுத்தப்பட்டு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படுவது தவறானது என்று தேர்தல்கள் திணைக்களத்தால், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ஓ.5,6)

## காயமடைந்தவர்...

பட்ட இளைஞன் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார்.

சங்குப்பிட்டி பாலத்தடியில் கடந்த 8ஆம் திகதி புதன்கிழமை இரவு 7.30 மணிக்கு டிப்பரும் ஓட்டோவும் விபத்துக்கு உள்ளாகியதில் ஓட்டோவில் சென்ற மூவர் படுகாயமடந்த நிலையில் யாழ் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் கிளிநொச்சி ஆனந்தபுரத்தைச் சேர்ந்த யோகப்பிரகாசம் பிரியதர்சன் என்ற 25 வயது இளைஞரே சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

(ம-159)



31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும்

கனடாவில் காலஞ்சென்ற

அமரர் பவளரத்தினம் சின்னத்துரை

பூவுலகில் பிறப்பு 17.07.1943

விண்ணுலகம் மறைவு 15.06.2020

நேற்றுப்போல் எல்லாம்
எம் நெஞ்சோடு நினைவிருக்க
காற்றுப்போல் கண்களுக்கு
தோன்றாமல் நிற்கிறீர்கள்
தோற்றுப் போனது
எம் எதிர்பார்ப்புக்கள் அம்மா!
மறு பிறப்பு ஒன்று உண்மை எனில்
நீயே எமக்கு மீண்டும்
அம்மாவாக பிறக்க வேண்டும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் துடிக்கும்
பாசமிகு பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

## உங்கள்...

மலை மெய்கண்டார் ஆதீனம் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது பற்றி கீரிமலை மெய்கண்டார் ஆதீனத்தினம் சார்பில் தவத்திரு உமாபதி சிவம் அடிகளார் தெரிவித்துள் ளதாவது:

அண்மைய நாள்களாக நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா பரவல் நிலையைக் கருத்திற் கொண்டு அனைவரும் மிக இறுக்கமான சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டிய தருணத்தில் உள்ளோம்.

அறியாத பலர் பல தூர பிரதேசங்களிலி ருந்து வந்து ஒன்று கூடுவது ஒரே இடத்தில் நீராடுவது, ஒரே குருமார் ஊடாக தானம் வழங்குவதை தவிர்ப்பதனூடாக பலருக்கு நோய் தொற்று ஏற்படும் வாய்ப்பை தவிர்க்க முடியும்.

ஆதலினால் நாம் அனைவரும் அமரத்துவம் அடைந்த எம் முன்னோர்களுக்கு குறிப்பாக தந்தையருக்கு பிதிர்க்கடன் செலுத்தும் மகோன்னதமான நாளை சக மனிதர்களுக்கும் எமக்கும் குடும்பத்தின் அன்புக்குரியவர்களுக்கும் தீங்கை விளைவிக்கக் கூடிய கொடிய நோய்த்தொற்றுக்கு ஆளாகும் வாய்ப்பு எதனையும் ஏற்படுத்தாது இருப்போம். என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(நி)

## பெப்ரவரி...

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் மார்ச் மாத நடுப்பகுதி முதல் நாட்டில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டு கடுமையான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் மின்சாரக் கட்டணங்கள் அதிகளவில் வந்துள்ளதாக மின் பாவனையாளர்களால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய குழு ஒன்று நியமிக்கப்பட்டுடன், அந்தக் குழுவின் பரிந்துரை அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டிருந்தது. இதனையடுத்தே மேற்படி அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஓ.5)

## யாழ்ப்பாணத்தி...

வித் தேர்தல்கள் ஆணையாளர் கி. அமல்ராஜ் தெரிவித்தார்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் 85 சதவீதமானோரும், மன்னார் மாவட்டத்தில் 92 சதவீதமானோரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 80 சதவீதமானோரும் தபால்மூலம் வாக்களித்துள்ளனர். வவுனியா மாவட்டத்தில் கடந்த மூன்று நாள்களிலுமாக 33 சதவீதம் பேரே தபால்மூலம் வாக்களித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஓ.5,110)

## வெளியேறத்...

பது பி.சி.ஆர். பரிசோதனையில் தெரியவந்துள்ளது. அதனையடுத்து நேற்றுமுன்தினம் வரை இருந்த கட்டுப்பாடுகளில் தளர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(நி)


## தொண்டமனாறு...

முகத்தை மூடியவாறு வந்த மூவர், வீட்டிலிருந்த பெண்ணின் கழுத்தில் கத்தியை வைத்து அச்சுறுத்தி அவரின் பணம், நகை என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருந்தது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து கொள்ளையிடப்பட்ட பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன. கைதான சந்தேகநபர்கள் புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ.5,26)

## மரண அறிவித்தல்

தோற்றம்
24 . 09 . 1949



மறைவு
15 . 07 . 2020

### அலோஜி ஜெகநாதன்

**(காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை சிமெந்து அடைப்பு நிலைய ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர்)**

புலோலியினை பிறப்பிடமாகவும், காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், கொழும்பு சொய்சாபுரம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் தற்போது கனடா **(Toronto)** வில் வசித்து வந்தவருமாகிய அலோஜி ஜெகநாதன் நேற்று (15.07.2020) புதன்கிழமை இறை பதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி வேதநாயகம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி பொன்னுத்துரை தம்பதியரின் அன்பு மருமகனும் இன்பமணியின் அன்புக் கணவரும் அனோசிகா (கனடா), அஜந்தன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமலன், ஈவோன் ஆகியோரின் அன்பு மாமனாரும் செனிக்கா, ஏஞ்சலிக்கா, பியான்ஸ்சா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (18.07.2020) சனிக்கிழமை கனடா நேரப்படி 8.00 - 10.00 வரை பார்வைக்கு வைக்கப்பட்டு 10.00 - 12.00 வரை அஞ்சலி இடம்பெற்று 12.00 மணியளவில் அன்னாரது பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளிற்கு:-**
**மனைவி - +128 9545 5051**
**மகன் - +1585 4568 723**
**மகள் - +1647 8565791**

**தகவல்:-**
**சகோதரன் - பொ. ஜெபறாஜன் (லண்டன்)**
**தொடர்புகளிற்கு:-**
**+447 83854 3949**

## மரண அறிவித்தல்



### திருமதி சண்முகநாதன் உருத்திராதேவி

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொழும்பு மியூசியஸ் மகளிர் கல்லூரி யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியரும் அகில இலங்கை சமாதான நீதவானுமாகிய திருமதி சண்முகநாதன் உருத்திராதேவி நேற்று (15.07.2020) புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து - பாய்க்கியம் தம்பதிகளின் புதல்வியும் பெரியதம்பி சண்முகநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மகாலிங்கம் அகிலாண்டம் காலஞ் சென்ற செல்வராஜா வாசஸ்பதி செல்வி வைரமுத்து ரவீந்திரராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜயலக்ஷ்மன் மோகன் ஜயதேக்ஷ்மன் சுரேக்ஷ் **(UK)** ஜயரோக்ஷ்மன் கேதீக்ஷ் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீவள்ளி ஜோய் பத்மகாந்தி ஜெயப்பிரதாஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும் விவேகானந்தன் ஸ்ரீ ஹரன் ஸ்ரீஜயன் ஸ்ரீநிதி ஸ்ரீ கஜன் ஆகியோரின் சித்தியும் ரொக்ஷான் விமுக்தி சக்தி கிருக்ஷாரா ஜெரமிதர்க்ஷன் யக்ஷ்வந்தன் யுதிக்ஷ்ரன் சரிக்கா அபி ஜோயல் ஜோயனா ஜேடன் ஜெரமி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (16.07.2020) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.23, டச் வீதி,**
**சாவகச்சேரி**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## ராஜபக்சக்களுக்கு...

தேர்தல்கள் ஆணைக்குழுவும் இராணுவத் தளபதியின் கருத்துக்களையும், அதேவேளை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஏற்கனவே விடுத்துள்ள அறிவுரைகளையும் கவனத்தில் கொண்டாவது மக்களைப் பாதுகாக்க முன்வரவேண்டும். கொரோனா வைரஸ் தாக்கம் முடிவுக்கு வரும்வரை நாடாளுமன்றத் தேர்தலைப் பிற்போட வேண்டும். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் உயிர் பாதுகாக்கப்படுவதுடன் அவர்களின் ஜனநாயக உரிமையும் மதிக்கப்பட வேண்டும். அவர்கள் தமது ஜனநாயக உரிமையான வாக்குரிமையை ஓகஸ்ட் 5ஆம் திகதி சுகாதாரப் பாதுகாப்புடன் நிறைவேற்றுவது மிகவும் கடினம்.

தேர்தல் காலத்தில் அனைவரும் பின்பற்ற வேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அரசிடம் சமர்ப்பித்துள்ளார். ஆனால், அதை வர்த்தமானி அறிவித்தலாக வெளியிட அரசு பின்னடிக்கின்றது. அதை வர்த்தமானி அறிவித்தலாக உடன் வெளியிடுமாறு அரசிடம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ள போதிலும் அதை வெளியிடுவதில் அரசு தயக்கம் காட்டுகின்றது.

இப்படிப்பட்ட அரசு தேர்தலை எப்படிப் பாதுகாப்பாக நடத்த ஒத்துழைக்கும்? எனவே, தேர்தல்கள் ஆணைக்குழு இது தொடர்பில் தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும். அரசின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து இன்னமும் 20 நாள்கள் தானே தேர்தலுக்கு இருக்கின்றது என்ற நினைப்பில் தேர்தலைப் பிற்போட தேர்தல்கள் ஆணைக்குழு பின்னடிக்கக் கூடாது.

தேர்தலுக்கு 5 நாள்கள் இருந்தால்கூட மக்களின் உயிரும் அவர்களின் ஜனநாயக உரிமையும் பாதுகாக்கப்பட்டு மதிக்கப்பட்டு நல்லதொரு சூழ்நிலையில்தான் தேர்தலை நடத்த வேண்டும் என்று அரசிடமும் தேர்தல்கள் ஆணைக்குழுவிடமும் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றோம், என்றார். (ஓ,5,22)

## இரண்டாம்...

டங்கு பிறப்பிக்கவேண்டிய தேவை ஏற்படவில்லை. ஓரிரு இடங்களிலேயே பிரச்சினை இருக்கின்றது. நாடு தழுவிய ரீதியில் வைரஸ் தாக்கம் இருந்தால்தான் ஊரடங்கு நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பரிசீலிக்கக் கூடியதாக இருக்கும்.

கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்தால் அவ்வாறான நடவடிக்கைகளுக்கு (ஊரடங்கு) செல்லவேண்டியேற்படும். அதற்கான தேவை தற்போது எழவில்லை. எதிர்காலத்திலும் அவ்வாறானதொரு நிலை உருவாகாது என நம்புகின்றோம்.

அதேவேளை, அநுராதபுரம் ராஜாங்கனை பகுதி தற்போது முடக்கப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது. மூன்று பிரிவுகளில் சுமார் 12 ஆயிரம் பேர் வாழ்கின்றனர். எவரும் வெளியில் செல்லமுடியாது. வெளியில் இருந்து எவரும் உள்ளே வரமுடியாது.

ஏனைய பிரதேசங்களிலும் எவராவது அடையாளம் காணப்பட்டால் இதே நடைமுறை தொடரும். இவ்வாறு செய்ததால் தான் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தி மக்களை பாதுகாக்கமுடியும் -என்றார். (ஓ,5,44)

## இரண்டாம் அலை...

நேற்றுக் காலை கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டவர்கள், அவர்களுடன் தொடர்புட்டவர்கள் உள்ளிட்ட அனைவரதும் பி.சி.ஆர். பரிசோதனைகள் பூரத்தி செய்யப்பட்டுள்ளன. இவர்களுடன் சம்பந்தப்பட்ட குடும்பத்தவர்களும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்பான பி.சி.ஆர். பரிசோதனையை வெளியிடுவதற்கான நடவடிக்கை நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பமானது.

இதேவேளை சில நகரங்களில் இங்கும் அங்கும் தொற்று நோயாளர்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கு காரணம் தொற்றுக்கு உள்ளானவர்கள் சிலர் அடையாளம் காணப்படும் பட்சத்தில் அது தொடர்பாக பிரதேச சுகாதார அதிகாரிகள் உள்ளிட்டோருக்கு அறிவிக்கப்படும். இவர்கள் இந்த நோயாளிகளுடன் தொடர்புபட்ட இரண்டாம் நிலை நோயாளர்கள் இருக்கின்றார்களா என்பது தொடர்பில் கவனம் செலுத்துவர். இதனால் அந்தப் பகுதியில் தொற்று நோயாளர் இருப்பதாக சிலர் தெரிவிப்பதே இந்த நிலைக்கு காரணமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் தற்பொழுது கொரோனா இரண்டாவது அலை நிலை இல்லை. இரண்டாம் அலையை இதுவரையில் பிரகடனப்படுத்தக்கூடிய நிலை நாட்டில் இல்லை. இருப்பினும் தனியாள் இடைவெளி உள்ளிட்ட சுகாதார ஆலோசனைகளைத் தொடர்ச்சியாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

இதேவேளை, பொதுத் தேர்தல் நடவடிக்கைகளில் இராணுவம் தலையிடாது. இருப்பினும் பொலிஸார் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக மாத்திரம் இராணுவம் பங்களிப்புச் செய்யும், என்றார். (ஓ,5)

## வர்த்தமானி...

தாக சுகாதார துறையினர் எச்சரிக்கை விடுத்துவருகின்றனர். இவ்வாறான நிலையில் தேர்தல் பிரசாரங்களும் சூடுபிடித்து வருவதால் சுகாதார வழிகாட்டல்களை பிற்பற்றி செயற்படுவது மிகவும் அத்தியாவசியமானதொன்றாகும். தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படுவதற்கு முன்னர் தேர்தலின்போது பின்பற்ற வேண்டிய சுகாதார பரிந்துரை அடங்கிய அறிக்கை சுகாதார அமைச்சு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கையளித்திருந்தது.

இருந்தபோதும் குறித்த சுகாதார வழிகாட்டல் அடங்கிய பரிந்துரை வர்த்தமானிப்படுத்தி வெளியிட்டாலே அதற்கு சட்ட அங்கீகாரம் கிடைக்கின்றது. அது இதுவரை இடம்பெறாமல் இருப்பதால் சுகாதார வழிகாட்டல்களை மீறிச் செயற்படுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாத நிலை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

தேர்தல் தொடர்பான சுகாதார வழிகாட்டல்களை வர்த்தமானிப்படுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழு, அரசியல் கட்சிகள், சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் டாக்டர் அனில் ஜாசிங்க உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் இதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்தி இருக்கின்றனர். என்றாலும் அரசு இதுதொடர்பாக எந்த அறிவிப்பையும் முன்வைக்காமல் தொடர்ந்தும் மௌனம் காத்துவருகின்றமை கவலையளிக்கின்றது.

தேர்தல் தொடர்பான சுகாதார ஏற்பாடுகள் அடங்கிய வர்த்தமானி பத்திரிகையை வெளியிட்டு, அதற்கு சட்டரீதியிலான அங்கிகாரத்தை வழங்குமாறு சுகாதார அமைச்சுக்கு கடிதம் மூலம் நாங்கள் அறிவித்திருக்கின்றோம். அதனால் மக்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு இதுதொடர்பாக ஜனாதிபதி கவனம் செலுத்தி, வர்த்தமானிப்படுத்தும் நடவடிக்கையைதுரிதப்படுத்தவேண்டும். அத்துடன் தற்போது பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இடம்பெற்றுவருகின்றன. ஆனால், எந்தவொரு அரசியல் கட்சியும் தமது கொள்கை பிரகடனத்தை இதுவரை வெளியிடவில்லை. தமது எதிர்த்தரப்பு அரசியல் கட்சிகளின் கடந்தகால செயற்பாடுகள் விமர்சிக்கப்படுகின்றதே தவிர, மக்களுக்கான வேலைத்திட்டங்களை முன்வைத்து பேசுவதை பிரசார மேடைகளில் காணமுடியவில்லை -என்றார். (ம)





4

X

சபையில்
சரவணபவன்

எமது பத்திரிகையான உதயன் ஒரு நடுநிலையான ஊடகமாக, ஊடக தர்மத்தில் இருந்து நழுவாமலே செயற்பட்டு வந்தது, வருகின்றது. நாங்கள் யாருக்கும் ஆதரவாகவோ எதிராகவோ செயற்படுவதில்லை. அதன் காரணமாகவே எமது நிறுவனம் 40க்கும் மேற்பட்ட வன்முறைத் தாக்குதல்களை எதிர்கொள்ள நேரிட்டது. பல பணியாளர்கள் கொல்லப்பட்டனர். இன்னும் சிலர் கொலைமுயற்சியில் சிக்கிப் படுகாயமடைந்தனர். இயந்திரங்கள் எரியூட்டப்பட்டு பல லட்சம் ரூபா நஷ்டத்தைச் சந்தித்தோம். ஆயினும் நாம் நேர்மையுடனும் துணிவுடனும் எமது பணியை மேற்கொண்டோம்.

விடுதலைப் புலிகள் ஒரு இலட்சியத்துடனேயே போரிட்டனர். காலம்காலமாக தமிழ் மக்கள் மீது தொடர்ந்துவந்த ஒடுக்குமுறை நடவடிக்கைகளும் பேச்சுவார்த்தை மூலம் ஏமாற்றப்படும் நடவடிக்கைகளும் அவர்களை தமிழின விடிவுக்காக ஆயுதமேந்துவதை விட வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வரவைத்தன. எனவே உலகில் உள்ள ஏனைய ஒடுக்கப்படும் இனங்களைப் போலவே தமிழர்களும் புலிகளின் தலைமையின் கீழ் ஆயுதப் போராட்டத்தில் இறங்கினர். புலிகளின் போராட்டத்துக்கு ஒரு இலட்சியம் இருந்தது. அந்தப் போராட்டத்தில் நேர்மை இருந்தது. சத்தியம் இருந்தது. அதனாலேயே அவர்கள் தொடர்பான விடயங்களை நாம் எமது ஊடகத்தில் நேர்மையுடனும் துணிச்சலு டனும் பிரசுரித்தோம். உண்மைகளை வெளிப்படுத்துவது நடுநிலைமை தவறுதல் என்று எவராவது கூறினால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஜூலை 2020

4

1 2 3 4 5 6 7 8 9 10

இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# ஈழத்து இலக்கியவாதி பத்மா சோமகாந்தன் நேற்றுக் காலமானார்



யாழ்ப்பாணம், ஜூலை 16
ஈழத்து இலக்கியப் பரப்பில் தனக்கென தனியடையாளத்தைப் பெற்ற மூத்த எழுத்தாளர் பத்மா சோமகாந்தன் நேற்று காலமானார்.
பெண்கள் உரிமை தொடர்பில் இவர் தொடர்ச்சியாக எழுதியும் பேசியும் வந்துள்ளார். ஆக்கபூர்வமான கருத்துகளை முன்வைத்து வந்துள்ளார்.
யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த இவர் ஈழத்து பத்திரிகைகளில் தனது ஆக்கங்களை எழுதி வந்துள்ளார். அவரது இழப்பு ஈழத்து இலக்கியத் துறைக்கு ஓர் இழப்பாகும். (து)

# உடைமையில் போதைப்பொருள் கிளிநொச்சியில் மூவர் கைது!

கிளிநொச்சி, ஜூலை 16
போதைப் பொருள்களான ஹெரோய்ன் மற்றும் கஞ்சா என்பவற்றை உடைமையில் வைத்திருந்த மூவர் கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கிளிநொச்சி 55ஆம் கட்டை பகுதியில் வைத்து 7 கிலோ 277 கிராம் கஞ்சாவினை உடமையில் வைத்திருந்த சந்தேக நபர் கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். அதேபோல் பரந்தன் சந்தி பகுதியில் 310 மில்லிகிராம் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டனர். (ம-6)

# ஜனநாயகத்தை புதைத்தது சம்பந்தனும் மாவையுமே

## குற்றஞ்சாட்டுகின்றார் ஆனந்தசங்கரி

யாழ்ப்பாணம், ஜூலை 16
2004 ஆம் ஆண்டு ஜனநாயகத்தை குழிதோண்டி புதைத்தது சம்பந்தனும், மாவை சேனாதிராசாவும் தான் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி குற்றம் சுமத்தியுள்ளார்.
யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதைத் தெரிவித்தார்.
"75 கள்ள வாக்குகள் போட்டேன்" என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்த கருத்து தொடர்பில் செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர். அதற்குப் பதிலளிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
சிறிதரனின் படத்தை வைத்து அவருக்கு நான் பூப்போட்டு கும்பிடலாம் என்று இருக்கின்றேன். கொஞ்சம் சொல்லிவிட்டார் மிகுதியையும் சொன்னால் நல்லம். சம்பந்தர் கள்ள வாக்கு போடவில்லையா? மாவை சேனாதிராசா போடவில்லையா? அனைத்து விடயங்களையும் சிறிதரன் சொன்னால் நான் போட்டி இல்லாமல் அவரை எம்.பி.ஆக்குவேன்.
அந்த காலத்தில் சிறிதரன் சின்ன பெடியன். பேசாமல் இருந்துவிட்டு இப்போது புத்தி வந்து விசயத்தை சொல்கிறார். மீதமுள்ள விடயத்தையும் சொன்னால் என் மனது சந்தோசமடையும்.
2004 ஆம் ஆண்டு தடம்புரண்ட ஜனநாயகம் இன்னும் திரும்பி வரவில்லை.
அந்த ஜனநாயகத்தை மீட்டெடுத்த பெருமை சிறிதரனைச் சாரும். நான் அவருக்குச் சிலை வைப்பேன் - என்றார். (த-20)


சாரதி தேவை
யாழ்நகரில் இயங்கும் பொருள்கள் விநியோகம் செய்யும் ஸ்தாபனத்திற்கு நற்பழக்கம் உள்ள சாரதி தேவை.
077 445 8582
(cs 33039)(13.17)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
DHL
EXCELLENCE. SIMPLY DELIVERED.
சகல நாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை எம் ஊடாக நடைபெறுகின்றன. மிக குறைந்த கட்டணத்தில் வடமாகாணத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்
திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd
321, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 0777554528, 0212227835

A/L PHYSICS CLASSES
EEE
FOR 2021 BATCH VIA zoom
ENTIRELY ENGLISH MEDIUM
Unit:Oscillation and Waves
Full Theory Revision with Comprehensive Past Papers (Translated from 1979-2019) and Model Papers
Commences from 17.07.2020 Friday 8.15pm-10.15pm
076 54 630 54
To Get Zoom ID, Password and Relevant Tutorials
A.Jenukananth BSc.Eng(Hons)
University of Moratuwa,
Teacher, Hindu Ladies' College, Colombo.

## மரண அறிவித்தல்

தோற்றம்
17 . 04 . 1945



மறைவு
15 . 07 . 2020

## கணபதி வீரசிங்கம்

தொட்டிலடி சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி வீரசிங்கம் நேற்று (15.07.2020) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற கணபதி - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், பவளராணியின் அன்புக் கணவரும், குகநேசன் (H.R.D.A - பிரதேச செயலகம் - உடுவில்), ஜெயந்திரன் (நில அளவையாளர் Maga Engineering (Pvt) Ltd- கிளிநொச்சி), பிரதீபா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்னம்மா, மகேஸ்வரி (கனடா), பரமானந்தன் (கனடா), ஞானேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மைதிலி ( D.O - பிரதேச செயலகம், துணுக்காய்), நிரோஜா, ரவிச்சந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், றியானி (கனடா), றியேஸ் (கனடா), மிதுசன், டனுஜா, டேனுஷா கவினாஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2020) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 9.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொட்டிலடி,
சங்கானை.

தகவல்:
குடும்பத்தினர்.

077 303 9580, 077 391 7707
(CS 33036)(13.17)




தீவுகளுடன் இரண்டாவது டெஸ்ட்

# பதிலடி கொடுக்குமா இங்கிலாந்து அணி?

லண்டன், ஜூலை 16
மேற்கிந்தியத் தீவுகள் இங்கிலாந்து இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் இன்று இங்கிலாந்தின் மன்செஸ்டரில் இன்று ஆரம்பமாகின்றது.
முதலாவது ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெற்ற காரணத்தால் இன்றைய இரண்டாவது ஆட்டம் தொடர்பில் இரு அணிகள் மீதும் எதிர்பார்ப்பு நிலவுகின்றது. (ம)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.